


இராஜாஜி

இன்டர் நாஷனல் பப்ளிஷிங் கம்பெனி
சென்னை

இராஜாஜி

வாழ்க்கை வரலாறு

ஆசிரியர் :

மு. பா. ஸ்ரீநிவாஸன்

உதவி ஆசிரியர், "சுதேசமித்திரன்"



வெளியிடுவோர் :

இன்டர்நாஷனல் பப்ளிஷிங் கம்பெனி,

நுங்கம்பாக்கம், சென்னை 6.

விலை அணா 14.

முதற் பதிப்பு—செப்டம்பர் 1949.

PRINTED AT
THE MADRAS PUBLISHING HOUSE (1945) LTD., MADRAS 2

அரசவைக் கவிஞரின் அணிந்துரை

ஸ்ரீ சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரியாரை நான் முதன்முதலாக சந்திக்கும்படியான பாக்கியம் சுமார் 32 வருஷங்களுக்கு முன்பு ஏற்பட்டது. அக் காலம் முதல் இன்றுவரை எங்களிடையே விவரிக்க முடியாத பிரியம் ஒன்று வளர்ந்து வருகிறது. அந்த முறையில் இராஜாஜி அவர்களுடைய குடும்ப வாழ்க்கையையும் பொதுநல சேவைகளையும் நான் நன்ருக அறிந்தவன். அரிய சேவையும், இணையற்ற ஆற்றலும் நிறைந்த இராஜாஜி அவர்கள் விலைமதிப்பிட முடியாத நம்முடைய பொக்கிஷம். இந்த நாட்டில் மட்டும் அல்ல, உலகில் உள்ள பல சிறந்த ராஜதந்திரிகளில் அன்னுர் ஒருவர்.

அவரைப்பற்றி எனக்குள்ள பல எண்ணங்களையும் கருத்துக்களையும் ஸ்ரீ மு. பா. ஸ்ரீநிவாஸன் அவர்கள் "இராஜாஜி" என்ற இந்தப் புத்தகத்தில் வெகு அழகாக எழுதி, விளக்கி இருக்கிருர். நல்ல நடையில், படிப்பதற்குமிகவும் இனிமையாகஅமைந்திருக்கிறது இந்நூல். தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் இதைப் படித்துப் பயன் பெறவேண்டுமென்பதே என் ஆவல். பள்ளிக்கூடங்களில் பாடமாக வைக்க இந்தப் புத்தகம் மிகவும் தகுதி வாய்ந்தது.

இராஜாஜியைப்பற்றி இவ்வளவு நல்ல ஒரு எழுத்து ஓவியத்தை வரைந்த ஸ்ரீ மு. பா. ஸ்ரீநிவாஸன் அவர்களை மனமார வாழ்த்துகிறேன்.

நாமக்கல்,
5—11—'49.

வெ. இராமலிங்கன்

முன்னுரை

தமிழன்னை ஈன்றெடுத்த தவப்புதல்வருள் ஒருவர் இராஜாஜி. தமது உண்மை உழைப்பாலும், சேவையின் உயர்விஞலும் சுதந்திர இந்தியாவில் முதல் கவர்னர் ஜெனரல் பதவி வகித்துவரும் தமிழர். காந்திஜியின் பிரதமசீடர்; அவரது கருத்துக்களுக்கு வியாக்கியானம் கூறவல்ல ஆற்றல் படைத்தவரெனப் புகழ் வாய்ந்தவர். நாட்டினரின் நன்மதிப்புக்கு உரியவர்; எனது குருநாதராக விளங்குபவர்; அன்னரது வாழ்க்கை வரலாறு மக்களுக்குச் சிறந்த வழிகாட்டியாகும். ஆதலின், அவரது பிறப்பு, வளர்ப்பு முதல் வாழ்க்கை நிகழ்ச்சிகள் பலவற்றையும் சேர்த்துத் தொகுத்து வெளியிடுதல் தமிழன்னைக்கும், நாட்டிற்கும் செய்யும் ஒரு நற்பணியாகும் எனக் கருதி இச் சிறு நூலை எழுதலானேன். மாணவர்கள் வாசித்துப் பயன்பெற வேண்டுமென்ற நோக்குடன் அதற்கேற்ற வகையில் அமைத்துள்ளேன். "பெரியாரைப் போற்றி வாழ்" என்பது ஆன்றோர் வாக்கல்லவா? கல்வியாளர்கள் ஆதரவு காட்டி, ஊக்குவிப்பரென்று நம்புகிறேன். இந்த நம்பிக்கை ஈடேற முருகப் பெருமான் அருள் புரிவாஞக!

இங்ஙனம்,

மு. பா. ஸ்ரீநிவாஸன்.

உள்ளுறை

இராஜாஜி

1. மரபு

“ அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான் ” —குறள்.

மார்கழி மாதம் ; பனியும் குளிரும் மக்களை வீடுகளினின்றும் வெளியேறா வண்ணம் தடுத்தன. ஒரு நாள் காலை கிழக்கு வெளுக்கும் நேரம் ; உலகைக் கவ்வியிருந்த இருள் சிறிது சிறிதாக விலகிக்கொண்டிருந்தது. காஞ்சீபுரத்துக்கு அருகே ஒரு கிராமம் ; கிராமத்தை யடுத்தது ஒரு நதி ; வேகவதி என்று பெயர் ; அதில் வெள்ளம் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்தது. அவ்வேளையில் ஒரு தூய வைணவர் தமது இல்லத்தினின்றும் வெளிப் போந்தார். அப்பெரியவர் அந்நேரத்தில் நதியில் நீராடுவது வழக்கம். இருளும் குளிரும் அவருக்குத் துன்பம் அளிப்பதில்லை. தமது ஆடைகளைத் துவைத்தபின், பன்முறை நீராடுவார். இவைகளைச் செய்யும்பொழுது அவருடைய வாய்மட்டும் ‘ ஹரி ஹரி ’ ‘ ராம் ராம் ’ என்று இறைவனுடைய திருநாமங்களை உச்சரித்துக்கொண்டேயிருக்கும். இவ்வாறே அன்றும் தமது காலைக் கடன்களைச் செய்வதில் அவர் ஈடுபட்டிருந்தார்.

அவர் அவற்றைச் செவ்வனே செய்து முடித்துக் கரையேறும் சமயம் ; தற்செயலாக ஆற்றின் மேற்புறம் நோக்கினர் ; வெள்ளத்தில் ஓர் உருவம் மிதந்துவரக் கண்டார். மீண்டும் உற்றுநோக்கி அது

ஒரு சவம் என்று தேர்ந்தார். தூய வைணவராத லால் சவத்தைக் கண்டதும் அருவருப்புக் கொண் டார்; நீர்த்துறையை அச் சவம் அணுகுமுன் அவ் விடத்தைவிட்டு விலகவேண்டும் என்று நினைத்தார். ஆனால் அவ்வாறு செய்ய அவர் மனம் ஒப்பவில்லை. "அநாதையான அச் சவத்திற்கு ஈமக் கடன்கள் செய்யவேண்டும்; அது தண்ணீரில் மிதப்பதால் மக் களுக்கு நேரிடக்கூடிய அபாயங்கள் பல உண்டு" என்னும் எண்ணங்கள் அப்பெரியாருக்கு உண்டா யின. உடனே வெறுப்பு நீங்கினார்; சரேலென நீரில் இறங்கினார்; அச்சவத்தை இழுத்துக் கரை யிற் சேர்த்தார். அதைத் தகனம் செய்வதற்குத் தேவையான காரியங்களைத் தாமே நடத்தலானார்.

இதற்குள் 'பொழுது புலர்ந்தது; புன்மை இருட் கணம் யாவும் போயின; செழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி, ஓங்கி வளர்ந்தது அறிவெனும் இரவி'. வயற்புறம் செல்லும் கிராம மக்களிற் சிலர் நதியின் அருகே வந்தனர். பெரியவர் அவர்களை உதவிக்கு அழைத்தார். அவர்கள் பிணத்தைப் பார்த்துத் திகைத்தனர்; பிரமித்தனர்; அப்பெரியார் விருப்பத்தை உணர்ந்தனர். 'இது யாரோ ஒரு சண் டாளனது சவம்; இதற்கு ஈமக்கடன்களைச் செய்வது தகாது' என்று சொல்லி அப்பால் சென்றனர்.

இச்செய்தி அந்தணர் இல்லங்களில் காட்டுத் தீ போல் பரவிற்று. பல அந்தணர்க்கு அப்பெரி யாரிடம் ஏற்கனவே அதிருப்தி; சாதி, குலம், தீட்டு, ஆசாரம் ஒன்றையும் அவர் கவனிப்பதில்லை. எக் குடிப் பிறப்பினும் யாவரேயாயினும் சம நோக்குடன்

பார்ப்பது அவருடைய மனப் பண்பு. ஆகவே, அவர் மீது ஏற்கனவே புகைந்து கொண்டிருந்த கோபம், இச்செய்தி கேட்டதும் எரியலாயிற்று. இரு வேதியர் ஆற்றங்கரைக்கு ஓடோடியும் வந்தனர். "இந்த அநாதைப் பிணத்தை யெடுத்துத் தகனம் நடத்துதல் தகாது; சமூகக் கட்டுப்பாட்டினை மீறி நீர் அவ்வாறு செய்தால், உம்மைச் சாதியைவிட்டு விலக்கி விடுவோம்" என்று ஆர்ப்பரித்தனர்.

பெரியவர் திகைப்படைந்தார்; எதிர்ப்பை அவர் எதிர்பார்க்கவில்லை; சற்றே யோசனை செய்தார். ஈமக்கடன்களைச் செய்து முடிப்பதே தமது கடமை என்ற முடிவுக்கு வந்தார். எச்சரிக்கையைப் பொருட்படுத்தவில்லை; தாமே சிதையை அடுக்கினர்; உயிரற்ற உடலத்தை அதில் கிடத்தினர்; தீ மூட்டினர்; மக்களின் மதியீனத்தைக் கண்டு மனம் புழுங்கினர்; மறுமுறை நீராடி மனை சேர்ந்தார். தமது செய்கைக்கு "அநாதப் பிரேத ஸம்ஸ்கார அஸ்வமேத பலன் லபேத்" என்னும் சுலோகத்தையே அத்தாட்சியாக அவர் அனைவருக்கும் எடுத்துக் காட்டினர்.

"நல்லான் சக்கரவர்த்தி"

வேகவதி நதிக்கரையில் நடந்த சம்பவம்பற்றிய செய்தி ஊர் அந்தணர் விடுதிகளில் பரவிற்று. ஊர்க் கோயில் மண்டபத்தில் அந்தணர் மகாசபை கூடியது. "பெரியவர் தன்னலங்கருதாத் தகைமையாளர்; ஆசார சீலர்; வேத வேதாந்தங்களைக் கரை கண்டவர்; நல்லொழுக்கம் நிரம்பியவர்; ஆயினும் சமூகத்தில் யாவரும் கைக்கொள்ளும் ஆசார அனுஷ்டா

னங்களைப் பேணுதவர். இதனால் சமூக வாழ்க்கை நசித்துப் போகும்; நமது எச்சரிக்கையை அவமதித்த அவரைச் சாதிப் பிரஷ்டம் செய்ய வேண்டியதே முறை" என்று அந்தணர் குழுவினர் முடிவு செய்த னர். இம் முடிவைப் பெரியவர் பொருட்படுத்த வில்லை; தம் குடும்பத்துடன் தனித்தே வாழ்ந்தார்.

நாட்கள் பல சென்றன. ஒரு நாள் அவ்வந்த ணர் பெருமானின் தந்தையாருடைய திதி; தகப்ப னரின் திதியை மிகுந்த பக்தி சிரத்தையுடன் செய்வது அவருடைய வழக்கம். ஆனால் திதியைச் செய்து வைக்கவும், அதிதி பூஜை ஏற்கவும் அந்தணர்கள் வேண்டுமே. அவருடைய அழைப்பை அந்தணர் ஒருவரும் ஏற்கவில்லை; அவர் இல்லத்திற்கு வர மறுத்துவிட்டனர். ஆனால் அந்தணர் பெருமான் மனம் சோர்ந்து வாளாவிருக்கவில்லை; அடியார் களைக் காப்பவன் ஆண்டவனே; அவனன்றி ஓரணு வும் அசையாதன்றோ? திதிச் சடங்குகளைச் செவ் வனே செய்து முடிக்கத் தேவையான பொருள்களை விரைவில் சேகரித்தார். ஆண்டவனுடைய திரு நாமங்களை உச்சரித்துக்கொண்டு திதிச் சடங்குகளைச் செய்ய அமர்ந்தார்.

கடவுளை நம்பினோர் கைவிடப்படுவரோ? குறித்த வேளையில் ஒளி வீசும் முகத்துடன் கூடிய வைணவர் ஒருவர் அவரை நாடி வந்தார். அவரே எல்லாச் சடங்குகளையும் செவ்வனே செய்து வைத் தார். எல்லாம் ஒழுங்காக நடந்தேறின. வந்த அந் தணர் விடைபெற்றுச் செல்லும் பொழுது திருமா லின் திவ்விய ரூபம் பெரியவர்முன் தோன்றியது.

பெரியவர் இல்லத்தில் அமுதுண்ண வந்த அந்தணரைக் காண அதற்குள் ஒரு கூட்டம் கூடிவிட்டது. அவ்வமயம், திருமால் அந்தணர்களைப் பார்த்து "இவன் ஊருக்குப் பொல்லான்; எனக்கு நல்லான்" என்று அருளி மறைந்தார். பெரியவரின் உண்மை மதிப்பை உணர்ந்த யாவரும் அவரைப் போற்றி வணங்கினர். அன்று முதல் அப் பெரியார் பரம்பரைக்கு "**நல்லான்**" என்ற பெயர் வழங்கலாயிற்று.



இராஜாஜியின் தந்தையாராகிய
நல்லான் சக்கரவர்த்தி ஐயங்கார்

இவ்வந்தணர் பெருமானின் திருநாமம் **வரதாசாரியார்** என்பது; அவருடைய பரம்பரையில் வந்தவர்களில் பலர் வெவ்வேறு இடங்களில் பரவினர். வைணவ சமூகத்தில் இம்மரபு இன்றும் மிகவும் உயர்ந்ததாகக் கருதப்படுகிறது; மற்றவர்க்கு ஞானோபதேசம் செய்யத் தகுந்த உன்னத நிலையை வகித்து வருகிறது; பக்தி சிரத்தையும், பாண்டித்தியமும் மிகுந்திருந்ததால் **ஸ்ரீ ராமாநுஜரின்** சிஷ்யரான ஸ்ரீ வரதாசாரியாருக்கு "**சக்கரவர்த்தி**" என்ற பட்

டம் ஏற்கனவே சூட்டப்பட்டிருந்தது; மேற்கூறிய இரு பெயர்களையும் சேர்த்து அன்னாருக்கு "**நல்லான் சக்கரவர்த்தி**" என்னும் பட்டப்பெயர் வழங்கலாயிற்று.

இந்த வம்ச வழியில் வந்தவரே நமது **சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்.**

---

2. பிறப்பும் வளர்ப்பும்

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று" —குறள்.

வடக்கே இமயமும், தெற்கே குமரியும், மேற்கே அரபிக் கடலும், கிழக்கே வங்கக் கடலும் பாரத நாட்டின் எல்லைகள்; இந்த எல்லைக்குள்ளே ஏறக்குறைய ஏழு லட்சம் கிராமங்கள் அடங்கியுள்ளன. அவற்றில் ஒரு கிராமம் இந்தியாவின் இணையற்ற புதல்வர் ஒருவரைப் பெற்றெடுத்துள்ளது. ஈடில்லாத பெருமை வாய்ந்த ஒரு புத்திரனை நாட்டுக்கு அளித்த-தன் பலனாக அந்தக் கிராமம் இன்று தலை நிமிர்ந்து, பெரும்பேறு பெற்று விளங்குகிறது.

தென்னாட்டின் திலகம்போல் விளங்காநிற்பது **சேலம்** ஜில்லா; சேலம் அதன் தலைநகரம். அந்நகருக்கு வடக்கே சுமார் நூறு மைல்களுக்கு அப்பால் ***ஓசூர்** என்றொரு சிறு நகரம் இருக்கின்றது. ஓசூருக்கு அருகில் சுமார் ஐந்துமைல் தூரத்தில் தென்பெண்ணையாறு ஓடுகிறது; அவ்வாற்றின் கரையில்

* ஹொஸ்ஸூர் என்றும் வழங்கும்.

தொரப்பள்ளி என்றொரு சிறிய கிராமம் உள்ளது. தன்னலம் விரும்பாத தனிப்பெருந் தகைமை வாய்ந்த ஓர் உன்னத லட்சிய புருஷனைப் பாரத நாட்டுக்கு அளித்த பெருமை இக் கிராமத்திற்கே உரியதாகும்.

தொரப்பள்ளியில் பல்வேறு வகுப்பினர் இன்றும் இனிதே வாழ்ந்து வருகின்றனர். அங்கேயுள்ள அக்கிரகாரத்தில் வைணவ அந்தணர் பலர் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் தாய்மொழி தமிழ்; ஆனால் தெலுங்கும் கன்னடமும் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இற்றைக்குச் சற்றேறக்குறைய நூறு ஆண்டுகட்குமுன் இந்தக் கிராமத்தில் "நல்லான் சக்கரவர்த்தி" பரம்பரையில் உதித்த ஒரு வைணவப் பெரியார் வாழ்ந்து வந்தார். அவர் பெயர் **சக்கரவர்த்தி ஐயங்கார்** என்பது. அவர் ஒசூரின் கிராம முன்சீப் பாகத் தொழிலாற்றி வந்தார்; அவர் மிகுந்த செல்வாக்குள்ளவர்; நடுத்தரமான செல்வ நிலை படைத்தவர்; கிராம மக்கள் அவரைத் தம்மிற் சிறந்தவராக மதித்து வந்தனர்.

சக்கரவர்த்தி ஐயங்கார் ஓர் உயர்குடித் தோன்றல்; தமது பரம்பரைப் பண்பைத் தழுவி வடமொழியில் வேதாகம, புராண, இதிகாச நூல்களை நன்கு ஆராய்ந்திருந்தார்; சிறந்த அறிஞர்; வடமொழி நூல்களின் சம்பந்தமாக எழும் ஐயப்பாடுகளைத் தெளிவாக்கிக் கொள்ளத் தம்மை நாடி வருபவர்க்குத் தமது ஆழ்ந்த ஆராய்ச்சியின் பயனையளிக்கும் ஆற்றல் உடையவர். சென்னைமாநகரிலுள்ள இராஜதானிக் கல்லூரியில், அக்காலத்தில் **ஹப்பர்ட்** என்ற

ஒரு ஜெர்மானிய அறிஞர் வடமொழிப் புலவராகத் தொண்டாற்றி வந்தார். அவர் அடிக்கடி சக்கர வர்த்தி ஐயங்காரிடம் வந்து தமது ஐயங்களைப் போக்கிக் கொண்டு போவது வழக்கமாம். சென்னையின் கவர்னராயிருந்த **லார்டு கன்னிமாரா** என்ற துரை மகனார் ஒரு சமயம் ஒசூருக்கு விஜயம் செய்தார்; அங்கே சக்கரவர்த்தி ஐயங்காருடைய புலமையைப் பற்றிச் செவியுற்று, அவரை வரவழைத்து, அவருடன் உரையாடி, அவர் புலமையைப் பெரிதும் பாராட்டினார் என்று கூறப்படுகிறது. ஐயங்காரிடம் ஒசூர் மக்களுக்கு விசேஷ மதிப்பும் பேரன்பும் உண்டு.

சக்கரவர்த்தி ஐயங்காருக்கு உரிய பருவத்தில் திருமணம் நடந்தேறியது. அவருடைய வாழ்க்கையைச் சிறப்பிக்க வந்த தரும பத்தினியின் பெயர் **சிங்காரம்மாள்** என்பது. சிங்காரம்மாளிடம் சகல நற்குணங்களும் பொருந்தியிருந்தன. குடும்ப வாழ்க்கையை அடிசிற்கினியாளாய் அன்புடையாளாய் நன்கு நடத்திவந்தார். இவ்வகைப் பெருமை வாய்ந்த தம்பதிகளுக்கு **நரசிம்மன், சீனிவாசன்** என்ற இரு புதல்வர்கள் பிறந்தனர். வெகுதானிய ஆண்டு, கார்த்திகைத் திங்களில் 25-ஆம் நாள் திங்கட்கிழமை (9-12-1878) இரவு ரோகிணி நட்சத்திரம் கூடிய நல் வேளையில் மூன்றாவது ஆண் மகவு தோன்றிற்று. அதுவே தற்காலத்தில் நாற்பது கோடியினரின் நன் மதிப்புக்கு உரிய **இராஜாஜியாகும்.**

சக்கரவர்த்தி ஐயங்கார் ஜோதிடத்தில் வல்லவர்; குழந்தை பிறந்த நேரத்தைக் குறித்துக் கொண்டு

ஜாதகம் கணித்தார். தம் அருந்தவ மைந்தன் இராமனும் கண்ணனும், சங்கரரும் இராமானுஜரும் உதித்த வேளையில் உதித்ததைக் கண்டு களித்தார். பெற்றோர் தீர்க்காலோசனை செய்து குழந்தைக்கு **இராஜகோபாலன்** என்று பெயரிட்டனர். எத்தகைய பொருத்தமான பெயர்! ஜாதக ஆராய்ச்சியின்படி குடிசை வாழ்வையும் இராஜ போகத்தையும் சரிசமமாகப் பாவிக்கக் கூடிய தன்மை வாய்ந்த குழந்தைக்கு 'இராஜகோபாலன்' எனப் பெயரிட்டது மிகவும் பொருத்தமன்றோ!

குழந்தை இராஜகோபாலனுக்கு வெல்லம் தின்பதில் வெகு பிரியம்! கடைகளில் விற்கும் வெல்லம் சுத்தமாக இருப்பதில்லை. ஆயினும் அதையும் வாங்கித் தின்பார். அது கண்ட தந்தையார் ஒரு கரும்புத் தோட்டத்தையே விலைக்கு வாங்கினார் தனயனுக்கென்று. அதனின்றும் நல்ல வெல்லம் தயாரித்து மைந்தனுக்கென்று வீட்டில் சேகரித்து வைத்து விடுவார். இவ்வாறு மகனுடைய ஆவலைப் பூர்த்தி செய்தார் தந்தை!

இராஜகோபாலனுக்கு உயிர்ப் பிராணிகளிடத்தில் மிகுந்த அன்பு உண்டு. நாய், பூனை, மாடு, குதிரை முதலிய பிராணிகளிடம் அவர் மிகுந்த பிரியம் கொள்வார். இவ்வன்பே பின்னர் நாட்டு மக்களிடம் எல்லையில்லா அன்பு காட்டச் செய்து, நாட்டுப் பணி செய்யத் தூண்டுகோலாயிருந்தது என்று சொல்லுவது மிகையாகாது.

3. கல்வியும் திருமணமும்

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" —குறள்.

பெற்ரேருடைய அன்புக்கும், ஆசைக்கும் உரியவராக வளர்ந்து வந்தார் நம் தவமணி. உரிய வயதில் குழந்தையைக் கிராமப் பாடசாலைக்கு அனுப்பினர் தந்தையார். அவர் ஓசூரில் உள்ள போர்டு பாடசாலையில் ஆருவது வயதில் சேர்க்கப் பட்டார். பள்ளி நாட்களில் அவர் மற்றச் சிறுவரைப் போன்றே விளையாட்டில் பெரிதும் ஆர்வமுடையவ ராக இருந்தார்; சிலம்ப விளையாட்டிலும் தேர்ச்சி பெற்ருர். பாடங்களில் தமக்கு உண்டாகும் ஐயங் களைத் தகப்பனரிடம் கேட்டு அறிந்து கொள்வார். தகப்பனரும் மைந்தனுடைய கல்வியில் மிகுந்த ஆர்வம் காட்டினர்.




இராஜாஜி இளமையில் படித்த
போர்டு பாடசாலை

தகப்பனர் தமக்குக் கொடுக்கும் காசுகளை இராஜகோபாலன் வீண் செலவு செய்வதில்லை; தமக்குத் தேவையான நூல்களை வாங்கிப் படிப்பதில் செலவிடுவார். எப்பொழுதும் அவர் ஏதாயினும் ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண்டே இருப்பார். சில ஆண்டுகள் கழித்துப் படிப்பின் நிமித்தம் பெங்க

ஞருக்குச் சென்றார்; அங்குள்ள லண்டன் மிஷன் பாடசாலையில் சேர்ந்து படித்தார். அங்கே கல்வியில் மிகுந்த ஆர்வம் கொண்டார். ஒரு புத்தகத்தை ஒரு முறை படித்தால், அதிலுள்ள பொருள்கள் அவர் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்துவிடும். எந்தப் பொருளையும் கூர்மையாகக் கவனித்து, விரைவில் அறிந்துகொள்ளக்கூடிய ஆற்றல் அவரிடம் பெருகி வந்தது. பல நூல்களைப் படித்து வந்ததால் அவருடைய அறிவு விளக்கமடைந்து வந்தது.

அவர் லண்டன் மிஷன் பாடசாலையில் படித்துத் தேர்ந்த பின்னர், சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பெங்களூர் சென்ட்ரல் கலாசாலையில் சேர்ந்தார். அக்கலாசாலையில் அக்காலத்தில் மாணவர்க்குச் சம்பளம் இல்லை. அவருக்கு அப்பொழுது 'தமிழ்' என்றால் கசப்பாக இருந்ததாம். பி. ஏ. வகுப்பில் அறிவியற் கலையைத் தனிப்பாடமாக எடுத்துப் பயின்றார். கூக் என்ற அறிவியல் கலை ஆசிரியரும், டெய்ட் என்ற ஆங்கில மொழிப்புலவரும் அவருக்கு மிகுந்த ஆதரவு அளித்தனர். இவருடைய மதிநுட்பமும், நன்னடக்கையும் அப்பெரியார்களைப் பெரிதும் கவர்ந்தன. வில்லியம் ஷேக்ஸ்பியர் என்ற ஆங்கில நாடக ஆசிரியர் இயற்றியுள்ள நாடகங்களையும், ஸர் வால்டர் ஸ்காட் என்ற நூலாசிரியர் எழுதியுள்ள நவீனங்களையும் ஆவலுடன் இராஜகோபாலன் படிப்பார். தமது பதினெட்டாம் வயதில் பி. ஏ. பரீட்சையில் அறிவியற் கலையிலும், ஆங்கில மொழியிலும் முதல்வராகத் தேறிப் பரிசும் பட்டமும் பெற்றார்.

பெங்களூரில் சென்ட்ரல் கல்லூரியில் படித்து வந்த காலையில், இராஜகோபாலனுக்கு வயது பதினாறு நிரம்பியது. மைந்தனுக்கு மணமுடித்து வைக்கத் தந்தை விரும்பினர். இல்லறத்தை ஏற்று அதை நன்கு நடத்தக் கூடிய ஒரு பெண்ணைத் தேடினர் தந்தை; சித்தூரைச் சேர்ந்த அலர்மேலு மங்கம்மாள் என்பவரைத் தேர்ந்தெடுத்தார். இராஜகோபாலனுக்கும் அலர்மேலு மங்கம்மாளுக்கும் திருமணம் சிறப்பாக நடந்தேறியது.



இராஜாஜி கல்வி பயின்ற
பெங்களூர் சென்ட்ரல் கல்லூரி

மைந்தனுடைய வாக்கு வன்மையையும், விவாதத் திறமையையும் அறிந்த தந்தை, அவரை வக்கீல் படிப்புக்கு அனுப்புதற்கேற்ற இடம் சென்னையே என்று கருதினர்; சென்னைக்குச் சென்று சட்டக் கல்லூரியில் சேர்த்தார். தற்காலம் சென்னைக் கடற்கரைக்கருகில் உள்ள ‘ஐஸ் ஹவுஸ்’ என்ற மாளிகை அப்பொழுது மாணவர் விடுதியாக இருந்துவந்தது; அங்கேதான் இராஜகோபாலன் தங்கியிருந்தார்.

விவேகானந்தர் தரிசனம்

இந்தியாவில் இளைஞரிடையே ஒரு கொந்தளிப்பு உண்டாகியிருந்த சமயம் அது. வங்காளத்தில் தோன்றிய **ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர்** என்ற மகான் உண்மைத் தத்துவத்தைப் போதித்து வந்தார். அவரைப் பின்பற்றிப் பல இளைஞர்கள் துறவற வாழ்க்கையை மேற்கொண்டு சமயப் பணியும், சமூகத் தொண்டும் செய்ய முற்பட்டனர். அவர்களில் முதன்மையானவர் **ஸ்ரீ விவேகானந்தர்.** சுவாமி விவேகானந்தர் நாட்டின் பல பகுதிகட்குச் சென்று, இந்தியாவின் ஆத்மிகப் பெருமையை மக்களுக்கு எடுத்துச் சொல்லி வந்தார்.

மாணவர் விடுதியில் இராஜகோபாலன் படித்து வந்தகாலம், விவேகானந்த அடிகள் சென்னையை அடைந்தார்; அங்கே மாணவர் விடுதியில்தான் தங்கியிருந்தார். மாணவர்களும் நகர மாந்தரில் பலரும் அடிகளைக் கண்டு களித்தனர். இராஜகோபாலனும் அப்பெரியாரைக் கண்டு போற்றினர். அடிகளுடைய அருள்மொழிகள் அவருடைய உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தன. அவர் இயல்பாகவே பெரியோர்களிடம் பக்திபூண்டவர்;

> "தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
> வன்மையு ளெல்லாந் தலை"

என்ற கொள்கையினர்; கடவுள் பக்தி மிகுதியும் உள்ளவர். அடிகளின் கூட்டுறவு அவருடைய ஆத்மிக வளர்ச்சிக்குச் சாதகமாயிற்று. பாரத நாட்டின் பண்டைப் பெருமையையும், அப்பொழுது அந்நியர்க்கு அடிமைப்பட்டிருந்த சிறுமை

யையும் அவர் உணர்ந்தார். அடிகளுடைய தன்னல மற்ற தொண்டும், தியாக வாழ்க்கையும் அவர் மனத்தைக் கவர்ந்தன. இந்து சமூகத்தில் காணப் பட்ட குறைபாடுகளை அவர் அடிகளின் உபதேச மொழிகள் வாயிலாக அறிந்தார்; அவருடைய மனக் கண்கள் திறந்தன. ஆயினும் உடனே சமூகப்பணி யில் இறங்க அவர் விரும்பவில்லை. கல்விப் பயிற்சி யைச் செவ்வனே முடித்த பின்னரே, நாட்டுப் பணி யாற்ற விரும்பினர். அவருடைய பிற்காலத் தியாக வாழ்க்கைக்கு ஸ்ரீ விவேகானந்தரின் சந்திப்பு அவ ருக்குக் கிட்டியது ஒரு காரணம் எனச் செப்பலாம்.

அடிகளார் சென்னையில் தங்கியிருந்த நாட்க ளில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. ஒரு நாள் சுவாமிகள் மாணவர் விடுதியிலிருந்த எல்லா அறைகளையும் சுற் றிப் பார்த்துக் கொண்டே வந்தார். அப்பொழுது இராஜகோபாலன் தங்கியிருந்த அறையினுள் புகுந் தார்; அவ்வறையின் சுவரில் கண்ணனுடைய திரு வுருவப் படம் ஒன்று மாட்டப்பட்டிருந்தது. அதை அடிகள் கவனித்தார். உடனே இராஜகோபால னைப் பார்த்து "இப் படத்தில் கண்ணனுடைய நிறம் ஏன் நீலமேக வர்ணமாக வரையப்பட்டுள் ளது?" என்று வினவினர். இராஜகோபாலன் தயக்கமின்றி உடனே பதிலிறுத்தார்; சாளரத்தின் வழியாகத் தெரிந்த நீலவானையும் நீலக் கடலையும் சுட்டிக் காட்டினர். "அவற்றின் நிறம் நீலம்; வானும் கடலும் எல்லையற்றவை; அவை போன்றே கடவுளும் எல்லையற்ற பரம்பொருள்; ஆகையால் கடவுளை நீலமேக வர்ணனைப் பாவித்தல் பெரிதும்

பொருத்தமானதே" என்றார். அவருடைய மதிநுட்பத்தை அடிகள் பெரிதும் வியந்து பாராட்டினர்; "ஒரு காலத்தில் இச் சிறுவன் பெரும் பதவியை அடைவான்" என்று அருளினர்.

'கருமமே கண்ணாயினர்' என்றபடி இராஜகோபாலன் சட்டக் கல்லூரியில் படித்து வந்த காலையில், கல்வி பயின்று பட்டம் பெறுவதைப் பெருநோக்காகக் கொண்டார். தமது இருபதாம் வயதில் சட்டப் பரீட்சைக்குச் சென்றார்; பரீட்சையில் தேர்ந்தார்; 'பி. எல்' பட்டமும் பெற்றார்.

---


4. வக்கீல் தொழில்

"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சா னவனை
யிகல்வெல்லல் யார்க்கு மரிது" —குறள்.

இராஜகோபாலன் சட்டப் பரீட்சையில் தேறிய பின்னர், தமது கிராமத்திற்குச் சென்றார்; தொழில் செய்வதற்கு ஏற்ற இடத்தைத் தேடுவதில் முனைந்தார். ஓசூர் சிறிய கிராமம்; ஆனால் தாலுக்காவின் தலைநகரம். எனினும் அங்கே தொழில் ஆரம்பிப்பதற்கு ஏற்ற சூழ்நிலை குறைவாக இருந்ததை உணர்ந்தார். சேலம் ஜில்லாவில் சேலம் ஒன்றுதான் பெரிய நகரம்; ஜில்லாவின் தலைநகர்; அங்கேதான் ஜில்லா முன்சீப் கோர்ட்டும், செஷன்ஸ் கோர்ட்டும் இருந்தன. சட்ட நிபுணராகத் தொழிலாற்றச் சேலம் தான் தகுதியான இடம் என்று முடிவு கட்டினர்; அம்முடிவுக்குத் தந்தையும் ஆதரவு அளித்தார்

ஆகவே, சேலம் நகரில் தொழில் நடத்தத் தீர்மானித்தார் திரு இராஜகோபாலாசாரியார்.

உடனே அவர் தந்தையாருடனும் மனைவியுடனும் சேலத்தில் குடியேறினர். 1900-ஆம் ஆண்டில் சேலத்தில் வழக்கறிஞராகத் தொழில் மேற்கொண்டார். அங்கே அவ்வமயம் வக்கீல் தொழிலில் மிகுந்த மேம்பாடடைந்திருந்த ஒருவரை அணுகி, அவருக்கு



சேலத்தில் சேர்மன் இராஜகோபாலாசாரி ரோடில் உள்ள இந்தப் பங்களாவில்தான் வக்கீலாயிருந்தபோது இராஜாஜி வசித்தார்.

உதவியாளராகத் தொழில் புரியத் தமது விருப்பத்தை வெளியிட்டார். அப்பெரியார் அதை ஏற்றுக் கொள்ளவில்லை; ஆகையால் திரு இராஜகோபாலாசாரியார் தனித்து நின்றே தமது தொழிலைத் தொடங்கினர்.

அக்காலத்தில் சேலத்தில் மூன்று நியாயவாதிகள் அத்தொழிலில் கீர்த்தி பெற்றிருந்தனர். ஒரு

வர் திரு கே. ஜி. வேங்கடசுப்பையர் என்பவர்; அவர் பல ஆண்டுகள் 'பப்ளிக் பிராஸிகூட'ராகத் தொழிலாற்றி வந்தவர்; மற்றொருவர் திரு பி. வி. நரசிம்மையர் என்பவர்; இப்பொழுது 'நரசிம்ம சுவாமிகள்' என்ற பெயருடன் மகிமை பொருந்திய சாயி நாதருடைய சீடராகத் தொண்டாற்றி வருபவர் இவரே மூன்றுமவர் திரு ஸி. விஜயராகவாசாரியார். திரு இராஜகோபாலாசாரியார் தமது தொழிலை ஆரம்பித்த பொழுதே திரு விஜயராகவாசாரியார் சிறந்த வழக்கறிஞராக இருந்தார். மேலும், அரசியல் துறையிலும் அவர் முன்னணியில் இருந்துவந்தார். இம்மூவரேயன்றி வேறு பல வழக்கறிஞர்களும் சேலத்தில் தொழிலாற்றி வந்தனர்.

இப்பெருங்குழுவினரிடையே மிகவிரைவில் திரு இராஜகோபாலாசாரியார் முன்னணிக்கு வந்தார்; தாமாகவே தொழிலை ஆரம்பித்துப் பிறர் உதவியின்றியே புகழ் பெற்றார். அவருடைய சட்ட அறிவும், வாதத் திறமையும் யாவரும் கண்டு வியக்கும் வண்ணம் இருந்தன. தம்மிடம் வரும் வழக்குகளிலுள்ள சிக்கல்களை எளிதில் உணர்ந்து, அவற்றிற்கேற்றபடி வாதம் செய்யும் திறன் அவரிடம் இயற்கையாகவே பொருந்தியிருந்தது. அவர் எடுத்துக் கொண்ட முதல் வழக்கில், அவரைத் தமக்கு உதவியாளராக எடுத்துக் கொள்ள விரும்பாத வழக்கறிஞரே எதிராக வாதத்தில் அமர்ந்தார். ஆயினும் அவ்வழக்கில் திரு இராஜகோபாலாசாரியாரே வெற்றியடைந்தார். இவ்வெற்றி அவர் பெரும் புகழ் அடையக் காரணமாக இருந்தது. தொழில் தொடங்

கிய சின்னாட்களிலேயே புகழ்பெற்ற 'கிரிமினல் லாயர்' என்று இவர் பெயரெடுத்தார்; வருவாய் பெருக ஆரம்பித்தது; மாதம் ஒன்றுக்குச் சுமார் இரண்டு, மூன்றுயிரம் ரூபாய் கிடைத்தது. புகழை அவர் நாடவில்லை; ஆனால் அது அவரை வந்து அடைந்தது. திரு விஜயராகவாசாரியார் ஒரு கட்சியின் சார்பில் தோன்றினால், அவருக்கு எதிராக திரு இராஜகோபாலாசாரியார் தோன்றுவது வழக்கமாகிவிட்டது. திரு விஜயராகவாசாரியார் நியாயஸ்தலத்தில் தமது வாக்கு வன்மையினாலும், ஆர்ப்பாட்டம் செய்வதனாலும் நியாயாதிபதிகளை வென்றுவிட முயல்வார்; ஆனால் திரு இராஜகோபாலாசாரியாருடைய வாதம் அடக்கமாகவும், நயமான சொற்களையுடையதாகவும், சட்ட நுணுக்கங்களை அலசிக் காட்டுவதாகவும் இருக்கும். சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்வதில் மிகுந்த திறமை இவருக்கு உண்டு. பயமின்றித் தம் கட்சியை எடுத்துச் சொல்வதில் இவர் இணையில்லாதவர்; ஒரு சமயம் ஒசூர் சப் கலெக்டராக இருந்த ஓர் ஆங்கிலேயரைச் சாட்சிக் கூண்டில் ஏற்றி, அவரைக் குறுக்கு விசாரணையில்



வக்கீல் உடுப்பில் இராஜாஜி

தினை அடித்துத் தமது கட்சிக்காரருக்கு வெற்றி கிட்டும்படி செய்தார்.

ஒரு தடவை திரு இராஜகோபாலாசாரியாருக்கு எதிர்க்கட்சியில் சென்னையிலிருந்து வந்த ஒரு பிரபல வக்கீல் தோன்றினர். அவர் நீதிபதிகளைப் புகழ்ந்து தமது கட்சிக்கு வெற்றி தேடுவது வழக்கம். அவ்வாறே அன்றும் நீதிபதியை அவர் புகழ ஆரம்பித்தார். "கடவுளே இங்கு நீதிபீடத்தில் அமர்ந்துள்ளார்" என்று அவர் துதி பாடினர். எதிர்க் கட்சியில் தோன்றிய திரு இராஜகோபாலாசாரியார் சாந்தமாக "இன்று எனக்கு ஒரு புது அனுபவம் ஏற்பட்டுள்ளது; புதுமையான எதிர்ப்பு இங்கே காண்கிறேன்; என் கைவசமுள்ள 'தஸ்தாவேஜுகள்' மூலமாகவும், சட்டங்கள் மூலமாகவும், சாட்சிகள் மூலமாகவுந்தான் நான் வாதிக்க முடியும்" என்று வெகு அடக்கமாகப் பதிலிறுத்தார். நீதிஸ்தலத்திலிருந்த யாவரும்—எதிர்க் கட்சி வக்கீல் உள்பட—நகைச் சுவை ததும்பிய அவருடைய வாதத்தைக் கேட்டுக் கொல்லென்று சிரித்தனர்.

சுட்ட சம்பவம்

திரு ஆசாரியார் சேலத்தில் தொழிலாற்றி வந்த காலத்தில் நாமக்கல்லில் திரு டி. விஜயராகவாசாரியார் என்பவர் 'டிப்டி கலெக்ட்'ராக இருந்துவந்தார். அவருடைய நீதிஸ்தலத்தில் அடிக்கடி தோன்றுவார் திரு இராஜகோபாலாசாரியார். திரு ஆசாரியாருடைய மதிநுட்பத்தையும், வாதத் திறமையையும் கண்ட நீதிபதிக்கு அவரிடம் மிகுந்த பற்று உண்

டாயிற்று. அதுவே பின்னர் இவ்விருவருக்கும் ஏற்பட்ட நட்புக்குக் காரணமாக இருந்தது.

ஒரு நாள் இரவு; நடு நிசி; அக்காலத்தில் இக்காலத்தைப்போல் பிரயாணத்திற்கு மோட்டார் வண்டிகள் இல்லை. ஒரு கொலை விசாரணை வழக்கு சம்பந்தமாக நாமக்கல்லுக்குச் சென்றிருந்த திரு ஆசாரியார் திரும்பி வருவதற்கு நேரமாகிவிட்டது; குதிரை வண்டியில் சேலத்திற்கு வந்து கொண்டிருந்தார். அக்காலத்தில் வழியில் கொலை களவுகள் நடப்பது வெகு சாதாரணம். ஆகையால் தமது கைத்துப்பாக்கியில் ரவைகள் போட்டுத் தற்காப்புக்கெனத் தயாராக வைத்திருந்தார். வண்டியிலிருந்த திரு ஆசாரியார் நன்ருக உறங்கிவிட்டார். வழியில் ஒரு சுங்கச் சாவடி; அங்கே வண்டி நின்றது. காவற்காரன் சுங்கப் பணம் வசூல் செய்ய வண்டியின் பின்புறம் சென்ருன். உறங்கிக் கொண்டிருந்த திரு ஆசாரியார் கண் விழித்தார்; தம்மை யாரோ தாக்க வந்து விட்டதாக நினைத்தார். அரைத் தூக்கம்; ஆயினும் குறிதவருது, கைத்துப்பாக்கியை எடுத்துக் காவற்காரனைச் சுட்டு விட்டார்; காவற்காரனும் மண்ணில் சாய்ந்தான். இதற்குள் அவர் துயிலும் கலைந்தது; துப்பாக்கிச் சத்தம் கேட்டவுடன் பலர் அங்கே கூடிவிட்டனர். விளக்கெடுத்து வந்து பார்த்தபோது சுடப்பட்டவன் காவற்காரன் என்று உணர்ந்தார். தமது தவறை உணர்ந்த திரு ஆசாரியார் மிகவும் வருந்தினுர்; அவனை உடனே வண்டியில் ஏற்றிக்கொண்டு மருத்துவ விடுதிக்குக் கொண்டு சென்ருர்; வழியிலேயே அவன் இறந்து

போனன். திரு ஆசாரியாரின் பேரில் கொலைக் குற்றம் சாட்டப்பட்டு வழக்கும் நடந்தது; தவறி இருளில் தற்காப்புக்காகச் சுட்டார் என்று நீதிபதி வழக்கைத் தள்ளிவிட்டார். இதுபற்றி திரு ஆசாரியாரே பின்வருமாறு விளக்கம் கூறியுள்ளார். அதாவது: "நான் என் வாழ்நாளில் ஆயுதந் தாங்கிச் சென்றது சொற்பகாலமேதான்; தற்காப்புக்கு ஓர் ஆயுதம் இன்றியமையாதது என்று நினைத்தேன். அதை ஒரு முறைதான் பயன்படுத்தினேன்; அதுவும் ஒரு நிரபராதியைத் தாக்க நேர்ந்தது. அது தவறு என்று என் மனச்சாட்சி கூறுகிறது; அஹிம்சை வழியில் என் மனம் சென்றுள்ளதற்கு இதுவும் ஒரு காரணம்".

அஞ்சா நெஞ்சம்

வாலிபப்பருவத்தில் திரு ஆசாரியார் மிக உயர்ந்த முறையில் வாழ்க்கையை நடத்தி வந்தார். ஆயினும் மேல்நாட்டு நாகரிக முறையைப் பின்பற்றவில்லை. அரசாங்கத்தில் வேலை செய்வதே மதிப்பானது என்ற எண்ணம் மக்களிடையே பரவியிருந்த அந்நாளில், அவ்வகை வாழ்க்கையை அவர் விரும்பாது, சுயேச்சையாகத் தொழில் புரியத் தொடங்கினர். நம் நாட்டுப் பண்டை முறையிலேயே உடை தரித்தும், உணவு அருந்தியும் வந்தார். ஆனல் அக்காலத்தில் அலங்காரமான ஆடைகள் அணிவதில் விருப்பமுடையவராக இருந்தார்; தூய, வெண்மையான, மடிப்புக் கலையாத சலவைத் துணியையே அவர் விரும்புவார். பட்டுச் சட்டை, சரிகை மேலாடை,

மைசூர்த் தலைப்பாகை ஆகிய இவைகளை அவர் தரித்துக் கொள்வார். சமூக சீர்திருத்த மனப் பான்மை கொண்டிருந்த போதிலும் வைதிக கருமங்களைச் செய்யத் தவறமாட்டார். மந்திரங்களை உச்சரிப்புக் குறைவின்றி, ஒழுங்காகச் சொல்லிக் காரியங்களைச் செய்வார். ஆனால் சமூகத்தில் காணப் பட்ட குறைகளுக்கு உடன்படாத நெஞ்சமுள்ளவர். பழமையும் புதுமையும் கலந்து அவருடைய வாழ்க்கையை உருவாக்கின.

திரு ஆசாரியார் தமக்கென ஒரு சிறந்த குதிரை வண்டி வைத்துக் கொண்டிருந்தார். அதில் தான் அவர் ஏறிச் செல்வது வழக்கம். ஒருநாள் அவர் அவ் வண்டியில் ஏறினர். குதிரை இடக்குச் செய்தது; வண்டிக்காரனல் சமாளிக்க முடியவில்லை; அவன் வண்டியில் ஏறி உட்காருவதற்குள், அது ஓட்ட மெடுத்தது. அருகிலிருந்தவர்கள் திரு ஆசாரியாரைக் குதித்து விடும்படி கூறினர்கள். ஆனல் அவர் அவ் வாறு செய்யவில்லை. மனங் கலங்காது வண்டியி லேயே உட்கார்ந்திருந்தார். குதிரை கட்டுக் கடங் காமல் வண்டியை இழுத்துக்கொண்டு ஓடிவிட்டது; வெகு தூரம் ஓடிக் களைப்புற்று நின்றது. திரு ஆசாரி யாரும் சௌக்கியமாக இல்லம் திரும்பினர். அவரு டைய அஞ்சாநெஞ்சத்திற்கு இதுவும் ஒரு சான்று.

கோடை காலத்தில் திரு. ஆசாரியார் சேர்வரா யன் மலையிலுள்ள ஏற்காட்டுக்குச்சென்று தங்குவது வழக்கம். ஒரு சமயம் சேலத்திலிருந்த சில சிறுவர் கள் ஏற்காட்டுக்குச் செல்ல விரும்பினர்கள். ஆனல் அவர்கள் எங்கே தங்குவது என்று தயங்கினர்கள்.

திரு ஆசாரியாருடைய தந்தையாருக்கு அவர்களுடைய தயக்கத்தின் காரணம் தெரிந்தது. அச் சிறுவர்களை அவர் வரவழைத்தார். ஏற்காட்டில் தமது குமாரருடைய விடுதியில் அவர்கள் தங்கலாமென்று கூறினர். ஆனல் சிறுவர்களில் சிலர் தயங்கினர்கள்; திரு ஆசாரியாரை அவர்களுக்கு நன்கு தெரியாது. தமது மைந்தருக்குச் சிறுவர்களிடம் தனிப்பற்று உண்டு என்றும், அங்கு அவர்கள் தங்குவதை அவர் உவகையுடன் வரவேற்பார் என்றும் திரு சக்கரவர்த்தி ஐயங்கார் அச்சிறுவர்கட்குக் கூறித் தைரியம் ஊட்டினர்; அவர்களும் இசைந்தனர். அவ்வாறே, ஏற்காட்டில் திரு ஆசாரியார் தங்கியிருந்த விடுதிக்கு அவர்கள் சென்றார்கள். அன்னர், அச்சிறுவர்களை அன்புடன் வரவேற்ருர். உணவுவேளை கடந்தே அவர்கள் அங்கே சென்றனர். ஆயினும், ரொட்டியும் சாம்பாரும் அவர்களுக்கு ஏராளமாகக் கிடைத்தன. அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை; இச் செய்தியைக் கேட்ட தந்தையார் அளவிலா மகிழ்ச்சி கொண்டார்.

---

5. பொதுநலப் பணிகள்

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டு முலகு." —குறள்.

சேலம் ஜில்லாவில் ஒரு காட்டைப்பற்றிய வழக்கு நேர்ந்தது. திரு இராஜகோபாலாசாரியாரின் கட்சிக்காரரான ஒரு ஜமீன்தார் அதில் சம்பந்தப்பட்டிருந்தார். ஜமீன்தாருடைய ஆட்கள் காட்டில் விறகு வெட்டியதாகவும், காட்டிலாகா அதிகாரி அவர்களைக் 'கையும் களவு' மாகப் பிடித்ததாகவும் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. ஜமீன்தார் ஆட்களின் சார்பில் திரு ஆசாரியார் வழக்காடினார். அந்தக் காட்டிலாகா அதிகாரி சாட்சிக் கூண்டில் ஏறினார். அவரைத் திரு ஆசாரியார் மிக அரிய முறையில் குறுக்கு விசாரணை செய்தார். ஆட்களைக் கையும் களவுமாகப் பிடித்ததாகச் சொன்ன அதே நேரத்தில், அந்த அதிகாரி தமது வீட்டில் மனைவி மக்களுடன் தேநீர் அருந்திக்கொண்டிருந்ததாக அவ்வதிகாரியின் வாயிலிருந்தே குறுக்கு விசாரணையில் சொல்வித்தார்! அவருடைய வாதத் திறமை அற்புதமாக இருந்தது. நீதிபதி வழக்கைத் தள்ளுபடி செய்தார்; களவுக்குற்றம் சாட்டப்பட்ட ஆட்கள் விடுதலையடைந்தனர்.

திரு ஆசாரியாரின் மனம் நேர்மையான பாதையிலேயே செல்லும். ஆனல் அவர் இரக்கமுள்ள நெஞ்சினர். ஒருநாள் திரு ஆசாரியார் நீதிஸ்தலத்திற்குப் புறப்படும் சமயம். ஹரிஹர ஐயர் என்ற ஒரு பாலக்காட்டு அந்தணர் அவரிடம் தமது குடும்பத்துடன் வந்தார். "நான் ஓர் ஏழை ஆசிரியன்;

விடுமுறையில் திருப்பதிக்கு வந்தேன். என் கையி லிருந்த பணம் களவு போய்விட்டது; ஊருக்குத் திரும்பிச் செல்ல வேண்டும்; ஏதாவது உதவி செய் யுங்கள்" என்று கோரினர். திரு ஆசாரியார் உடனே "சரி, நான் நீதிஸ்தலத்துக்குச் சென்று வருகிறேன்; நீங்கள் உள்ளே சென்று உணவு அருந்துங்கள்; பிற்பகலில் கவனிக்கிறேன்" என்று சொல்லிச் சென்றுவிட்டார். ஆனல், அவர் நேரே தந்தி ஆபீசுக்குச் சென்றார்; அந்த அந்தணர் ஆசிரிய ராக இருந்ததாகச்சொன்ன பாலக்காட்டுப் பள்ளிக் கூடத்துக்குத் தந்தி கொடுத்தார்; "உங்கள் பள்ளியி லிருந்து ஹரிஹர ஐயர் என்ற ஆசிரியர் விடு முறையில் வெளியூர் சென்றிருக்கிறரா?" என்று அத்தந்தி மூலம் கேட்டார். அங்கிருந்து "அப்பெய ருள்ள ஆசிரியர் வேலை பார்த்துக்கொண்டிருக்கிறர்; வெளியூர் செல்லவில்லை" என்று பதில் கிடைத்தது. உடனே போலீஸ் நிலையத்திற்குச் சென்று திரு ஆசாரியார் அவ்வந்தணர் மீது குற்றஞ் சாட்டி ஞர். அந்தணர் கைது செய்யப்பட்டார்; நீதிஸ்தலத் தில் வழக்குத் தொடரப்பட்டது.

விசாரணையில் எதிரி "நான் ஏழை; வழக்கறி ஞர் நியமித்து வாதிக்க என்னல் முடியாது" என்று முறையிட்டார். அங்கிருந்த திரு ஆசாரியார் உடனே அவருக்காகத் தாம் வாதிப்பதாகத் தெரி வித்தார். என்ன ஆச்சரியம்! வழக்குத்தொடுத்தவரே வாதிப்பதா? அவ்வாறே, அவ்வேழையின் சார்பில் அவர் வாதித்தார். அந்தணர் குற்றவாளியென்று முடிவாயிற்று. அவருக்கு நீதிபதி இருநூறு ரூபா

அபராதம் விதித்தார். "அவரோ ஏழை; இருநூறு ரூபா செலுத்த அவரால் எவ்வாறு இயலும்?" என்றார் திரு ஆசாரியார்; அவ்வாறே வாதாடி, அபராதத் தொகையைப் பத்து ரூபாயாக்கினர்; உடனே தமது சட்டைப் பையிலிருந்து பத்து ரூபா எடுத்துத் தாமே குற்றவாளியின் சார்பில் அபராதத்தைச் செலுத்தினர். பின்னர், அவ்வந்தணரும், அவர் குடும்பமும் ஊருக்குச் செல்லப் போதிய பணத்தை அளித்து அவர்களை வழியனுப்பினர்.

இத்தகைய சுபாவத்தை யாரும் கண்டிருக்கவே முடியாது. தவறு செய்த அவரைத் தண்டிப்பது நியாயம்; ஆனல் திக்கற்றவரைக் காப்பது தருமமல்லவா? ஆகையால் அவர் சார்பில் வாதாடினர்; அவருடைய அபராதத்தையும் தாமே செலுத்தினர். அவர் மீது கோபங் கொள்ளவில்லை; பரிதாபமே மேலிட்டது. அதனலேயே அவருக்கு உதவினர். இவ்வாறு இளமையிலேயே அவருடைய மனம் பண்பட்டிருந்தது.

சமூகத் தொண்டு

நம் நாடு பண்டைப் பெருமை வாய்ந்தது; பல்வளங்களும் நிறைந்தது. நம்முடைய நாகரிகம் மிக்க பழமையானது. மற்ற நாடுகளில் மக்கள் விலங்குகள் போன்று வாழ்ந்து வந்த காலத்திலேயே நம்நாடு மிகுந்த மேம்பாடு அடைந்திருந்தது. சமயம், அறிவியல், அரசியல், பொருளாதாரம், வேதாந்த விசாரணை போன்ற துறைகளில் நம் மக்கள் முன்னணியில் இருந்துள்ளனர். ஆனல் இது பழம்

பெருமையேயாகும். "வீணாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதில் மகிமை இல்லை". பல துறைகளிலும் நம் மக்கள் வீழ்ச்சியடைந்துள்ளனர்; அவர்களுடைய உள்ளங்களில் மாசுபடியத் தொடங்கிற்று. சமூகத்தில் பல மூடப் பழக்க வழக்கங்கள் தோன்றலாயின; சமயப் பூசல்கள் ஏற்பட்டன; கடவுளின் பெயராலும் சமயத்தின் பெயராலும் பல அநீதிகள் இழைக்கப்படலாயின. சாதி, மத வேற்றுமைகள் வேரூன்றி மக்களை வாட்டலாயின. 'தீண்டப்படாதார்' என்ற வகுப்பினர் விலங்குகளினும் கேவலமாக நடத்தப்பட்டு வந்தனர். உண்மைத் தத்துவம் மறைந்து, சமயத்தின் பெயரால், போலி வழக்கங்கள் தலையெடுக்கத் தொடங்கின. பெண்களை ஆண்கள் அடிமைப் படுத்தலாயினர்.

இந்நிலையில் விவேகானந்த அடிகளுடைய அருள் மொழிகள் நாட்டு மக்களை விழிப்படையச் செய்தன; நமது பண்டைப் பெருமையை அவர் விளக்கிக் காட்டினார்; சிப்பியிலுள்ள முத்துப்போல் அது துலங்குவதை மக்களுக்கு எடுத்துரைத்தார்; சமூகத்தில் படிந்துள்ள கறைகளை அகற்ற அரும்பாடுபட்டார். அடிகளின் உபதேசம் திரு ஆசாரியாருக்குத் தூண்டுகோலாயிருந்தது. இந்து சமூகத்தில் காணப்பட்ட குறைகள் நம் ஆசாரியாருக்கு வருத்தத்தை உண்டாக்கின. வைதிகத்தின் பெயரால் நடந்து வரும் அருவருக்கத்தக்க பழக்கங்களை அவர் வெறுத்தார். கடவுளின் பெயராலும், சமயத்தின் பெயராலும் நடைபெற்ற அநீதிகளைக் கண்டு அவர் மனம் கசிந்தார். நாட்டில் மதவேற்றுமைகள் ஒழிந்து, சாதிப் பூசல்கள் நீங்கி, மக்கள் "எல்லோரும்

ஓரினம், எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் இந் நாட்டு மன்னர்" என்று வாழவேண்டும் என்பது அவர் கொண்ட பேரவா.

திரு ஆசாரியார் ஆராய்ந்து பாராமல் ஓர் இயக் கத்திலும் ஈடுபடமாட்டார். மாணவராக இருந்த பொழுது கல்வியையே கருத்தனமாக அவர் கொண் டிருந்தார். வாழ்க்கைப் போராட்டத்தில் இறங்கிய பின்னர், முழு மனத்துடன் அதில் ஈடுபட்டார். சொல்வதைக் காட்டிலும் செய்வதிலேயே அவர் மனம் சென்றது. சொல்வது யார்க்கும் எளிது; ஆனால் சொல்லிய வண்ணம் செய்தல் அரிது. திரு ஆசாரியார் வெறும் மேடைச் சொற் பொழிவாளர் அல்லர்; தமக்குத் தோன்றும் கருத்துக்களைப் பரந்த நோக்குடன் ஆராய்ந்து பார்ப்பார்; அவ்வா ராய்ச்சியின் முடிவைத் தமது வாழ்க்கையில் செய்து காட்டுவார்; பெரியவர்களின் பண்பு இதுவேயாகும்.

தீண்டாமை ஒழிப்பு

இளமையில் தாம் கொண்ட சீரிய எண்ணங்களை நடைமுறையில் செய்துகாட்டத் தொடங்கினர் திரு ஆசாரியார். வழக்கறிஞர் தொழிலில் ஏராளமான வருவாய் கிடைத்து வந்தது; மதி நுட்பமோ மட்டற் றது; நடத்தையோ பலருக்கு எடுத்துக்காட்டாக இருக்கக் கூடியது. பணத்தினால் மமதையோ, கர் வமோ உண்டாகவில்லை. அவருடைய வேதாந்தம் ஏட்டுச் சுரைக்காய் அன்று. இந்து சமூகத்தில் காளான்போல் முளைத்திருந்த 'தீண்டாமை' என்ற நோய் அவருக்குப் பெரிதும் வருத்தமளித்தது.

விலங்குகளுக்கும் கீழாக மக்களை நடத்துவதை அனு மதிக்கும் சமயமும் சமூகமும் அவருக்கு வெறுப்பை அளித்தன. அக்காலத்திலேயே, அக்காளானைக் களைந்தெறிய வேண்டும் என்று அவர் தீர்மானித் தார்; 'தீண்டாமை' ஒழிந்தாலன்றி இந்து சமூகம் மேன்மையுறாது என்று தேர்ந்தார்; தாழ்த்தப்பட் டிருந்த மக்களுக்குத் தம்மாலியன்ற உதவிகளைச் செய்து வந்தார்.

காந்தியடிகள் 1920-ஆம் ஆண்டில் செய்யத் தொடங்கிய ஹரிஜனத்தொண்டு திரு ஆசாரியாரால் 1906-ஆம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப் பட்டுவிட்டது. அவ்வாண்டில் சில ஆதித்திராவிட மாணவர்களைச் சேலம் கலாசாலையில் சேர்க்கத் திரு ஆசாரியார் முயன்றார். அதுகண்ட உயர்ந்த வகுப்பினர் பெருங் கிளர்ச்சி செய்தனர். "ஆதித்திராவிட மாணவர்கள் கலாசாலையில் சேர்ந்தால், எங்கள் மக்களைக் கல்லூ ரிக்கு நாங்கள் அனுப்பமாட்டோம்" என்று முழக்கம் செய்தனர். கல்லூரி நிர்வாகிகள் அவ்வெதிர்ப்பைக் கண்டு சிறிது தயக்கமுற்றனர்; ஆயினும் நியாயம் திரு ஆசாரியாரின் பக்கம் இருப்பதை அறிந்து, அவ ருடைய முயற்சிக்கு ஆதரவளித்தனர். ஆனால் திரு ஆசாரியார் இந்தக் கிளர்ச்சிக்குப் பணியவில்லை. அவர் திடசித்த முள்ளவர்; ஆனதால் தாம் செய் ததே நேர்மையானது என்று சாதித்து வெற்றிக் கொடி நாட்டினர்.

சமூக வேற்றுமைகளைக் களைந்தெறியச் சம பந்தி உணவே தகுந்த முறையாகும் என அவர் தீர் மானித்தார்; சேலத்தில் பல உயர்தர அரசாங்க

அதிகாரிகளும் பிறரும் சேர்ந்திருந்த 'பிரீமேஸன்' என்ற கழகத்தில் அங்கத்தினரானார். அதில் சம பந்தி போஜனம் செய்வது ஒரு கொள்கை. தாம் அக்கொள்கையைக் கடைப்பிடிப்பதுடன், பலரும் அதன்படி ஒழுகவேண்டும் என்று நினைத்துச் சம பந்தி போஜனங்கள் நடைபெற அவர் ஏற்பாடு செய்தார்.

பாரதியார் நட்பு

பொதுநலப் பணி செய்ததுடன் திரு ஆசாரியார் நின்றுவிடவில்லை. அடிமை நாட்டில் பொது வாழ்க்கையில் போதிய பயன் கிட்டுவதில்லை என்று அவர் உணர்ந்தார்; மக்கள் சுதந்திர உணர்ச்சியின்றி அந்நியர்க்கு அடிமைப்பட்டுக் கிடப்பதையும், பொதுநலப் பணி பயனின்றிப் போவதையும் கண்டார்; ஆகவே, அரசியல் அரங்கத்தில் தீவிர வாதத்தை ஏற்றார். 1910-ஆம் ஆண்டில் புதுவை சென்று, திரு சுப்பிரமணிய பாரதியாரைச் சந்தித்து நட்புக்கொண்டார். பாரதியாரின் ஆவேசப் பாக்கள் அவரை ஆட்கொண்டன. திரு வ. உ. சிதம்பரம் பிள்ளை என்ற திருநெல்வேலி தேசபக்தர் ஆரம்பித்த கப்பலோட்டும் தொழிலுக்கு ஆதரவளித்தார். அவர் ஏற்படுத்திய அக்கம்பெனியில் ஆயிரம் ரூபாய்களுக்குப் பங்குகள் எடுத்துக்கொண்டார். நாட்டின் நலனுக்காக உழைத்துவந்த திரு சுப்பிரமணிய சிவாவுக்கு மிகவும் உதவி செய்தார். நாட்டுப் பற்றால் கஷ்டநஷ்டங்களை அடைந்தவர்க்குத் தம் மாலியன்ற உதவிகளைச் செய்து வந்தார். சூரத்தில் நடந்த காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் தீவிர

வாதிகளின் சார்பில் வாதாடினார். 1914-ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற சமூகச் சீர் திருத்த மகாநாட்டில் கலந்து கொண்டார்.

மனத் திடம்

திரு ஆசாரியாருடைய வாழ்க்கை உயரிய வாழ்க்கைக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைந்திருந்தது. 1915-ஆம் ஆண்டு தமது தொழில் சம்பந்தமாகக் கோயமுத்தூர் சென்றிருந்தார். அங்கே அவருக்குக் கபவாத சுரம் கண்டது; உடனே சேலம் வந்து சேர்ந்தார். மருத்துவ சிகிச்சை நடந்தது. ஒரு நாள் வைத்தியர் அவருடைய நாடியைப் பார்த்து "இனி இவர் பிழைக்க மாட்டார்" என்று தெரிவித்தார். உறவினரும் நண்பர்களும் மிகுந்த துக்கம் அடைந்தனர். அப்பொழுது திரு ஆசாரியார் ஒரு நண்பரை அருகே அழைத்தார்: "இந்த வைத்தியர் சொல்வதை நம்பாதீர்கள். வேறொரு மருத்துவரை அழைத்து வாருங்கள்" என்றார். அவ்வாறே மற்றொரு வைத்தியர் வரவழைக்கப்பட்டார். இரு வைத்தியர்களும் கலந்து ஆலோசித்தபின் சிகிச்சை நடந்தது. திரு ஆசாரியார் குணமடைந்து விட்டார். ஆண்டவனுடைய அருளும், ஆசாரியாருடைய மனங்கலங்கா நெஞ்சும் அவரைக் காப்பாற்றின.

6. மனைவியின் மறைவு

" தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண் " —குறள்.

திரு ஆசாரியாரின் மனைவியார் மெலிந்த தேகத்தினர்; உடல் நலம் குன்றியவர்; அவர் அடிக்கடி 'ஆஸ்துமா' என்ற காச நோயால் துன்புறுவார்; ஒருசமயம் இருவரும் அந்நோயால் அல்லலுற்றனர். கணவரைக் காட்டிலும் மனைவிக்கு நோய் கடுமையாயிருந்தது. ஆசாரியார் தமது தேக நிலையைப் பொருட்படுத்தாமல் தமது மனைவிக்கு ஓயாமல் பணியாற்றினர்; பல இரவுகள் கண்விழித்திருந்து மனைவிக்குத் தேவையான உதவிகளைச் செய்தார். அதனால் அவருடைய உடல் நலம் பெரிதும் பாதிக்கப்பட்டதை அவர் பொருட்படுத்தவில்லை.



இராஜாஜியின் தர்மபத்தினி
அலர்மேலுமங்கை அம்மாள்

திரு ஆசாரியாரின் இல்வாழ்க்கை 1915-ஆம் ஆண்டு வரையில் இன்பமாகவே நடந்து வந்தது. அவருடைய பத்தினி அவரது உண்மையான வாழ்க்கைத் துணைவியாக இருந்தார்; அவர் கொழுநன் மனமுவப்ப நடந்து வந்தார். திரு ஆசாரியாருடைய சமூக சீர்திருத்த நோக்கங்களுக்கெல்லாம் அவரும் தமது உடன்பாட்டையும் ஆதரவையும் அளித்தார். ஆனால் அவர் அடிக்கடி பிணியால்

வருந்துவார். அதன் பலனாக 1915-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 22-ஆம் நாள் அவர் இறைவன் அடி சேர்ந்தார். சிறந்த மருத்துவ சிகிச்சைகளும் பயனற்றவையாயின. அப்பொழுது திரு ஆசாரியாருக்கு வயது முப்பத்தெட்டு; வாலிபப் பருவம். தொழிலின் முன்னணியில் அவர் சிறப்பெய்தியிருந்த காலம் அது. ஆயினும் அவர் கலங்கா நெஞ்சம் உள்ளவர். மனைவி இறந்ததற்கு வருந்துவது இயற்கையேயாயினும், அவர் மனம் சோர்ந்து போகவில்லை. அவர் சிறந்த பண்பாடு அடைந்தவர். ஆதலால் உள்ளக் கிளர்ச்சியை வெளிப்படையாகக் காட்டவில்லை; அவருடைய வைராக்கிய மனோநிலையைப் பார்த்த பலர் அதிசயித்தனர். ஆனால் அவருடைய பண்பட்ட உள்ளத்தில் மற்றுமொரு மங்கைக்கு இடமில்லை. மறுமணம் செய்துகொள்ள அவர் மறுத்தார். ஆண்கள் மறுமணம் செய்துகொள்வது நமது சமூகத்தில் இருந்துவரும் வழக்கங்களில் எளிதில் நடைபெறக் கூடியது. ஆனால் அவர் அதற்கு இசையவில்லை. நண்பர்களும் உறவினர்களும் அவருக்கு மறுமணம் செய்துவைக்க முனைந்தனர். அவர்களுடைய முயற்சி பயனற்றதாயிற்று.

இல்வாழ்க்கையின் பயனாக அவருக்கு ஐந்து குழந்தைகள் பிறந்தனர். அவர்களுள் மூவர் ஆண்கள்; இருவர் பெண்கள். மக்களைப் பேண வீட்டில் ஒருவரும் இல்லை. குழந்தைகளுக்கு உதவியாக மற்றுமொரு மனைவியை ஏற்க வேண்டும் என்று பலர் கேட்டுக் கொண்டனர். ஆனால் அவர் மனம் கலங்கவில்லை. "குழந்தைகளைப் பேண வேண்டியது

எனது கடமை; ஆனல், மறுமணம் செய்துகொண்டால், என் ஐந்து மக்களுடன் ஆறாவது குழந்தையையும் பராமரிக்க வேண்டுமே; அதை என்னல் சுமக்க முடியாது" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறி, நண்பர்களுடைய வாதத்திற்கு அவர் முற்றுப்புள்ளி வைத்தார்.

---

7. சேலம் நகரசபைத் தலைவர்

"உடைய ரெனப்படுவ தூக்கமஃ தில்லா
ருடைய துடையரோ மற்று." —குறள்

1917-ஆம் ஆண்டிலேயே சேலம் நகர மாந்தர் ஒருமனதுடன் திரு ஆசாரியாரை நகரத்தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். அவர் நகரசபைத் தேர்தலில் ஓர் உறுப்பினர் பதவிக்கு நிற்கவில்லை. ஆனல் பொதுமக்களுடைய அபிமானத்தைப் பெற்று அங்கத்தினரான யாவரும் அவரைத் தமது தலைவராக ஏற்றுக்கொண்டனர். அப்பொழுது அவர் சேலத்திலிருந்து மூன்று மைல் தூரத்திலுள்ள சூரமங்கலத்தில் குடியிருந்து வந்தார். அங்கிருந்து கொண்டு, தமது சொந்த மோட்டாரில் சேலத்திற்கு வந்து நகராண்மைக் கழக அலுவல்களைக் கவனித்து வருவார். அக் கழகத் தலைவராகத் தொண்டாற்றி வந்த காலத்தில் தமது வழக்கறிஞர் தொழிலைச் சுருக்கிக் கொண்டார். மாதத்திற்கு ஒன்று அல்லது இரண்டு பெரிய வழக்குகளை மட்டும் ஏற்றுக் கொள்ளுவார்; ஆனல் வருவாய் அதிகமாகவே இருக்

தது. தலைவர் செய்ய வேண்டிய பணிகளை முழு நேரமும் கவனித்துச் செய்வார். அவருடைய நிர் வாகத் திறமை போற்றற்குரியதா யிருந்தது.

திரு ஆசாரியார் அப்பதவிக்கு வருமுன், நகர சபை வேலைகள் மிகச் சாவதானமாகவே நடந்து வந்தன; அந்நிலைமையை அவர் முற்றிலும் மாற்றி னார். அவர் கவனிக்காத அலுவல் ஒன்றுமே இல்லை. நகரத்தின் கல்வித் திட்டங்களிலும், சபையினால் நிர்வகிக்கப்பட்ட கல்வி நிலையங்களிலும் மிகுந்த கவனம் செலுத்தினார். பல ஆண்டுகளாக நட வடிக்கை எடுக்கப்படாத விஷயங்களை இரண்டே நாட்களில் தீர்த்து வைத்தார். அவருடைய அன் புக்குக் கட்டுப்பட்டு, நகரசபை ஊழியர்கள் யாவரும் உற்சாகத்துடன் உழைத்தனர். அவரது முயற்சியால் முதியோர் கல்வி நிலையங்கள் பல உண் டாயின. தொழிலாளர்க்கு இரவுப் பள்ளிகள் ஏற் படுத்தப் பெற்றன. அறிவியல் கலைச் சொற்களைத் தமிழ் மொழியில் பெயர்க்க ஒரு கழகம் நிறுவினார். அவரிடம் வேலை பார்த்தவர்கள் அவர்மீது குறை சொல்லியதில்லை. நகரசபைக் காரியாலயத்தில் அவர் யாவரையும் புன்னகையுடன் வரவேற்று, ஆசனமளித்து, மரியாதையுடன் நடத்துவார். அவ ருடைய நிர்வாகத் திறமையை அப்பொழுது சேலத் தில் ஜில்லா கலெக்டராக இருந்த ஆங்கிலேயர் ஒரு வர் பெரிதும் புகழ்ந்துள்ளார்: "ஒவ்வொரு நக ராண்மைக் கழகத்திற்கும் திரு ஆசாரியாரைப் போன்ற தலைவர் அமையலாகாதா?" என்று அவர் கூறியதுண்டு.

சீர்திருத்தப் பணி

சமூகத் தொண்டு செய்வதற்குக் கழகத் தலைமைப்பதவி ஒரு கருவி என்றே திரு ஆசாரியார் கருதினர். பின்னாட்களில் காந்தியடிகள் ஹரிஜனங்களின் ஆதரவாளராக விளங்கினர்; அவருடைய ஆற்றல் இராமபாணமென நாட்டிலிருந்து தீண்டாமைப் பேயை விரட்டி வந்தது. ஆனல் அந்தக் கொள்கையை 1917-ஆம் ஆண்டிலேயே வைதிகக் கோட்டை என்று கருதப்படும் சென்னை மாகாணத்தில்,சேலம் நகரில் நிலைநாட்டிய பெருமை திரு ஆசாரியாரையே சார்ந்ததாகும். அவர் தமது மெய்த்தொண்டின் மகிமையால் சமூகப் புரட்சி அலைகளை அக்காலத்திலேயே தோற்றுவித்தார். சேலம் அக்கிரகாரத்தில், நகரின் மற்றப் பகுதிகளில் உள்ளவை போலவே, நகரசபையார் நிர்வகித்துவரும் தண்ணீர்க் குழாய்கள் இருக்கின்றன. அவற்றைப் பழுதுயார்க்கும் பணிக்குத் திரு ஆசாரியார் சில ஹரிஜன வேலையாட்களை நியமித்தார். வைதிக அந்தணர்களும் மற்றோரும் அதை எதிர்த்து நின்று யாவரும் கலங்கும் வண்ணம் குழப்பம் உண்டாக்கினர். திரு ஆசாரியாருடைய அருமை நண்பராக இருந்து, இப்பொழுது முற்றும் துறந்த பெரியாராக விளங்கிவரும் திரு பி. வி. நரசிம்ம ஐயர் வைதிகக் குழுவினர்க்குத் தளபதியாக விளங்கினர். இதுபற்றி நகரசபையில் ஒரு கண்டனத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. திரு ஆசாரியாரிடம் அன்பும் பெருமதிப்புங் கொண்ட அங்கத்தினர்கள் கூட அக்கிளர்ச்சியில் கலந்து கொண்டனர். ஆனல் எதிர்ப்பைக்

கண்டு திரு ஆசாரியார் மனங்கலங்கவில்லை. "இந்தக் கண்டனத் தீர்மானம் முனிசிபல் விதிகளுக்கு முரணானது" எனக் கூறி தலைவராயிருந்த ஆசாரியார் அதை நிராகரித்து விட்டார்; வைதிகர்கள் பின்வாங்கினர்.

இவ்வெற்றியை யடுத்து திரு ஆசாரியார் மேலும் தமது சமூகப் பணியை விரிவுபடுத்தினர். சேலம் கல்லூரி முனிசிபல் நிர்வாகத்திற்கு அடங்கியது; அக் கல்லூரியில் பயிலும் மாணவருக்கு ஒரு தனி விடுதி இருந்து வந்தது; அயலூரிலிருந்து வரும் மாணவர்களுக்கு அங்கே உணவும் தங்குமிடமும் கிடைக்கும். அந்த விடுதியில் திரு ஆசாரியார் இரண்டு ஆதித்திராவிடர்களை வேலைக்கு அமர்த்தினர். அதற்கு எதிர்ப்பு முன்னிலும் பலமாக இருந்தது. நகர மாந்தரில் வைதிகர் இதனை எ்திர்த்துப் பெருங் கிளர்ச்சி செய்தனர். இக் கிளர்ச்சியின் தலைவர் சிறந்த வழக்கறிஞரும், பழுத்த தேசீய வாதியுமான திரு விஜயராகவாசாரியார் ஆவார். திரு ஆசாரியாரிடம் அவர் இதுபற்றி நீண்டநேரம் வாதம் புரிந்தார். ஆனால் இவர் மனங் கலங்கவில்லை; தமது நியமனங்களை நீக்க முடியாதெனத் தெரிவித்துவிட்டார். வைதிகர் "அந்தண மாணவர்களை மாணவர் விடுதியினின்றும் நிறுத்தி விடுவோம்" என்று பயமுறுத்தினர். அது கேட்ட திரு ஆசாரியார் புன்சிரிப்புடன் அமைதியாக "விடுதியை மாணவர்கள் விட்டுச் சென்றால், அது அவர்கள் விருப்பம்; அவர்களை நாங்கள் கலாசாலையினின்றும் நீக்கிவிடுவது எங்களுடைய விருப்பமாக இருக்கும்" என்றார். வைதிகர் மனம் சோர்ந்தனர்; எதிர்ப்பும் தோல்வியுற்றது. ஆயினும் சிலர் ஜில்லா

கலெக்டரிடம் தூது சென்று, திரு ஆசாரியார்பேரில் புகார் செய்தனர். கலெக்டர் திரு ஆசாரியாருடைய நிர்வாகத்தில் தலையிட மறுத்தார். "அவருடைய புனிதமான சமூகச் சீர்திருத்த வேலையை நீங்கள் எதிர்ப்பது தகாது" என்று புத்தி புகட்டினர்; வைதிகர் ஏமாற்றமடைந்து வீடு திரும்பினர்.

திரு ஆசாரியார் நகராண்மைக் கழகத்தின் தலைவராயிருந்த காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் குடி தண்ணீர், கல்வி முதலான வசதிகள் செய்து கொடுத்தார். சேலம் ஜில்லாவில் **குமரமங்கலம்** என்பது ஒரு சிறு பகுதி. அதன் மன்னரான **டாக்டர் சுப்பராயன்** சிறந்த கல்விமான்; வேளாளர் குலத்தைச் சேர்ந்தவர். அவர் கன்னடநாட்டைச் சேர்ந்த **ஸ்ரீமதி இராதாபாய்** என்ற அந்தணர் வகுப்புப் பெண்மணியை மணக்க விரும்பினர். இது கலப்பு மணம்; இது போன்ற திருமணங்கள் அந்நாட்களில் நடைபெற்றதில்லை; எதிர்ப்பு அதிகமாக இருந்தது. ஆனாலும் தமது ஆதரவில் அத்திருமணத்தை நடத்தி வைத்தார் திரு ஆசாரியார்.

வைதிகத்துடன் போர்

சுவாமி சகஜானந்தர் என்பவர் ஒரு துறவி; தீண்டாத வகுப்பினர்; வடமொழியிலும் தென்மொழியிலும் சிறந்த புலமை வாய்ந்தவர்; சிதம்பரத்தில் நந்தனர் குலச் சிறுவர், சிறுமிகட்குக் கல்வித் தொண்டு செய்து கொண்டிருந்தார். "**நந்தனர் கழகம்**" என்பது அவர் நிர்வகித்து வந்த கல்வி நிலயத்தின் பெயராகும். அன்னரது நன்முயற்சிக்குத் திரு ஆசாரியார்

பேராதரவு அளித்து வந்தார்; தக்க சமயங்களில் பொருள் உதவியும் அளித்துள்ளார். அவர் ஒரு முறை 1917-ஆம் ஆண்டில் சேலத்திற்குவந்தார்; திரு ஆசாரியார் அவரை ஆர்வத்துடன் வரவேற்று உபசரித்தார்; மேலும் அவரைக் கௌரவிக்க ஒரு விருந்தும் ஏற்பாடு செய்தார். அவ்விருந்தில் நகரப் பிரமுகர் பலர் கலந்து கொண்டனர்; வழக்கறிஞர்களான திரு ஆதிநாராயண செட்டியார், சி. அனந்தாசாரியார், டி. எஸ். ஜகராஜ், எஸ். வி. சுப்ரமண்ய ஐயர், டாக்டர் வரதராஜுலு நாயுடு, கல்லூரித் தலைவர் யக்ஞநாராயண ஐயர் ஆகியோர் அவர்களில் முக்கியமானவர்கள்.

சமபந்தி விருந்துக்கு எதிர்ப்புப் பலமாக இருந்தது. முதலில் நகரசபைக் குழப்பம்; பின்னர் மாணவர் விடுதியைப்பற்றிய கிளர்ச்சி; இச்சமபந்தி விருந்து அவற்றிற்குச் சிகரம்போன்று அமைந்தது. எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்தது போன்றிருந்தது வைதிகர் மனப்பான்மை. திரு ஆசாரியார் பேரிலும், அவர்களுடைய தோழர்கள் பேரிலும் வைதிகர் மிக்கச் சீற்றம் கொண்டனர். அதன் பயனாக அவரையும், அச்சமயம் விருந்தில் கலந்து கொண்ட அவருடைய நண்பர்களையும் சேலம் அந்தணர்கள் சமூகத்தைவிட்டு விலக்கினர்; சுபாசுப காரியங்களுக்கு அவர்களுடைய வீடுகளுக்குச் செல்ல மறுத்தனர். அதுகண்ட திரு ஆசாரியாரும் அவருடைய நண்பர்களும் பயப்படவில்லை. விவாகம், மரணச் சடங்கு, சிரார்த்தம் ஆகிய காலங்களில் அந்தணர்கள் செய்ய வேண்டிய காரியங்களுக்குத் தேவை

யான மந்திரங்களை அவர்கள் பயின்றனர்; சமயம் நேர்ந்தபொழுது தாங்களே ஒருவருக்கொருவர் உதவியாக இருந்து சடங்குகளைச் செவ்வனே நடத்தினர். இவ் விருந்துக்குப் பின்னர் திரு எஸ். வி. சுப்ரமண்ய ஐயருடைய சகோதரி மரணமடைந்தார். அவருடைய நெருங்கிய உறவினர்கூட அச்சாவுக்கு வரவில்லை. 'இவர்கள் எப்படிச் சடங்குகளைச் செய்வார்கள் பார்க்கலாம்' என்று ஒதுங்கி நின்றனர் வைதிகர். கல்லூரித் தலைவரான திரு யக்ஞநாராயண ஐயர் இறுதிச் சடங்கை நடத்தி வைத்தார். வைதிகர் வெட்கிப் போயினர். அதன்பின் கல்லூரித் தலைவர் திரு யக்ஞநாராயண ஐயர் தமது புதல்வருக்கு உபநயனம் நடத்த ஏற்பாடு செய்திருந்தார்; வைதிகர்கள் ஒத்துழைக்கவில்லை. ஆனல் திரு ஆசாரியார் சரியான முன்னேற்பாடுகள் செய்திருந்தபடியால், வேறு வைதிகர்களைக் கொண்டு உபநயன முகூர்த்தம் நடந்தேறியது. தங்களிடம் மன்னிப்புக் கோர வருவார்கள் என்று எதிர்பார்த்த வைதிகக் குழுவினர் தலைகுனிந்தனர்.

இந்த நிகழ்ச்சிகள் நடந்த காலத்தில் திரு ஆசாரியாரின் தந்தையார் தமது கிராமத்தில் இருந்தார். அவர் பரம்பரை வைதிகர்; ஆனல் தமது மைந்தருடைய விவேகத்திலும் நுண்ணறிவிலும் அவருக்கு ஆழ்ந்த நம்பிக்கை இருந்துவந்தது. திரு ஆசாரியாருடைய செயல்கள் நியாயமாகவே இருக்கும் என்று அவர் நம்பினர். ஆனல் தீண்டாத வகுப்பினர் ஒருவருடன் சமபந்தி உணவு உண்ட செய்தியை அவர் கேள்விப்பட்டதும், அவருக்கு மிகுந்த வருத்தம் தோன்றியது. அவர் தம் உள்ளக்கருத்தை

விளக்கித் தம் புதல்வருக்கு ஒரு கடிதம் எழுதினர். அதற்குத் திரு ஆசாரியார் ஒரு பதில் கடிதம் அனுப்பினர். அதில் அநாதையாக ஆற்றுப் பெருக்கில் மிதந்து வந்த ஒரு சவத்திற்குத் தகனக்கிரியைகள் செய்து வைத்த அவர்களுடைய மூதாதையரில் ஒருவருடைய வரலாற்றை ஞாபகமூட்டினர்; அவரைப் பின்பற்றியே தாம் நடந்து வருவதாகத் தெரிவித்தார். குலதருமத்தைத் தமக்கு எடுத்துக்காட்டிய திரு ஆசாரியாருக்குத் தந்தையார் பதில் எழுதாமல் வாளாவிருந்து விட்டார். அவர் யாது கூற முடியும்?

திரு ஆசாரியாருடைய சமூகத் தொண்டு அக்காலத்திலேயே மதுவரக்கனையும் வதைக்கத் தொடங்கிற்று. சேலம் நகராண்மைக் கழக எல்லைக்குள் மதுபானக் கடைகள் வைக்கக்கூடாது என்று அவர் அரசாங்கத்தினருடன் வாதாடினர்; அதில் சிறிதளவு வெற்றியும் பெற்றார்.

1917-ஆம் ஆண்டில் திரு ஆசாரியாருடைய தந்தையார் சக்கரவர்த்தி ஐயங்கார் சேலத்தில் தமது குமாரருடைய இல்லத்தில் காலமானர். அவருடைய இறுதிச் சடங்குகளை நடத்தி வைக்க வைதிகர்கள் மறுத்தனர். தமது நண்பர்களுடைய உதவியால் திரு ஆசாரியார் எல்லாச் சடங்குகளையும் செவ்வனே செய்துமுடித்தார்.

8. அரசியல் பணிகள்

திலகருக்கு ஆதரவு

"கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்ற
நாடென்ப நாட்டிற் றலை" —குறள்.

சமூகப் பணியுடன் திரு ஆசாரியார் நின்றுவிட வில்லை. அவர் நாட்டுப் பற்று மிகுந்தவர். அதன் பயனாகவே, அரசாங்கத்தில் பதவி எதையும் ஏற்க விரும்பாமல், சுயேச்சையான வழக்கறிஞர் தொழி லில் இறங்கினார்; அதில் சிறந்த வெற்றியும் கண்டார். ஆயினும் அவர் மனம் அமைதி பெறவில்லை. நாடு முன்னேற்றமடைய வேண்டுமெனின், நாட்டு மக் களே அரசியலை நடத்த வேண்டும் என்ற உண் மையை அவர் நன்கு உணர்ந்திருந்தார். அந்நிய ஆட்சியின் அடிமைத் தளையால் நாட்டு மக்கள் அல்லற் படும் நிலை அவருடைய அமைதியைக் கலைத் தது. காந்தியடிகள் தென்னப்பிரிக்காவில் வெள்ளை யரின் நிறவெறியை ஒடுக்கச் செய்துவந்த சத்தியப் போர் அவருடைய மனத்தைக் கவர்ந்தது.

நம் நாட்டிலும் மக்கள் பூச்சிகளைப் போல், சாதி, சமய வேறுபாடுகளைப் பெரிதென மதித்து, ஒற்றுமையின்றிக் கருத்தழிந்து வாழ்வதைக் கண்ணுற்றார். 1910-ஆம் ஆண்டு முதல் காந்தியடி களின் கொள்கைகளை வரவேற்றார். மகாத்மா எழுதிய நூல்களையும் நடத்திவந்த பத்திரிகைகளை யும் ஆவலுடன் படித்தார். காந்தியடிகளுடைய 'இந்து சுயராஜ்யம்' என்ற நூல் அவருடைய உள்ளத்தைக் கவர்ந்தது. அந்நூலைத் தாம்

படித்ததுமல்லாமல், பல நண்பர்களுக்கும் வாங்கிக் கொடுத்துப் படிக்கச் செய்தார். காந்தியடிகளைப் போன்றே அவரும் தாழ்த்தப்பட்டோரின் சார்பில் போராடினர்; சமூகப் பணியை மேற்கொண்டார்.

லோகமான்ய பால கங்காதர திலகர் என்ற பெரியார் மகாராஷ்டிர அந்தணர். அவர் நாட்டுக்குச் செய்துள்ள பணிகள் பலவாம். நாடு விடுதலை பெற வேண்டும் என்ற பெருநோக்குடன் அவர் 'ஹோம் ரூல்' அல்லது 'சுயவாட்சி' என்ற இயக்கத்தைத் தோற்றுவித்தார். திரு ஆசாரியார் அவ்வியக்கத்திற்குப் பேராதரவு அளித்தார். திலகரே அவருடைய அரசியல் குரு ஆவார். திலகர் சார்பில் அரும்பாடு பட்டுவந்த திரு சுப்பிரமணிய சிவா, சுப்பிரமண்ய பாரதியார், வ. உ. சிதம்பரம் பிள்ளை போன்றவர்கட்கு ஆசாரியார் பேருதவி புரிந்து வந்தார். தமிழ் நாட்டில் சில பெரியார்கள் மிதவாதக் கட்சிக்கு ஆதரவு தேட முயன்றனர். அது சம்பந்தமாகத் திரு சீனிவாச சாஸ்திரியார் என்ற மிதவாதத் தலைவர் சேலம் சென்றார். அவர் திரு ஆசாரியாரின் நண்பர். தமக்குப் பேராதரவு கிடைக்கும் என்று சாஸ்திரியார் நம்பினர். சேலத்தில் சாஸ்திரியார் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. திரு ஆசாரியாரும் அக்கூட்டத்திற்குச் சென்றார். ஆனல், அவர் மிதவாதிகளின் போக்கைக் கண்டித்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினர்; இது கண்ட சாஸ்திரியார் திகைப்படைந்து, தமது முயற்சி பலிக்காமல் சேலத்தினின்றும் மீண்டார்.

சூரமங்கலத்தில் வீராவேசம்

டாக்டர் அன்னி பெஸன்ட் அம்மையார் 1916-ஆம் ஆண்டில் தமது அரசியல் இயக்கத்தைத் தொடங்கினர். அவ்வியக்கம் 1917-ஆம் ஆண்டில் உச்சநிலையை யடைந்தது. சென்னை மாகாணத்தில் படித்தவர்களிடையே அந்த இயக்கம் பெருங் கிளர்ச்சியை யுண்டாக்கிற்று. எங்கும் புரட்சி மயம்; சுய ஆட்சி இயக்கம் கரைபுரண்டு அலையலையாகச் சீறி எழுந்தது. பெஸன்ட் அம்மையார், வாடியா, அருண்டேல் என்ற மூன்று தலைவர்களையும் கூனூரில் சிறை வைப்பதென அரசியலார் முடிவுசெய்தனர். சென்னையிலிருந்து கூனூர் செல்லுவதற்குச் சேலம் வழியாகத்தான் செல்ல வேண்டும். அவ் வழியாகக் கொண்டு செல்லப்படும் தலைவர்களை காணச் சேலம் நகரமாந்தர் ஆயிரக்கணக்கில் சூரமங்கலத்தில் கூடினர். சேலம் நகரமே சூரமங்கலத்தில் திரண்டு விட்டது. அரசாங்கத்தார் உடனே 'ரிஸர்வ் போலீஸ்' படையை வரவழைத்தனர்; அப்படை அணிவகுத்துத் துப்பாக்கியுடன் முனைந்து நின்றது. சேலம் சந்திப்பின் வாயில்கள் பூட்டப்பட்டன; போலீசார் மக்களை உள்ளே செல்ல விடவில்லை. ஆனல் திரள் திரளாக வந்துகொண்டிருந்த மக்களின் ஆவேசத்திற்கு முன்னல் இரும்புக் கதவுகளும், பூட்டுக்களும் என்ன செய்யும்? ஒரே விநாடியில் கதவுகளும் பூட்டுக்களும் பொடிப் பொடியாயின. அங்கிருந்த அதிகாரிகள் இன்ன செய்வதென்று தோன்ருமல் கலங்கினர். போலீஸ் படையினர் தமது துப்பாக்கிகளில் தோட்டாக்களைத் திணித்துத் தயாராக நின்றனர்.

மக்கள் எல்லாவிடங்களிலும் பரவி ரயில் பாதையின் மீதும் உட்கார்ந்து விட்டனர். "எந்த நிமிஷத்திலும் மக்கள் மனங் கொதித் தெழுவார்கள்; போலீஸ் படையினரும் அச் சமயத்தில் துப்பாக்கியைப் பிரயோகம் செய்ய வேண்டியிருக்கும்" என்று எங்கும் பேச்சாயிருந்தது.

ஸ்டேஷன் அதிகாரி அறையில் ஜில்லா கலெக்டரும் திரு ஆசாரியாரும் விவாதித்துக் கொண்டிருந்தனர். கலெக்டர் அதிகார தோரணையில் மிடுக்குடன் இருந்தார்; திரு ஆசாரியார் புன்சிரிப்புடன் ஆத்திரமின்றிப் பேசினார். "மக்கள்மேல் ஆயுதப் பிரயோகம் செய்வது சரியன்று; படுகொலை ஏற்படும் சமயங்களில் விவேகத்துடன் நடந்து கொண்டால், அதைத் தவிர்க்கலாகும். மக்கள் சுடப்பட்டால், யாருக்கு நஷ்டம்? மக்களைச் சுட அனுமதியளிக்கு முன் இதுபற்றித் தாங்கள் நிதானமாக யோசிக்க வேண்டும்" என்று வாதித்தார் திரு ஆசாரியார். "உற்சாகத்தில் மூழ்கிய மக்களின் ஆவேசத்திற்குத் தண்டனை அளிப்பது நேர்மையன்று; மக்களைச் சுட்டு வீழ்த்துவதனாலும் அடக்கு முறையினாலும் அரசாங்கத்தின் கௌரவம் அதிகரிக்காது; அரசாங்கத்திற்குக் கீர்த்தியும் கௌரவமும் அதிகரிக்கும் வகையில் மக்களின் கொந்தளிப்பைச் சமாளிக்க வேண்டும்" என்று திரு ஆசாரியார் வற்புறுத்தினார். அவருடைய சொல் நயத்திலும், வாதத் திறமையிலும், அமைதியிலும் கலெக்டரின் மனம் ஈடுபட்டது. ஆனால் ஓர் ஐயம் இருந்தது. "இரும்புக் கதவுகளைத் தகர்த்த கூட்டத்தினர், ரயில் வந்து சென்றவுடன்

வாளா இருப்பார்களா?" என்பதே அந்த ஐயம். தமது ஐயத்தை திரு ஆசாரியாரிடம் தெரிவித்தார் கலெக்டர். கூட்டத்தினரை அமைதியாக இருக்கும்படி தாம் செய்வதாக திரு ஆசாரியார் உறுதிமொழியளித்தார்.

புகைவண்டி சீறிக்கொண்டு வந்தது; மக்களின் ஆரவாரம் வானளாவி எழுந்தது; மக்கள் திரள் திரளாகக் குழுமியிருந்தனர். ரயில்பாதையின் மீதும் ஜனங்கள் இருந்ததனால் ரயில் நின்றுவிட்டது. "எள்ளுப் போட்டால் எள்ளு விழாது" என்றபடி மரங்களின் மேலும், சாளரங்களிலும், மாடிகளிலும் மக்கள் திரண்டிருந்தனர். பெஸன்ட் அம்மையார் கழுத்தில் சரமாரியாகப் பூமாலைகள் வந்து விழுந்தன. அம்மையார் வெளியே தோன்றினர்; மக்களின் ஆரவாரத்தையும் பூரிப்பையும் கண்டார்; மனமகிழ்ந்தார்; உடனே கைகூப்பிக் கண்களில் நீர் ததும்ப அந்த மாபெருங் கூட்டத்திலிருந்த மக்களுக்கு ஆசி கூறினர்; அடுத்த நிமிஷம் வண்டி புறப்பட்டது.

திரு ஆசாரியார் கலெக்டருக்கு அளித்த உறுதிமொழியின்படியே அங்குக் குழுமியிருந்த மாந்தர் அனைவரும் "ஜே" என்ற சத்தத்துடன் அவரவர் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர். எங்கும் அமைதி குடிகொண்டது. அன்று நகரில் அமைதியை ஏற்படுத்தியவர் திரு ஆசாரியாரே யாவர்.

அதன் பின்னர் ஏறக்குறைய மூன்று மாத காலம் தமிழ் நாடெங்கும் தொடர்ந்து கிளர்ச்சி நடந்து வந்தது. அம்மையாரை விடுதலை செய்ய

வேண்டும் என்ற அந்தக் கிளர்ச்சிக்குச் சேலத்தில் பேராதரவு இருந்து வந்தது; அக் கிளர்ச்சி திரு ஆசாரியாரின் தலைமையில் நடைபெற்றது. அதன் பயனாக மக்கள் மிகப் பெரிய வெற்றி பெற்றனர்; அம்மையாரும் அவருடைய தோழர்களும் விடுதலையடைந்தனர்.

இந்த இயக்கத்தின் பயனாக திரு ஆசாரியாரின் அரசியல் உணர்ச்சி அதிக வேகமும், தீவிரமும் அடைந்தது. 'நமது நாட்டின் அடிமைத் தளையை அகற்ற வேண்டும்' என்ற எண்ணம் மேலோங்கி நின்றது.

காஞ்சியில் கீர்த்தி

1918-ஆம் ஆண்டு மே மாதம் 9-ஆம் தேதியன்று காஞ்சிமா நகரில் **தமிழ் மாகாண அரசியல் மகாநாடு** நடைபெற்றது. அதன் தலைமை பதவிக்குக் கவிதைக் குயில் **திருமதி சரோஜினி தேவியார்** தேர்ந்தெடுக்கப்பட்டார். அம் மகாநாட்டில் திரு ஆசாரியார் கலந்து கொண்டார். அப்பொழுது முதலாவது உலகப் போர் நடந்து கொண்டிருந்த காலம். பெஸன்ட் அம்மையாரும் அந்த மகாநாட்டில் கலந்து கொண்டார். "அன்னிய ஆட்சியின் அடிமைத் தளையினின்றும் நாம் விடுதலை பெற வேண்டும்; 'இந்திய நாடு இந்தியர்க்கே' என்ற கொள்கையை ஆளும் குழுவினர் ஏற்க வேண்டும்; இன்றேல் இப் போரில் நாம் ஒத்துழைக்கக் கூடாது" என்பது திரு ஆசாரியாரின் வாதம்; அதுவே திலகர் பெருமானின் கொள்கையாகும். பெஸன்ட் அம்மையார் கொண்டு வந்த தீர்மானம் அதற்கு எதிராக இருந்

தது. 'நிபந்தனைகள் இன்றியே ஆளும் வர்க்கத்தினர்க்கு இந்தியர் உதவி புரிய வேண்டும்' என்பது அம்மையாரது தீர்மானத்தின் கருத்தாகும்.

திரு ஆசாரியாருக்கும் அவருடைய தோழர்களான திரு சத்தியமூர்த்தி போன்றவர்கட்கும் அத்தீர்மானம் பிடிக்கவில்லை. திரு சத்தியமூர்த்தி அத்தீர்மானத்தை எதிர்த்து ஒரு திருத்தம் கொண்டு வந்தார். முதல் தீர்மானத்தைப் பல மிதவாதிகள் ஆதரித்தனர். தாம் கொண்டுவந்த தீர்மானத்தை மகாநாடு ஏற்கவேண்டுமென்று அம்மையார் அரியதொரு சொற்பொழிவு ஆற்றினர்; ஆவேசமும் அன்பும் வீரமொழிகளும் கலந்த அச்சொற்பொழிவு பலருடைய உள்ளத்தைக் கவர்ந்தது. திரு சத்தியமூர்த்தியின் எதிர்வாதமும் போற்றத்தக்கதாக அமைந்திருந்தது. இரு தீர்மானங்களுக்கும் சமரசம் செய்து ஒரு நடுநிலைமையான முடிவை ஏற்க முயற்சிகள் நடைபெற்றன; ஆயினும் சமரசம் ஏற்பட முடியவில்லை. வாக்குகள் கணக்கிடப்பட்டபொழுது திருத்தத்திற்கும், முதல் தீர்மானத்திற்கும் சரிசமமான வாக்குகள் கிடைத்தன. தலைவர் தமது வாக்குரிமையை முதல் தீர்மானத்திற்கு அளித்து, அதுவே மகாநாட்டின் முடிவு என்று அறிவித்து விட்டார். திருத்தம் தோற்ற போதிலும் திரு ஆசாரியாரின் நுண்ணறிவும், வாதத் திறமையும் அன்று வெள்ளிடை மலைபோல் காணப்பட்டன. ஆயினும், இச் சம்பவத்தின் பின்னர் பெஸன்ட் அம்மையாரின் செல்வாக்கு அரசியல் உலகினின்றும் அகன்றது.

டாக்டர் நாயுடு வழக்கு

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம்; நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்" —குறள்.

டாக்டர் வரதராஜுலு நாயுடு என்பவர் சிறந்த அரசியல் வாதி; சேலம் நகரவாசி; நாடு நலம்பெற நற்பணி செய்பவர். அவர் மதுரையில் நடத்திய சொற்பொழிவின் பயனாக, அரசியலார் அவர்மீது 'மன்னர்பிரான்மீது துவேஷம்' என்ற குற்றத்தைச் சாட்டினர்; அதன்படி வழக்குத் தொடுத்தனர்.

மதுரை மாநகரில் வழக்கு விசாரணை நடந்தது. அது தமிழ்நாட்டில் பெரும் பரபரப்பை உண்டாக்கியது. பொதுமக்கள் அவ்வழக்கிற்கு உதவும் வண்ணம் நிதி திரட்டிக் கொடுத்தனர். டாக்டர் நாயுடு அவர்களின் சார்பில் திரு ஆசாரியார் வழக்காடினர். அச்சமயம் ஆளும் வர்க்கத்தினரின் தாண்டவம் நீதிஸ்தலத்தில் அம்பலமாயிற்று. போலீஸார் சார்பில் பல சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். அவர்களைத் திரு ஆசாரியார் குறுக்கு விசாரணை செய்தார். அச்சமயங்களில் எல்லாம் ஆசாரியாரை 'உட்காரு, உட்காரு' என்று நீதிபதி உத்தரவிட்டு வந்தார். இரண்டு தினங்கள் இவ் வுத்தரவுகளுக்குப் பணிந்தார் திரு ஆசாரியார். மூன்றும் நாள் நீதிஸ்தலத்தில் திரு ஆசாரியார் எழுந்தார்; நீதிபதியை நோக்கி ஒரு விண்ணப்பம் செய்துகொண்டார்: "நீதிபதியிடம் எனக்குமிக்க மரியாதை உண்டு. இத்தகைய பெருங் குற்றத்தை விசாரிப்பது இந்த நீதிபதிக்கு முதல் தடவையாகும்; சர்க்கார் சார்பில் வாதம்புரியும் வழக்

கறிஞருக்கும் அவ்வாறே இது முதல் அனுபவம்; எனக்கும் இதுவே முதல் முறை. குற்றவாளிக்கும் இதுவே முதல் விசாரணை. இத்தகைய கடினமான சூழ்நிலையில் நான் என் கடமையை ஆற்றுகிறேன். அவ்வாறிருக்க, நீதிபதி அவர்கள் என் குறுக்கு வினாக்களுக்குச் சந்தர்ப்பமளிக்காமல் என்னை உட்காரச் சொல்லுவது நீதியன்று; பாடசாலை மாணவனைப் போல் என்னை நீதிபதி நடத்துவது இவ்விடத்தின் கண்ணியத்துக்கு உகந்ததன்று" என்றார். அது கேட்ட நீதிபதி தாம் செய்தது பிழை என்று உணர்ந்து ஆசாரியாரிடம் மன்னிப்புக் கோரினார்; தமது வருத்தத்தையும் தெரிவித்துக் கொண்டார்.

வழக்கு தொடர்ந்து நடைபெற்றது. இத்தகைய வழக்குகள் தொடருமுன் மாகாண சர்க்காரின் அனுமதி பெற வேண்டும் என்பது சட்டம். "சட்ட பூர்வமான முறையில் அத்தகைய உத்தரவு பெறவில்லை" என்றார் திரு ஆசாரியார். சர்க்கார் வக்கீல், "உத்தரவு சரியான முறையில்தான் உள்ளது" என்று எதிர்வாதம் செய்தார். "சரி; ஆனால் என்னுடைய மறுப்பை மட்டும் குறித்துக் கொண்டு வழக்கை நடத்தலாம்" என்று பதிலளித்தார் திரு ஆசாரியார். ஆசாரியார் உத்தரவு வேண்டும் என்று வற்புறுத்தி யிருந்தால், உடனே தந்தி மூலம் உத்தரவு கிடைத்திருக்கும். ஆனால் அவ்வாறு செய்வதை அவர் விரும்பவில்லை. கீழ் நியாயஸ்தலத்தில் எடுத்துக்காட்டாத மறுப்பை மேல் இடத்தில் கிளப்பக்கூடாது என்பது சட்ட முறை. ஆகையால் மறுப்பை இலேசாகச் சுட்டிக் காண்பித்தார். கீழ்

மன்றத்தில் நாயுடு அவர்களுக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

சென்னை உயர்தர நீதிமன்றத்தில் புனராலோசனை செய்ய விண்ணப்பம் கொடுத்தார் திரு வரதராஜுலு நாயுடு. டாக்டரின் சார்பில் பிரபல வழக்கறிஞரான திரு கே. சீனிவாச ஐயங்கார் தோன்றினார். "சர்க்கார் உத்தரவு சரியான முறையில் இல்லை" என்பதே அவருடைய வாதம். அதன் பயனாக நீதிபதி டாக்டரை விடுதலை செய்துவிட்டார். திரு கே. சீனிவாச ஐயங்கார் நீதிமன்றத்தில் தமது முடிவுரையில் தமக்கு அரும்பெரும் யோசனைகளைக் கூறிய திரு ஆசாரியாரின் திறமையை வெகுவாகப் புகழ்ந்து பேசினார்.

தாஸரின் புகழ்மாலை

1918-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாத இறுதியில் பம்பாய் நகரில் விசேஷ காங்கிரஸ் மகாநாடு கூடிற்று. திரு ஆசாரியாரும் வேறு பலருடன் அங்குச் சென்றார். எல்லா மாகாணங்களிலிருந்தும் பல தலைவர்கள் வந்திருந்தனர். அரசியலார் அவ்வாண்டில் வெளியிட்ட அரசியல் சீர்திருத்தம் பெரும் சர்ச்சைக்குள்ளாகியது. அதில் மாறுதல் வேண்டாத மிதவாதிகள் பலர்; சில அம்சங்களில் மாறுதல் கோரியவர் பலர்; அச்சீர்திருத்தத்தையே ஏற்கக் கூடாது என்றவர் இன்னும் சிலர்; ஆகப் பிரதிநிதிகள் பல வேறுபட்ட கருத்துடையவர்களாக இருந்தனர். கடுமையான மனவேற்றுமைகள் காணப்பட்டன. ஒரு முடிவுக்கும் வர வழி காணாமல் தலைவர்கள் தவித்தனர். திரு ஆசாரியார் அவ்வாதங்களில்

கலந்துகொள்ள வில்லை. ஆனால் தேசபந்து தாஸர் திரு ஆசாரியாருடைய நுண்ணறிவை அறிந்தார். உடனே அவரிடம் சென்றார். அதன் பயனாகச் சில மாறுதல்கள் தீர்மானத்தில் செய்யப்பட்டன ; யாவரும் அங்கீகரிக்கும் வண்ணம் அம்முடிவு அமைந்தது ; தாஸரின் மனமும் பூரித்தது.

தாஸரின் சொந்த மாகாணமான வங்கத்திலிருந்து வந்த பிரதிநிதிகள் மட்டும் தீர்மானத்தை எதிர்த்தனர். தாஸர் சபையிலிருந்த தமது வங்க நண்பர்களை நோக்கி "வங்கம் என்னைப் பின்பற்றாவிடில் அதுபற்றி எனக்குக் கவலையில்லை. பல நாட்களாக இத் தீர்மானத்தை யாவரும் அங்கீகரிக்கக் கூடிய வகையில் மாற்ற முயன்றோம்; அது எங்களால் இயலவில்லை. இதோ இங்கிருக்கும் திரு ஆசாரியாரிடம் சென்றேன். சென்னை மாகாணத்தைச் சேர்ந்த இவர் அத்தீர்மானத்தில் இங்கும் அங்கும் சில காற்புள்ளிகளையும், அரைப்புள்ளிகளையும், முற்றுப் புள்ளிகளையும் அமைத்தார்; அங்கும் இங்கும் சில சொற்களை நீக்கினார்; சில சொற்களைச் சேர்த்தார். சில நிமிஷங்களில் யாவரும் வியக்கும் வண்ணம் ஒரு தீர்மானத்தை உருவாக்கினார்" என்று திரு ஆசாரியாரின் மதிநுட்பத்தை வியந்து போற்றினார். அத்தீர்மானமே இறுதியில் நிறைவேறியது.

திரு ஆசாரியாரின் மதிநுட்பத்தை அன்று முதல் பலர் உணர்ந்தனர். அவர் சேலத்தை விட்டு நீங்கிச் சென்னையில் வசிக்க வேண்டும் என்று பலர் விரும்பினர். தலைசிறந்த ஆங்கிலப் பத்திரிகையான "ஹிந்து" வின் பதிப்பாளராக இருந்த திரு எஸ். கஸ்தூரிரங்க ஐயங்கார் அவ்வாறு பொருள்பட

ஆசாரியாருக்குக் கடிதம் எழுதினர். 1919-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் ஆசாரியார் சென்னையில் குடியேறி, சென்னை உயர்தர நீதி மன்றத்தில் வழக்கறிஞராகத் தம்மைப் பதிவு செய்துகொண்டார்.

---

9. காந்திஜியும் இராஜாஜியும்

"உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன்.

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று." —குறள்.

1919-ஆம் ஆண்டில் இந்திய அரசியல் வானில் ஒரு புது நட்சத்திரம் தோன்றியது; விடுதலைப் போரில் ஒரு புது அத்தியாயம் ஆரம்பமாயிற்று. தென்னாப்பிரிக்காவில் வெள்ளையரின் நிறவெறியின் பயனாக அதை எதிர்த்துச் சத்தியப்போர் நடத்தி, உலக மக்களின் கவனத்தைக் கவர்ந்த காந்தியடிகள் இந்திய அரசியல் அரங்கத்தில் புகுந்தார்.

இந்தச் சம்பவத்திற்குத் தூண்டுகோலாக இருந்தது 'ரௌலட் சட்டம்' ஆகும். இந்தியாவில் பல அரசியல் புரட்சிச் சதியாலோசனைகள் நடக்கின்றன வென்றும், அவற்றை அடக்கும் முறைகளைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் நீதிபதி ரௌலட் என்ற ஓர் ஆங்கிலேயரைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவை ஆங்கில அரசியலார் நியமித்தார்கள். அக் கூட்டத்தினர் பயங்கரப் புரட்சி இயக்கங்களை அடக்குவதற்கென்று ஒரு சட்ட மியற்றச்

போர்சு செய்தனர். அந்தப் போர்சை ஏற்றுக் கொண்டு இந்திய அரசாங்கத்தினர் இந்தியா சட்ட சபையில் ஓர் அடக்குமுறைச் சட்டம் கொண்டு வந்தனர். அதுவே 'ரௌலட் சட்டம்' என்று வழங்கலாயிற்று.

நாட்டுத் தலைவர்கள் அச்சட்டத்தைப் பலமாக எதிர்த்தனர். இந்தியாவில் நடந்துவந்த விடுதலை இயக்கங்களை நசுக்கி ஒடுக்க அச்சட்டம் அதிகார வர்க்கத்தினருக்கு உதவியாயிருக்கும் என்று தேசத் தலைவர்கள் கருதினார்கள்; அச்சட்டத்தைக் கண்டனம் செய்து நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் தீர்மானங்களை நிறைவேற்றினார்கள். அதன் பின்னர் என்ன நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று ஒருவருக்கும் தெரியவில்லை.

1757-ஆம் ஆண்டில் நடந்த **பிளாஸிச் சண்டை** தான் ஆங்கில ஆட்சிக்கு வித்து ஆகும். அதன் பின்னர் **ஜான்ஸி ராணி, தேவி இலட்சுமிபாய்** அவருடைய தோழர்களான **நானாபத்மநாபன், தாந்தியாதோபி** என்பவர்கள் ஆகியோர் அந்நிய ஆட்சியினின்றும் நம் தாய்நாட்டை மீட்க, ஆயுத பலத்தைக் கொண்டு ஆங்கிலேயருடன் போரிட்டனர்; ஆனால் அவர்கள் வெற்றி காணவில்லை.

1906-ஆம் ஆண்டில் வங்காளம் இரண்டு பிரிவுகளாக்கப்பட்டது; அதை எதிர்த்து வங்க மக்கள் கிளர்ந்து எழுந்தனர். நாட்டின் பல பகுதிகளிலும் '**சுதேசி இயக்கம்**' தோன்றியது; இதனாலும் போதிய பலன் கிட்டவில்லை. இப்புரட்சிகள் யாவும் பலாத்காரத்தை அடிப்படையாகக் கொண்டவை.

ஆனால் காந்தியடிகள் 1919-ல் தோற்றுவித்த போர் முறை, சத்தியத்தையும் அஹிம்சையையும் அடிப்படையாகக் கொண்டது. அம்முறையை நாட்டு மக்களுக்கு அவர் சிபார்சு செய்தார். அது வரை அரசியல் விமோசனத்திற்கு மக்கள் விண்ணப்பங்களையும், தீர்மானங்களையுமே நம்பியிருந்தனர். காந்தியடிகள் '**சாத்வீக எதிர்ப்பு**' என்ற அறப் போர் முறையை உபதேசித்தார். '**ரௌலட் சட்ட**'த்தை எதிர்க்கச் சாத்விக முறையில் '**சத்யாக்கிரகம்**' மேற்கொள்ளும்படி அடிகள் மக்களுக்கு வழி காட்டினர். இது ஒரு புதுமையான கிளர்ச்சி முறை. இம்முறை இந்திய மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தது.

சென்னையில் சந்திப்பு

ரௌலட் சட்டத்தை எதிர்க்கும் முறையில் தாம் வகுத்த திட்டத்திற்கு ஆதரவு தேடவேண்டி, காந்தியடிகள் நாட்டிலுள்ள பல நகரங்களுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்தார். மக்களின் உணர்ச்சியைத் தகுந்த முறையில் பயன்படுத்தி அரசாங்கத்தை எதிர்த்துப் போராட காந்தியடிகள்தான் வழி காட்டக் கூடியவர் என்று முடிவு செய்தார் திரு ஆசாரியார்; உடனே கஸ்தூரி ரங்க ஐயங்காரைத் தூண்டி, காந்தி யடிகளைச் சென்னைக்கு வரும்படி அழைக்கு மாறு விண்ணப்பம் அனுப்புவித்தார். காந்தியடிகளும் அவ்வழைப்புக்கு இணங்கி, மார்ச்சு மாத மத்தியில் தமது நண்பர் திரு மகாதேவ் தேசாயுடன் சென்னைக்கு வந்தார்; அப்பொழுது அடிகள் திரு ஆசாரியாரின் விருந்தினராக அவருடைய மாளிகை

யில் தங்கினர். ஆனால் திரு கஸ்தூரிரங்க ஐயங்காருடைய அழைப்பின் காரணமாகவே காந்தியடிகள் சென்னைக்கு வந்ததால், தம்மைப் போலவே திரு ஆசாரியாரும் ஒரு விருந்தாளி என அவர் கருதினர். திரு ஆசாரியாரின் தன்னடக்கமும் அவ்வாறே அவரைக் கருதும்படி செய்தது. உண்மையை அறிந்த திரு மகாதேவ தேசாய் அடிகளுக்கு அதைத் தெரிவித்தார்; காந்தியடிகள் திரு ஆசாரியாரின் பணிவையும், அடக்கத்தையும், மதி நுட்பத்தையும் கண்டு வியப்புற்றார். காந்தியடிகளும் திரு ஆசாரியாரும் அச்சமயம் அடிக்கடி கண்டு களித்தனர்; இருவருடைய மன நிலைகளும் கொள்கைகளும் ஒன்றுபட்டன. இவ்விரு பெருந்தலைவர்களும் எதிர்காலத்தில் சிறந்த நண்பர்களாக ஆனதற்கு இச்சந்திப்பே முக்கிய காரணமாகும்.

காந்தியடிகள் தோற்றுவித்த சத்தியாக்கிரக இயக்கத்தின் தன்மைகளையும், மேன்மையையும் நன்கு அறியும் பொருட்டுத் திரு ஆசாரியார் தமது இல்லத்தில் ஒரு மகாநாடு கூட்டினர். அம்மகா நாட்டில் சென்னையிலும் வெளியூர்களிலுமிருந்த பல தலைவர்கள் கலந்துகொண்டனர். அடிகள் அவர்களுக்குத் தமது சத்தியப்போரின் தத்துவங்களை விரிவாக எடுத்து விளக்கினர். அது ஒரு நவீன முறையானபடியால், பலருக்கு அதன் உட்பொருள் விளங்கவில்லை; ஆனால் திரு ஆசாரியார் அதை மிகவிரைவில் உணர்ந்துகொண்டதுமன்றி, மற்றவர்கட்கும் காந்தியடிகளுடன் கூடச் சேர்ந்துகொண்டு விளக்கினர். இது காந்தியடிகளுக்கே வியப்பாக இருந்

தது. சேலம் திரு சி. விஜயராகவாசாரியார் அடிகளி டம் சென்று "பாபுஜி, தாங்கள் சத்தியாக்கிரகத் தத்துவங்களை விளக்கி ஏதாவது நூல்கள் இயற்றி யிருக்கிறீர்களா? திரு ஆசாரியார் அவற்றைப் படித் துள்ளார் போலும்; இன்றேல், அவர் எவ்வாறு அவற்றை நன்கு உணர்ந்திருப்பார்?" என்று வின வினர். அடிகள் புன்னகை புரிந்து, "நான் ஒரு நூலும் எழுதவில்லை; திரு ஆசாரியாரின் விளக்கம் எப்படித் தோன்றியது என நான் அறியேன்" என்று விடையளித்தார்.

இதன் பின்னர், சென்னையில் "சத்தியப்போர்க் கழகம்" ஒன்று நிறுவப்பட்டது.

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்

என்பதற்கிணங்க, அக் கழகத்தின் அமைச்சராக திரு ஆசாரியாரே ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

அடிகளும் அப்பதவி பெற்ற ஆசாரியாருக்குத் ஆசி கூறினர்.

பாஞ்சாலப் படுகொலை

முதலில் ரௌலட் சட்டம்; பின்னர் அடக்கு முறை; அதன் பின்னர் பீரங்கிப் பிரயோகம். நாட்டு மக்களின் மனநிலை கொந்தளித்துக் கொண் டிருந்தது. காந்தியடிகள் 'ஒத்துழையாமை'ப் போராட்டத்தைத் தொடங்கினர். தென்னாட்டில் திரு ஆசாரியார் அதற்குப் பேராதரவு அளித்தார். கல்கத்தாவிலும் பின்னர் நாகபுரியிலும் நடை

பெற்ற காங்கிரஸ் மகாசபைக் கூட்டங்களில் 'ஒத்துழையாமை' மேற்கொள்ளப்பட்டது; ஆசாரியார் அவ்விடங்களிலும் காந்தியடிகளின் துணைவராக இருந்து அருந்தொண்டு புரிந்தார்.

சாத்துவிக எதிர்ப்புத் தொடங்குமுன், 1919-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9-ஆம் தேதியன்று நாடெங்கும் மக்கள் உண்ணுவிரதம் மேற்கொள்ளும்படியும், வேலை நிறுத்தம் செய்யும்படியும், வியாபார நிலையங்களை மூடும்படியும், மாலையில் பொதுக்கூட்டங்கள் நடத்த வேண்டுமென்றும் அடிகள் ஒரு திட்டம் வகுத்தார். இமயம் முதல் குமரிவரை அன்று அவ்வாறே நடந்தேறியது. ஒவ்வொரு முக்கியமான நகரிலும் என்றும் கண்டறியாத வகையில் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன.

ஆனல் பாஞ்சாலத்தில் சில இடங்களில் அன்று கலவரம் நடந்தது. அரசாங்க நிர்வாகிகளின் அக்கிரமச் செயல்களே அக்கலவரங்களுக்குக் காரணம். அம்மாகாணத்திற்கு ஓட்வயர் என்பார் கவர்னர். அவர் மக்களின் மனக்கொதிப்பைக் கண்டு, மாகாணத்தில் கடுமையான இராணுவச் சட்டத்தைப் பிரயோகித்தார். 13-ஆம் தேதியன்று அச்சட்டத்தை மீறிப் பெருங்கூட்டம் ஒன்று 'அமிருதசரஸ்' என்ற நகரில், "ஜலியன்வாலாபாக்" தோட்டத்தில் நடந்தது. அத்தோட்டத்தின் நான்கு பக்கங்களிலும் சுற்றுச் சுவர்கள் உண்டு; வாயிற்புறம் ஒன்றுதான்; உள்ளே திரளான மக்கள் குழுமியிருந்தனர். அக்கூட்டத்தைக் கலைப்பது என்று ஜெனரல் டயர் என்ற இராணுவ அதிகாரி முடிவு செய்தார்; வாயிற்

புறம் நின்றுகொண்டு மக்கள்பேரில் இராணுவ பீரங்கிகள் கொண்டு சுட்டார். மக்கள் நாலாபக்கங் களிலும் சிதறி ஓடினர்கள்; சுவர் ஏறிக் குதித்து ஓடி னர் பலர்; சுமார் அறுநூறு பேர் அந்த விடத்தி லேயே உயிர் நீத்தனர்; ஆயிரக்கணக்கில் மக்கள் காயமடைந்தனர்.

ஒத்துழையாத் திட்டம்

"அன்பின் வழியது உயிர்நிலே; அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு." —குறள்.

அடிமை வாழ்விளே அகற்ற அடிகள் தோற்று வித்தவழி அன்புவழியாகும். "அந்நியர் ஆட்சி நம் மக்களே அடிமை கொண்டுவிட்டது; ஆனல் அதை எதிர்ப்பது எளிதன்று. பலாத்கார முறையினல் எதிர்ப்பது மிருகத்தனமானசெயலாகும். பகுத்தறி வுள்ள மக்கள் மிருக பலத்தையே பயன்படுத்தமாட் டார்கள். ஆத்ம பலமே சிறந்தது; பகைவனே வெறுக்காதே; அவனுக்கு இடர் செய்யாதே; அவ னுக்கு எதிராக மிருக பலத்தை உபயோகிக்காதே; அவனுடன் ஒத்துழைக்காதே; எந்த வகையான இடர்கள் நேரினும் மனங் கலங்காதே; குன்றென நிமிர்ந்து நில்; ஏற்றுக்கொள்ளும் லட்சியத்திற்கா கத் தியாகம் செய்; அறவழி நட" என்பதே காந்தி யடிகளின் போதனே. தமிழ் மறையின் திருவாக்குக் குக் காந்தியடிகளின் போதனே ஒரு விளக்கமாகும்.

அடிகளேப் பின்பற்றினர் திரு ஆசாரியார். மூன்று முக்கியமான இயக்கங்கள் தோற்றுவிக்கப் பட்டன. அவையாவன: முதலாவது, மாணவர்கள்

அந்நிய ஆட்சி வர்க்கத்தினர் நிர்வாகத்தில் நடைபெறும் பள்ளிகளிலிருந்து வெளியேறவேண்டும்; இரண்டாவது, அரசாங்கத்தாரின் நியாயஸ்தலங்களைப் பகிஷ்கரிக்கவேண்டும்; மூன்றுவது, அந்நிய ஆட்சியினர் தோற்றுவித்த சட்டசபைகளை விலக்க வேண்டும் என்பன. நம் நாட்டுக் கலாசாலைகளில் படித்து வெளிவரும் மாணவர்களே பின்னல் அரசாங்கத்தின் ஊழியர்களாகிருர்கள்; அவர்கள் அப் பள்ளிகளில் படிப்பதையே நிறுத்திவிட்டால், நிர்வாகிகள் எவ்வாறு கிடைப்பர்? நீதிமன்றங்களைப் புறக்கணித்தால், அரசாங்கத்தின் கௌரவம் எங்கே? சட்டம் இயற்றும் சபைகளை விலக்கிஞல், மக்களுடைய ஒத்துழைப்பால்தான் நாங்கள் ஆட்சி புரிகின்ருேம் என்று அரசாங்கம் எவ்வாறு சொல்ல முடியும்? அடிகள் வகுத்த திட்டம் இதுவரை உலகில் எந்நாட்டிலும் வகுக்கப்படாத ஒன்று.

அத் திட்டத்தை மக்கள் ஏற்கும்படி நாட்டில் பெருங் கிளர்ச்சி உண்டாயிற்று. மேலும், நமக்கு வேண்டிய ஆடைகளுக்கு அந்நிய நாட்டு ஆலைகளை நம்பலாகாது என்று கருதி, நாமே நூல்நூற்று நெசவுத் தொழிலைப் பெருக்கத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. மதுபானப் பழக்கத்தை அறவே விடும்படி மக்களுக்கு இடைவிடாது எடுத்துச் சொல்லப்பட்டது. நாட்டில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஒற்றுமை வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது. மக்களில் ஒரு சாராரைத் தீண்டாதார் என விலக்குவது பெரும் பிழையாகும் என்பது அடிகளின் மற்ருெரு திட்டமாகும்.

திரு ஆசாரியார் தமது தோழர்களுடன் தமிழ் நாடெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்து, அத் திட்டத்தைப் பிரசாரம் செய்தார். மக்கள் அதை உற்சாகத்துடன் வரவேற்றனர். பல மாணவர்கள் கல்விச் சாலைகளினின்றும் வெளியேறினர்; பல வழக்கறிஞர்கள் நீதிஸ்தலங்களை விட்டு விலகினர்; சட்டசபைகளைத் துறந்தனர் பலர். திரு ஆசாரியாரும் தமது வழக்கறிஞர் தொழிலை விடுத்தார். அச் சமயம் அவருடைய மூத்த புதல்வர் திரு கிருஷ்ணசாமி பி.ஏ. முதல் வகுப்பில் பச்சையப்பன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார்; இரண்டாவது குமாரர் திரு இராமசுவாமி என்பவர் இண்டர்மீடியட் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார். அவ்விருவரும் ஆசாரியாருடைய விருப்பத்திற் கிணங்க, கலாசாலையை விட்டு விலகினர். சொல்வதொன்று செய்வதொன்று என்ற வேற்றுமை ஆசாரியாரிடம் கிடையாதன்றே!

முதல் சிறைவாசம்

1920-ஆம் ஆண்டில் காங்கிரஸ் மகாசபையின் பொதுக் காரியதரிசிகளில் ஒருவராக திரு ஆசாரியார் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1921-ஆம் ஆண்டின் இறுதியில் தமிழ் நாட்டில் பலவிடங்களில் ஒத்துழையாமைத் திட்டத்தைத் தீவிரமாகப் பிரசாரம் செய்தார்; அவ்வாண்டின் இறுதியில் பிரசார நிமித்தம் வேலூர் சென்றார். அங்கே அவரும் அவருடைய தோழர்களான ஆரணி திரு சுப்பிரமணிய சாஸ்திரியாரும், திரு வி. கலியாணசுந்தர முதலியாரும் பொதுக்கூட்டங்களில் பேசக்கூடாது என்று அதிகாரிகள் தடை விதித்தனர். தடை உத்தரவை மீறிச்

சொற்பொழிவு ஆற்ற ஆசாரியார் உறுதி கொண்டார். முன்பே ஒரு தேதியைக் குறிப்பிட்டு, அந் நாளில் தடை யுத்தரவை மீறப்போவதாக அதிகாரிகளுக்கு எழுதினர். 1921-ஆம் வருஷம் டிசம்பர் 21-ந் தேதியன்று மீண்டும் வேலூர் சென்று அந் நகர்ப் புறத்துள்ள கோட்டை மைதானத்தில் மாபெரும் கூட்டத்தினரிடையே திரு ஆசாரியார் சொற்பொழிவாற்றினர். அதன் பயனுக மூன்று மாதம் சிறை வாசம் பெற்ருர்.

சிறைவாசம்; அது களவும் கொலேயும் புரியும் குற்றவாளிகளுக்கன்ருே? ஆனல் அஹிம்சை முறையில், காந்தியடிகள் வகுத்த சத்தியப்போரின் கொள்கைகளுக்கு இணங்க, சட்டத்தை மீறிச் சிறை சென்றது தமிழ்நாட்டில்,—ஏன் இந்தியாவிலேயே—இதுவே முதன் முறையாகும். இச்செய்தி கேட்ட காந்தியடிகள் அகமகிழ்ந்து ஆசாரியாருக்கு ஆசி அனுப்பினர்.

சிறையில் தமது அனுபவங்களே நாள்தோறும் குறித்து வந்தார் ஆசாரியார். அவை ஆங்கிலத்தில் எழுதப்பட்டன. பின்னர் அவை "சிறைக் குறிப்புகள்" என்ற தலேப்புடன் புத்தக உருவில் வெளி வந்தன. பிறகு தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டன. இஃதன்றி, இவர் சிறையிலிருந்தபோது ஸோக்ரதர் (ஸாக்ரடீஸ்) என்ற கிரேக்கநாட்டு ஞானியின் வாழ்க்கை வரலாற்றினேத் தமிழிலேயே எழுதினர்; இது ஓர் அழகிய சிறு நூல்; இதுவே ஆசாரியார் முதன்முதலாக எழுதிய தமிழ் நூலாகும்.

சிறை புகுந்தபொழுது, ஆசாரியார் காச நோயால் வருந்திக் கொண்டிருந்தார். அதனேடு

காலில் கட்டியும் சிரங்கும் அவரை வருத்தின. ஆயினும் அந் நிலையிலும் சிறை புகுவதே தமது பாக்கியமென்று கருதினார்; மனம் கலங்கவில்லை. "என் கௌரவம் பெரிது. ஒரு நியாயமான காரணத்திற்காகச் சிறை புகும் பாக்கியம் எனக்குக் கிட்டியுள்ளது" என்றே அவர் கருதினார். 1922-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 20-ஆம்தேதி அவர் விடுதலை பெற்றார். அவர் விருப்பத்துக்கு விரோதமாகச் சிறைவாயிலில் அவருக்குப் பெருத்த வரவேற்பு நடந்தது; சென்னை திரு எம். சிங்காரவேலுச் செட்டியாரும் (இப்போது இவர் உயிருடனில்லை) ஈரோடு திரு ஈ. வே. ராமசாமி நாயகரும் இராஜகோபாலாசாரியாரை எதிர்கொண்டு அழைத்தனர். ஆயினும் அவர் பெருமை கொள்ளவில்லை; மிகுந்த அடக்கத்துடனே இருந்தார்; அடக்கமே அன்னாரின் தனிப்பண்பு அன்றோ?

கயையில் கண்ட வெற்றி

இராஜாஜி சிறையிலிருந்து வெளிவந்த இரண்டு நாட்களுக்குப் பிறகு அதாவது 1922-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 22-ஆம் தேதியன்று, காந்தியடிகள் கைது செய்யப்பட்டு, ஆறு ஆண்டுகள் சிறைவாச தண்டனை பெற்றார். சிறை புகுமுன், தாம் பதிப்பித்து வந்த "**யங் இந்தியா**" என்ற பத்திரிகைக்கு ஆசாரியார்தான் ஆசிரியராக இருக்கத் தக்கவர் எனக் கருதி, அவரையே நியமித்தார்.

1922-ஆம் ஆண்டில் சட்டமறுப்பு இயக்கத்தின் பலாபலன்களை உணர வேண்டிக் காங்கிரஸ் சார்பில் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது; அதில்

ஆசாரியாரும் ஓர் அங்கத்தினர். அக் குழுவினர் நாடு முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்து, ஓர் அறிக்கை வெளியிட்டனர். அதில் ஒரு சாரார் சட்ட சபைகளைக் கைப்பற்றி, அரசாங்கத்தின் சட்டங் களை உடைத்தெறிய வேண்டும் என்று விரும்பினர்; மற்றொரு சாரார் காந்தி மகான் வகுத்த திட்டத்தின் படியே சட்ட சபைகளுக்குச் செல்லக் கூடாது என்று வாதித்தனர். ஆசாரியார் சட்டசபைகளைக் கைப்பற்றுவதைப் பெரிதும் ஆட்சேபித்தார்; அவ ருக்கு எதிராகப் **பண்டித மோதிலால் நேரு** (பண் டித ஜவாஹர்லால் நேருவின் தந்தை) கல்கத்தா பிரபல பாரிஸ்டர் **திரு சித்தரஞ்சன தாஸர்** போன்ற தலைவர்கள் சட்டசபைகளைக் கைப்பற்ற வேண்டும் என்று வற்புறுத்தினர்கள்.

1922-ஆம் ஆண்டின் இறுதியில் பீஹார் மாகா ணத்தில் **கயை** என்ற நகரில் **காங்கிரஸ் மகாசபை** கூடிற்று. காந்தியடிகளின் திட்டத்தில் மாறுதல் ஒன்றும் கூடாது என்று ஆசாரியார் வாதித்தார். "மகாத்மா சிறையில் இருக்கும்போது அவருடைய திட்டத்தை மாற்றுவது சரியன்று; அவர் விடுதலை யடைந்த பின்னர் அதுபற்றி ஆலோசனை செய்ய லாம்" என்பது அவர் கொள்கை. அவருடைய மதி நுட்பமும், வாதத்திறமையும் குன்றின் மேலிட்ட விளக்குப்போல் பிரகாசித்தன. கடைசியில் ஆசாரி யாரின் கட்சி வெற்றியடைந்தது. அச் சமயத்தில்-தான் ஆசாரியார் வட நாட்டில் புகழ் பெற்றார்; பல தலைவர்களுடைய நட்பைப்பெற்றார். அதுமுதல் வட நாட்டார் அவரை 'இராஜாஜி' என்றே அழைக்க

லாயினர்; சீக்கிரத்தில் தென்னாட்டிலும் அப்பெயர் பரவி நிலைபெற்றது.

கயை காங்கிரஸ் முடிந்த பிறகு, நாட்டில் சட்ட சபைகளைக் கைப்பற்ற வேண்டிப் பெரும் பிரசாரம் நடைபெற்றது. சித்தரஞ்சன தாஸர் தமிழ் நாட்டிலும் சுற்றுப் பிரயாணம் செய்தார்.

இரண்டு ஆண்டுகள் கழித்து, மகாத்மா காந்தி யடிகள் விடுதலை யடைந்தார்; நாட்டின் நிலையைக் கண்டு வருந்தினர். "சட்டசபைக்குச் செல்ல விரும்பு வோர் செல்லலாம்" என்று அனுமதி யளித்தார். "மற்றவர்கள் நாட்டுக்குகந்த நிர்மாண வேலைகளில் தொண்டாற்ற வேண்டும்" என்று பணித்தார். இராஜாஜி அன்றுமுதல் கிராம மக்களின் முன் னேற்றமே பெரிதென்று கருதி நிர்மாணத் திட்டப் படித் தொண்டாற்றுவதில் ஈடுபடலானர்.

---

10. இந்திய உரிமைப் போராட்டம்

ஏழை பங்காளன்

"துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை." —குறள்.

காந்திஜியின் போர் வகைகளில் நிர்மாணத் திட்டம் முக்கியமானது; மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, அவர்களது சுகதுக்கங்களில் ஈடுபட்டு அவர்களுக்குச் சேவை புரிவதன் மூலம் பொருளாதார முன்னேற்றத்துக்கு வழி கோலுவது மட்டுமன்றி, அரசியல் சுதந்திரத்தைப் பெறப் போராட்டம் தொடங்குவதற்கும் அதை ஒரு சாதன

மாக வகுத்தார் மகாத்மா. சட்டசபை புக வேண்டுமென்ற விருப்பம் நாட்டுத் தலைவர்களில் பெரும்பாலோரிடையே அதிதீவிரமாகப் பரவவே, தம்முடைய தர்மத்தைப் பின்பற்றக் கூடிய பக்குவம் நாட்டில் ஏற்படும் வரை நிர்மாண வேலையில் கவனத்தைச் செலுத்த காந்திஜி முடிவு செய்தார்; அங்ஙனமே செய்யுமாறு நாட்டின் பல பாகங்களிலும் உள்ள தமது சீடர்களுக்கும் ஆணையிட்டார்.

அந்த உத்தரவைச் சிரமேற்றாங்கிப் பணிபுரிய இராஜாஜி உறுதி கொண்டார். 1904-ம் வருஷம் முதல் 1930-ம் வருஷம் வரையில் இந்த வேலையிலேயே அவர்" முனைந்திருந்தார். **நிர்மாணத் திட்டம் என்பது கதரைப் பரப்புதல், தீண்டாமையை ஒழித்தல், மதுவிலக்கு, இந்து-முஸ்லீம் ஒற்றுமையை வளர்த்தல், தேசியக் கல்வியைப் பெருக்கு**தல் முதலிய அம்சங்களைக் கொண்டது. ஏற்கனவே வட நாட்டில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த **காந்தி சேவா சங்கம்** என்ற ஸ்தாபனத்தின் துணையைக் கொண்டு ஒரு வகையில் முன்னமேயே தாம் ஒருவாறு



காந்தி ஆச்சிரமத்தில் இராஜாஜி வசித்துவந்த குடிசை

ஜனசேவை செய்து பழக்கமுள்ள இடமாகிய தமது ஜில்லாவிலேயே நிர்மாண வேலையில் இறங்கினார் இராஜாஜி. சேலம் ஜில்லாவில் திருச்செங்கோடு என்பது ஒரு தாலுகா. இந்தத் தாலுகாவில் சங்ககிரி ஸ்டேஷனுக்குச் சுமார் 5 மைல் தூரத்திலுள்ள **புதுப்பாளையம்** என்ற கிராமத்தைத் தேர்ந்தெடுத்தார். அங்கு "**காந்தி ஆச்சிரமம்**" ஒன்றை நிறுவினர். இது 1924-ஆம் வருஷத்தில் நடந்தது.

அடக்கமாகவும் ஆடம்பரமின்றியும், உண்மையாகவும் உள்ளத் தூய்மையுடனும் ஊர் நலனுக்காக உழைப்பதில் இராஜாஜி எவ்வளவு தேர்ந்தவர் என்பதை அடுத்த சில வருஷங்களில் நாடு அறிந்தது. பங்களாவில் சுகபோகத்துடனும், விசேஷ செளகரியங்களுடனும், படாடோபத்துடனும் வாழ்க்கை நடத்திய அவர், ஏழைகளுக்கும் தமக்கும் எவ்வித வித்தியாசமும் காட்டாமல் தொண்டருக்குத் தொண்டராயிருந்து குடிசையில் வாழ்வை நடத்திக் குடிமக்களின் நன்மையில் தம் கருத்தைத் திருப்பினர்.

ஆச்சிரமம் ஆற்றிய பணியில் விசேஷமானது கதர்த் தொண்டு. சுற்றுப் பக்கத்திலுள்ள கிராமவாசிகளுக்கு இராட்டைகளும் பஞ்சும் ஆச்சிரமம் மூலம் வழங்கப்பட்டன. அவர்கள் நூற்ற நூலை எடுத்துக்கொண்டு, பதிலுக்குப் பஞ்சும், சிறிதளவு பணமும் கொடுக்கப்பட்டது. சுமார் 15 அல்லது 20 மைல் தூரத்தில் இருந்தும் ஜனங்கள் வந்து நூலைக் கொடுத்துப் பஞ்சையும் பணத்தையும் வாங்கிச் சென்றனர். இங்ஙனமாக மக்களின் ஒழிவு நேரம் வீணாகாமல் பயன்படுத்தப்பட்டது. நாட்டிலும் அன்

ணியத் துணியை விலக்கிக் கதரைப் பரப்ப வசதி பிறந்தது.

வேலை திறம்பட நடக்க இராஜாஜிக்கு அவரது சீடர்கள் பலர் உதவி வந்தது குறிப்பிடத்தக்கது. அவரது கடைசிப் புதல்வரான நரசிம்மனும், புதல்வியாகிய லக்ஷ்மியும் இந்தச் சேவையில் தந்தையுடன் தோளுக்குத்தோள் நின்றனர். இப்படியாக ஆச்சிரம சேவை மூலமாகச் சுற்றுப்புற கிராம வாசிகள் அடைந்த நன்மைகள் அளவற்றவை.

ஏழை மக்களின் குடும்பங்களைப் பாழ்படுத்தி வந்த கள் குடியை ஒழிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டு வேலை செய்தார் இராஜாஜி. மதுவிலக்குப் பிரசாரம் மக்களிடையே வேரூன்றி நல்ல பயன் அளித்தது. இதுவரையில் இராஜாஜி செய்து வந்த அரியவேலையை அக் காலத்தில் கலால் கமிஷனராக இருந்த **மாஸ்டர் காட்டரல்** என்னும் ஐரோப்பியர் வெகுவாகப் பாராட்டினர்; ஆச்சிரமத்தைச் சுற்றி இருந்த 37 மதுபானக் கடைகளை மூடிவிடும்படி அவர் உத்தரவிட்டார்.

இந்தச் சமயத்தில்தான் இராஜாஜி "**விமோசனம்**" என்று தமிழில் ஒரு மாதப் பத்திரிகையை நடத்தினர். கள் குடியினின்றும் மக்கள் விடுபட்டு வாழ்வில் மேன்மையடைய வழிகள் யாவை என்பதை இந்தப் பத்திரிகை மூலம் சிறு சிறு கதைகளாகவும், கட்டுரைகளாகவும் எழுதி விளக்கினர். மதுபானத்தின் தீமைகள் நன்கு எடுத்துக் காட்டப் பட்டன. "குடி கெடுக்கும் கள்" என்ற ஒரு சிறு நூலையும் இராஜாஜி வெளியிட்டார்.

மதுவிலக்குத் தொண்டில் இராஜாஜிக்கு இருந்த அளவற்ற ஆர்வத்தை அங்கீகரிக்கும் முறையில் அகில இந்தியப் பிரசாரம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அகில இந்திய மதுவிலக்குச் சங்கத்துக்கும் காங்கிரஸ் மதுவிலக்கு கமிட்டிக்கும் அவர் காரியதரிசியாக இருந்து, மதுவிலக்குப் பிரசாரம் நாடெங்கும் பரவப் பெரும் பாடுபட்டார்.

தீண்டாமையை ஒழிக்க அவர் புரிந்த ஊழியம் கொஞ்சமன்று. ஆச்சிரமத்தைப் பலர் பகிஷ்கரிப்பதாகப் பயமுறுத்தியதையும் பொருட்படுத்தாமல் இரண்டு ஆதித்திராவிடர்களை அவர் ஆசிரமத்தில் தொண்டர்களாகச் சேர்த்துக் கொண்டார். திருப்பதிக்கோயிலில் நுழைந்ததற்காகக் கைதுசெய்யப்பட்டு வழக்குத் தொடுக்கப்பட்ட சில ஆதித்திராவிடர்களுக்காக இராஜாஜி தாமே வழக்கறிஞராக நின்று, திறம்பட வாதித்து, அவர்களை விடுவிக்கும்படி செய்ததும் இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

நிர்மாண வேலையை இணையற்ற முறையில் நடத்தும் ஆற்றல் அவரிடம் மிகுந்திருந்தது நன்கு நிரூபிக்கப்பட்டதால், தமிழ்நாடு கதர் போர்டும், ஹரிஜன சேவா சங்கமும் அவரது முழுப்பொறுப்பில் விடப்பட்டன.

மகாத்மா தண்டி யாத்திரை

சட்டசபைப் பிரவேசத்தை ஆதரித்த தலைவர்கள் அத்திட்டத்தை நடத்தி, அதில் எவ்விதப் பயனும் ஏற்படாததை உணர்ந்தனர்; காந்திஜியின் சத்தியாக்கிரகத் தத்துவத்தின் மகிமையும் அவர்

களுக்குப் புலப்பட்டது. எனவே, சட்டசபை வேலையைக் கைவிடுவதே அறிவுடைமை என்று ஜவாஹரின் தந்தையாகிய பண்டித மோதிலால்நேரு பலமாக வற்புறுத்தினர். இச் சூழ்நிலையில்தான் 1930-ம் ஆண்டில் காங்கிரஸ் மகாசபை லாகூரில் கூடியது. பண்டித ஜவாஹர்லால் தலைமை வகித்தார். மீண்டும் காந்திஜியின் தலைமையை ஏற்று, பரிபூரண சுதந்திரத்துக்காகச் சாத்துவிகச் சட்ட மறுப்பு இயக்கத்தில் குதிப்பதென்று இக் காங்கிரஸில் முடிவு செய்யப்பட்டது. மகாத்மாவின் நெருங்கிய சீடர்களும், அவரது தத்துவத்தில் நம்பிக்கையும் உறுதியும் கொண்டவர்களும் காரியக் கமிட்டியில் அங்கத்தினராயினர்; அவர்களில் இராஜாஜியும் ஒருவராக இருந்தார்.

மனிதருக்கு உப்பு இன்றியமையாதது; கொஞ்சம் கூழும், உப்பும் இருந்தால் ஏழை மக்களின் வாழ்க்கை இனிது கழியும். நம் நாட்டு உணவு முறையில் உப்புக்கு முதலிடம் உண்டு; "உப்பில்லாச் சோறு சப்பென்றிருக்கும்", "உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" என்ற பழமொழிகள் இதனை வலியுறுத்துவனவாம். ஏழைகள் கொடுத்து வாங்க முடியாத விலையில் உப்பு விற்கப்பட்டது கண்டு மகாத்மா மனம் வெதும்பினர்; குறைந்த விலைக்கு மட்டுமன்றி, எங்கெங்குக் கிடைக்கிறதோ அங்கங்கெல்லாம் அதை இலவசமாக ஏழைகள் பெற வசதி வேண்டுமென்று முழக்கினர்; உப்புக்கும் வரி போடப்பட்டிருந்த பிரிட்டிஷ் சர்க்காரின் போக்கை வன்மையாகக் கண்டித்தார். எந்தெந்த இடங்களில் கடற் கரையில் உப்புக் காய்ச்ச வசதி இருக்கிறதோ

அங்கெல்லாம் ஜனங்கள் உப்புக் காய்ச்ச வேண்டு மென்றும் அவர் உத்தரவிட்டார்.

இந்த உப்பு உரிமைப் போரின் முக்கியத்தை யும், விசேஷத்தையும் எல்லோருக்கும் எடுத்துரைப் பதற்காக ஆமதாபாத்தில் உள்ள தம்முடைய "சபர்மதி ஆசிரம"த்திலிருந்து தம்முடைய விசுவா சத்துக்குப் பாத்திரமான சில சீடர்களுடனும், தொண்டர்களுடனும் தாம் கால்நடை யாத்திரையா கப் புறப்பட்டுப் பல மைல் தூரத்துக்கு அப்பா லுள்ள "தண்டி" என்னும் கடற்கரை இடத்துக்குப் போகக் கருதியிருப்பதாகவும், மாகாணங்களிலும் இதே மாதிரி உப்பு உரிமைப் போர்நடக்க வேண் டும் என்றும் மகாத்மா கட்டளையிட்டார். சர்க்கார் உப்பளங்களை முற்றுகையிடவேண்டும் என்பதும் இப்போராட்டத்தின் ஓர் அம்சம். இதை யொட்டி எல்லா மாகாணங்களிலும் உப்பு உரிமைப் போர் நடத்த ஏற்பாடாகியது.

வேதாரண்யம் உப்புப் போர்

தமிழ் நாடு மட்டும் தயங்குமோ? ஆண்டு தோறும் நடக்கும் மாகாண அரசியல் மகாநாடு அந்த ஆண்டில் வேலூரில் கூடியது; அதில் மகாத் மாவின் சட்ட மறுப்புப் போருக்கு ஆதரவு அளிக் கப்பட்டது; இப்போரைத் தமிழகத்தில் நடத்தும் சர்வாதிகாரம் இராஜாஜிக்கு விடப்பட்டது. மாகா ணக் காங்கிரஸ் கமிட்டி தலைவர் பதவியும் இராஜா ஜிக்கே கிடைத்தது.

கூர்ஜரத்தில் உப்பு உரிமைப் போர் தொடங்கி விட்டது; சங்கநாதத்துடனும் சிங்கநாதத்துட

னும் மகாத்மா யாத்திரையாகக் கிளம்பிவிட்டார் ஏழைகளின் உப்புக்காகப் போராட! "சுதந்திரம் கிட்டினாலன்றி மறுபடியும் ஆச்சிரமத்தை மிதிக்க மாட்டேன்" என்று சபதம் பூண்டார். தேசமே கிளர்ந்து எழுந்தது; நாட்டுத் தலைவர்களெல்லாம் போரில் குதித்தனர். உலகமே என்றும் கண்டிராத இப்போராட்டத்தையும், காந்திஜியின் கால் நடை யாத்திரையையும் உலகுக்கு விளக்குவதற்காகச் சகல தேசங்களிலிருந்தும் பத்திரிகைப் பிரதி நிதிகள் வந்திருந்தார்கள்.

தமிழ் நாட்டில் உப்புப் போராட்டத்தை நடத்துவதற்காகத் தஞ்சை ஜில்லாவில் உள்ள வேதாரண்யம் என்ற இடம் தெரிந்தெடுக்கப்பட்டது; வேதாரண்யம் சிறந்த க்ஷேத்திரம்; ஓராண்டுக்கு முன்புதான் இங்குக் கூர்ஜரத்தின் முடிசூடா மன்னராகிய ஸர்தார் வல்லபாய் பட்டேலின் தலைமையில் மாகாண அரசியல் மகாநாடு நடந்தது. திருச்சியிலிருந்து இராஜாஜியும் கோஷ்டியினரும் கால்நடையாக வேதாரண்யத்துக்குப் பிரயாணமாவதென்று தீர்மானிக்கப்பட்டது. 1930-ஆம் வருஷம் ஏப்ரல் 13-ஆம் தேதி இத்தொண்டர் படையின் யாத்திரை ஆரம்பமாயிற்று. பாரதி பாடல்களையும், நாமக்கல் கவிஞர் "கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது" என்று இயற்றியிருந்த போர்க்கோலப் பாட்டையும் பாடிக் கொண்டே குழுவினர் ஊரூராகச் சென்றனர்.

வேதாரண்யத்தில் உப்பளத்தை இராஜாஜி கோஷ்டியினர் முற்றுகையிடப்போகும் செய்தி காட்

டுத் தீப்போல் நாலா திசைகளிலும் பரவியது. சட்ட மறுப்பில் இறங்கியுள்ள இந்தக் கோஷ்டியினருக்குப் பொது ஜனங்கள் எந்த விதத்திலும் உதவிபுரியக் கூடாதென்றும், மீறுவோர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தஞ்சை ஜில்லா கலெக்டர் **மிஸ்டர் தாரன்** உத்தரவிட்டார். ஆனால் இந்தப் பய முறுத்தலுக்கு மக்கள் பணியவில்லை; அவர்களது உள்ளத்திலே பீறிட்டுக்கொண்டு எழுந்தது நாட்டு உணர்ச்சி. வழிநெடுக இராஜாஜிக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் ராஜோபசாரம் நடந்தது; மக் களின் அன்பும் ஆதரவும் ஆசியும் மட்டற்ற அள வில் அவர்களுக்குக் கிடைத்தன.

மேற்படி போர்வீரர்களின் யாத்திரை 15 நாள் நடந்து 28-ந்தேதி வேதாரண்யத்தில் முடிந்தது. கோஷ்டியினர் மறுநாள் உண்ணாவிரதம் இருந்த னர்; தங்கள் காரியத்துக்கு ஆண்டவனின் அருளை வேண்டிப் பிரார்த்தித்தார்கள்; 30-ந்தேதி பதி னைந்து தொண்டர்களுடன் இராஜாஜி கடற் கரையை அடைந்து, உப்புச் சட்டத்தை மீறி, உப்பை அள்ளினார். உடனே அவர் கைதுசெய்யப் பட்டார். உப்புச் சட்டத்தை மீறியதாக அவர்மீது வழக்குத் தொடரப்பட்டு, குற்றம் சாட்டப்பட்டது. காந்திஜியின் தர்மத்தைப் பின்பற்றி இராஜாஜி எதிர்வழக்காடவில்லை. அவர் குற்றவாளி என்று மன்னார்குடி ஸப்டிவிஷனல் மாஜிஸ்திரேட் தீர்மா னித்து, இரண்டு குற்றங்களில் ஒரு குற்றத்துக்காக 200 ரூபாய் அபராதம் அல்லது 3 மாத வெறுங் காவல் என்றும், மற்றொரு குற்றத்துக்காக 6 மாத

வெறுங்காவல் என்றும் ஆக 9 மாத சிறைவாச தண்டனைத் விதித்தார்.

இராஜாஜி சிறை புகுந்ததுடன் உப்பு உரிமைப் போராட்டம் நின்றுவிடவில்லை; பிறகுதான் அது முழு வேகத்துடன் நடைபெற்றது. பல இடங்களிலும் பல்லாயிரக் கணக்கானவர்கள் உப்புச் சட்டத்தை மீறிச் சிறை புகுந்தார்கள்.

காந்தி-இர்வின் உடன்பாடு

போராட்டத்தின் பெருவேகத்தைக் கண்டு பிரமிப்புக் கொண்டார் அக்காலத்தில் வைஸிராயாக இருந்த **இர்வின் பிரபு** தேச மக்களிடம் காந்திஜிக்கும் காங்கிரஸ் மகாசபைக்கும் இருந்த செல்வாக்கை அறிந்தார்; மகாத்மாவைச் சிறையிலிருந்து விடுதலை செய்து, அவருடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார். இதற்கு "**காந்தி-இர்வின் உடன்பாடு**" என்று பெயர். இதன்மூலம் உப்பெடுக்கும் உரிமை ஓரளவில் ஜனங்களுக்குக் கிடைத்தது.

இராஜாஜி சிறையிலிருந்து வெளிவந்த சிறிது காலத்துக்கெல்லாம் மீண்டும் அவசரச் சட்டப்படி கைது செய்யப்பட்டு ஒரு வருஷ சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். இது இராஜாஜியின் மூன்றாவது சிறை வாசம்.

காந்தி-இர்வின் ஒப்பந்தப் பிரகாரம் 1931-ஆம் வருஷம் ஜனவரி 25-ந் தேதி தலைவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டபோது இராஜாஜியும் விடுதலை பெற்றார். ஒப்பந்தப் பிரகாரம் கிடைத்த சில உரிமைகளை அவர் நன்கு பயன்படுத்திக் கொண்டார்;

மதுபானக் கடைகளை மறியல் செய்யும் உரிமை கிடைக்கவே அதை அனுகூலப்படுத்திக் கொள்வதில் அவர் முனைந்தார்; அவரது சலியா உழைப்பினால் தமிழ்நாட்டின் பல இடங்களிலும் கள்ளு சாராயக் கடைகள் மறியல் முனைப்புடன் நடந்தது.

புனா ஒப்பந்தம்

1932-ஆம் வருஷம் மறுபடியும் சட்ட மறுப்புப் போர் ஆரம்பிக்கப்பட்டது; இதில் ஈடுபட்ட இராஜாஜி நான்காவது தடவையாகச் சிறை புகுந்தார். சிறிது காலத்தில் அவர் வெளிவந்தார். இந்து சமூகத்திலிருந்து ஹரிஜனங்களைப் பிரிக்கும் சூழ்ச்சியுடன் "வகுப்புத் தீர்ப்பை" பிரிட்டிஷார் வழங்கினர். அச்சமயம் சிறையிலிருந்த காந்திஜி இச்சூழ்ச்சியை நன்கு உணர்ந்தார்; அநீதி கண்டு அவரது உள்ளம் கொதித்தது. வகுப்புத் தீர்ப்பை பிரிட்டிஷ் சர்க்கார் கைவிடாவிடில், சாகும் வரை தாம் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்தார். உபவாசமும் ஆரம்பமாகிவிட்டது. இராஜாஜி புனாவுக்கு ஓடினார்; உண்ணாவிரதத்தை நிறுத்தி விடும்படி மகாத்மாவை நேரில் கேட்டுக்கொண்டார்; அவருடன் எவ்வளவோ மன்றாடினார்; ஆனால் காந்திஜியின் உறுதியை அசைக்க அவரால் இயலவில்லை.

அதன் பேரில் இந்துத் தலைவர்களையும், ஹரிஜனத் தலைவர்களையும் ஒன்று கூட்டினார்; வகுப்புத் தீர்ப்பு அநீதி குறித்தும், மகாத்மாவின் சபதம் பற்றியும் அனைவரும் மனம் விட்டுப் பேசினர்; காந்திஜியின் மனத்திற்கு உகந்த வகையில் ஓர் ஒப்பந்தம் கண்ட பெருமை இராஜாஜியினுடையதே. இதற்குத்

தான் 'புனு ஒப்பந்தம்' என்று பெயர். இந்த ஒப்பந்தத்தைப் பிரிட்டிஷார் அங்கீகரித்தனர்; மகாத்மாவும் உபவாசத்தை நிறுத்தினர். இந்த ஒப்பந்தத்தின் விளைவாகவே ஹரிஜனங்களுக்கு ஆலயப் பிரவேசம் அளிக்கும் உரிமையில் இராஜாஜியின் மனம் சென்றது; ஒரு மசோதாவும் தோன்றியது.

தேர்தலில் வெற்றிக்கொடி

தமது நுண்ணறிவிலுலும் நிகரற்ற திறமையிலுலும் வக்கீல்தொழிலே இராஜாஜி எவ்வளவு சோபிக்கச்செய்தார் என்பதை முன் ஓர் அத்தியாயத்தில் விவரித்தோம். தேசத்திற்காகத் தம்முடைய சுக வாழ்வையும் சகல போகங்களையும் துறந்து, பரம தியாகியாக மாறி, பலதடவை சிறை நண்ணி, எண்ணற்ற இடர்களுக்குட்பட்டதைப் பின் அறிந்தோம். எளியோர்க்கு எளியவராய், ஏழை பங்காளராய், நிர்மாண வேலையில் நாட்டம் செலுத்திக் குடிகளின் நலன்பெருகக் காந்தி ஆச்சிரம மூலம் புரிந்த சேவையின் மாண்பை மற்ருேர் அத்தியாயத்தில் கண்டோம். இதுவரை புரிந்தபோர்களெல்லாம் நாம் சுதந்திரமாக வாழவும், நம் நாட்டை நாமே ஆளுவதற்காகவுமே நடந்தவை.

ஏறக்குறைய 1935-ஆம் வருஷத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவுக்கு வழங்க முன்வந்த சீர்திருத்தங்கள் மூலமாக மாகாணத் துறையில் ஒருவாறு சுய ஆட்சிக்கு வசதி பிறந்தது. இது சம்பந்தமாக வெளியான இந்திய சர்க்கார் சட்டத்தை இராஜாஜி துருவிப் பார்த்தார்; அதற்கு விரிவான வியாக்கியா

னம் கொண்டு பரிபக்குவத்துடன் நிர்வாகத்தை ஏற்று நடத்தினுல் ஜனங்களுக்கு உண்மையில் சிறிதளவு நன்மை பயக்கலாம் என்பதை ஓர்ந்தார். இந்த நிலையில் சட்ட சபை செல்வதை அழுத்தந் திருத்தமாக எதிர்த்து வந்த அவர் சட்டசபை வேலைத் திட்டத்தை காங்கிரஸ் மேற்கொள்ள வேண்டும் என்று பலமாக வற்புறுத்தினர். "ஈதென்ன விந்தை! பரம காந்தி பக்தரான இராஜாஜி சட்ட சபைப் பித்தராக மாறிவிட்டாரே!" என்று பலர் பேசினர். நிலைமை மாறிவிட்டதை அவர்களுக்கு எல்லாம் இராஜாஜி விளக்கிக் காட்டித் தமது புதிய மனோபாவத்துக்குச் சாதகமாக காந்திஜீயையும், காங்கிரஸையும், நாட்டையும் திருப்பினர்.

அடுத்து வந்த பொதுத் தேர்தலில் அபேஷகர்களை நிறுத்தி, அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்று காங்கிரஸ் தீர்மானித்தது. தமிழ் நாட்டில் தேர்தல் பிரசாரம் பலமாக நடந்தது. இராஜாஜியும், காலஞ்சென்ற திரு எஸ். சத்தியமூர்த்தியும் இந்தப் பிரசாரத்திற்குத் தூண்கள்போல் இருந்து பாடுபட்டனர். ஒரு பக்கம் "ஜஸ்டிஸ்" கட்சிக்காரர்களும், இன்னெரு பக்கம் வைதீக சநாதனிகளும், பிரசாரம் செய்தனர். இந்தப் பிரசாரங்களையெல்லாம் இராஜாஜியும் சத்தியமூர்த்தியும் எதிர்த்துப் பேசி, உண்மை நிலைமையை வாக்காளருக்கு எடுத்துரைத்து, அநேகமாக எல்லாச் சட்டசபை ஸ்தானங்களையும் காங்கிரஸே கைப்பற்ற உதவினர். எதிர்பார்த்ததற்கு மேலாக ஜனப் பிரதிநிதி சபையில் 215 ஸ்தானங்களில் 150-ஐ காங்கிரஸ் கைப்பற்றியது.


காங்கிரஸ் சட்டசபைக் கட்சிக்கு இராஜாஜி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கவர்னர்கள் தங்களுக்குள்ள விசேஷ அதிகாரங்களை உபயோகிப்பதில்லை என்று வாக்குறுதி தந்தால், மந்திரி பதவியைக் காங்கிரஸ்காரர் ஏற்கலாம் என்று காங்கிரஸ் தீர்மானித்தது. இத்தகைய முடிவுக்குவர மூலகாரணமாக இருந்தவர்கள் இராஜாஜியும் சத்தியமூர்த்தியுமே. மேற்படி பிரச்னை தீராமலிருந்த சில மாதங்களில் இடைக்கால மந்திரி சபை ஒன்று பதவி வகித்து வந்தது. கவர்னர்கள் வாக்குறுதி சம்பந்தமாக ஏற்பட்ட அரசியல் நெருக்கடி நீடிக்க சர்க்கார் இஷ்டப்படவில்லை. காங்கிரஸின் பல போராட்டங்களினால் விளைந்த கொடிய அனுபவங்களைப் பார்த்த பிரிட்டிஷ் சர்க்கார் ஓரளவு காங்கிரஸுக்கு விட்டுக் கொடுத்து நாட்டில் அமைதியைக்காண விரும்பினர். மாகாண சுய ஆட்சியில் மந்திரிகளுக்கு உண்டான சுதந்திரத்தில் கவர்னர்கள் ஒரு சிறிதும் தலையிட மாட்டார்கள் என்று பிரிட்டிஷ் சர்க்கார் உறுதி கூறினர். அதன்பின் கவர்னர்களின் அழைப்புக்கு இணங்கிக் காங்கிரஸ்காரர்கள் ஒவ்வொரு மாகாணத்திலும் மந்திரி பதவியை ஏற்றுக்கொண்டனர்.

11. சென்னைப் பிரதமர்

"வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு" —குறள்.

சென்னை மாகாணத்தில் இராஜாஜி மந்திரி சபை அமைத்த தோரணையே தனிப் பெருமையுடன் கூடியது. எல்லாப் பிரிவினருக்கும் மந்திரி சபையில் பிரதிநிதித்வம் கிடைக்க அவர் ஏற்பாடு செய்து தமக்கு உதவியாகப் பத்து மந்திரிகளைத் தெரிந்தெடுத்துக் கொண்டார். கட்சித் தலைவரானதால் அவர் பிரதம மந்திரியாக இருந்தார். இது 1937-ஆம் வருஷம் நடந்தது. நிர்வாகத்துக்கு இராஜாஜி புதியவர்; பெரும்பாலும் சர்க்காரை எதிர்த்து எதிர்த்துப் போராடி அதற்குரிய அனுபவங்களையே பெற்றவர். ஆயினும் அவர் பிரதம மந்திரியாக இருந்த சொற்ப காலத்தில் அதற்கு முன்பு என்றுமே காணாத அவ்வளவு அரிய நிர்வாகத் திறமையைக் காட்டினார். "பஸ்ஸைப் பிடிப்பதற்காக இதுவரை நாம் ஓட்டமாக ஓடினோம்; பிடித்தாய் விட்டது; இனிமேல் கீழே விழாமல் அவரவருடைய ஸ்தானங்களில் ஜாக்கிரதையாகவும், அசையாமலும் உட்காரத் தெரிந்து கொள்ள வேண்டும்; பஸ்ஸில் உட்கார்ந்த பிறகு ஓடுவது பற்றி எண்ணக் கூடாது" என்று சென்னை காங்கிரஸ் மாளிகை மைதானத்தில் நடந்த மந்திரிகள் பாராட்டுக் கூட்டத்தில் பேசுகையில் அவர் சொன்னார். மாறுபட்ட நிலைமையை அறிவுறுத்துவதற்காகச் சொல்லப்பட்ட பொருள் பொதிந்த வார்த்தைகள் இவை.

சர்க்கார் நிர்வாகத்தின் அன்றாடப் போக்கை வெகு கூர்மையாகக் கவனித்து ஒவ்வொரு சில்லரை விஷயங்களிலும் தாமே கவனத்தைச்செலுத்தி அவர்



இராஜாஜி—சென்னைப் பிரதமர்

செய்த சேவையைத் தமிழ் நாட்டினர் மட்டுமன்றி இந்தியா முழுவதும் இன்றும் பாராட்டுகிறது. நிர்வாகத் துறையில் அவர் செய்த, செய்ய உத்தேசித்

திருந்த ஒவ்வொரு காரியத்தையும் வெளி மாகாணங்கள் நன்கு கவனித்து அதே மாதிரி நடக்கலாயின. நிதி இலாகா அவர் வசம் இருந்தது; போலீஸ் நிர்வாகமும் அவருடையதாகவே இருந்தது. தமது முதல் வரவுசெலவுத் திட்டத்தை ஜனப் பிரதிநிதி சபையில் அவர் சமர்ப்பித்தபோது, "நூறு வருஷம் நாம் ஆளுவோம் என்ற நினைப்புடனும், காங்கிரஸ் மேலிடம் ஆக்ஞாபித்தால் இன்றைக்கே பதவியிலிருந்து வெளியேறி விடுவோம் என்ற உறுதியுடனும் பொறுப்பை வகித்து நடத்துவோமாக" என்று அவர் எடுத்துரைத்தது குறிப்பிடத்தக்கது. அவருடைய புத்திக் கூர்மையை ஐ.ஸி.எஸ். அதிகாரிகளும் எதிர்க்கட்சியினரும் பாராட்டினர்.

முக்கிய சட்டங்கள்

இராஜாஜியின் நிர்வாகத்தில் கொண்டுவரப்பட்ட சில சட்டங்கள் மிகவும் முக்கியமானவை. அவற்றில் ஒன்று மதுவிலக்குச் சட்டம். இச்சட்டம் முதன் முதலாகச் சேலம் ஜில்லாவில் அமுலுக்கு வந்தது. மக்களைக் குடிக்க வைத்து, அதற்கு ஆக்கம் அளித்து அதன் மூலமாகச் சர்க்காருக்குக் கிடைத்துவந்த ஏராளமான வருமானத்தைப் "பாவக்காசு" என்று இராஜாஜி குறிப்பிட்டார். இந்தக் குடிக்கேட்டை நிர்வாகத் துறைமூலம் சிறிது சிறிதாக மாகாணத்திலிருந்து ஒழித்துவிட அவர் கங்கணம் பூண்டார். குடி ஒழிப்புக்கு ஏற்கனவே ஒருவாறு தாம் பக்குவப்படுத்தி வைத்திருந்த தமது ஜில்லாவில் அக்குடிப் பேயை மாய்க்க அவர் ஏற்பாடு செய்தார்.

சில மாதங்களில் அந்த ஜில்லாவில் மதுவிலக்குத் திட்டம் வெற்றி பெற்றதால், சித்தூர், கடப்பை என்ற இரு ஜில்லாக்களுக்கும் அது விஸ்தரிக்கப்பட்டது. "மதுவிலக்கு ஏழை மக்களுக்கு அரிய வரப்பிரசாதமாகும்; இப்பொழுது நடப்பது போலவே சட்டம் திறம்பட நடத்தப்பட்டால் விவசாயிகள், தொழிலாளிகள் இவர்களுடைய வாழ்க்கையில் சுபிட்சம் உதயமாகி நிலைத்து நிற்கும் என்று நான் நம்புகிறேன்" என்பது, மதுவிலக்குத் திட்டம் வெற்றி அடைந்ததைக் கண்டு அப்பொழுது சேலம் ஜில்லா கலெக்டராயிருந்த **மிஸ்டர் டிக்ஸன்** தமது அறிக்கையில் வெளியிட்ட கருத்து.

மக்களின் நல்வாழ்வை மனத்திற் கொண்டு இராஜாஜி நிறைவேற்றிய விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தை அடுத்தபடியாகக் குறிப்பிடலாம்; இச்சட்ட மூலம் தங்களை அழித்து வந்த கடன் சுமையினின்றும் விவசாயிகளுக்குச் சிறப்பான நன்மை ஏற்பட்டது.

மதுவிலக்கினால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்வதற்காக இராஜாஜி ஒருபுதிய சாதனத்தைக் கண்டு பிடித்தார். இதுதான் அவர் கொண்டுவந்து நிறைவேற்றிய **விற்பனை வரிச் சட்டம்** என்பது. இது நம் நாட்டிற்குப் புதியது; இந்த வரி எங்கெந்த நாடுகளில் அமுலில் இருக்கிறதோ அதையெல்லாம் இராஜாஜி நன்கு ஆராய்ந்து, நம் நாட்டின் நிலைமைக்கு உகந்த வகையில் வரி விதிப்பு முறையைத் தயாரித்தார். அன்று கண்டுபிடித்துக் கொடுத்த இந்த வருவாய்ச் சாதனம்தான் இன்றும் சர்க்கா

ருக்குப் பற்பல நூதன வகைகளில்வருமானத்தைத் திரட்டித் தந்துகொண்டிருக்கிறது. இராஜாஜியின் நுண்ணிய அறிவிற்கும் தீர்க்கதிருஷ்டிக்கும் இதைக் காட்டிலும் வேறு என்ன சான்று வேண்டும்?

ஆலயப்பிரவேசப்பாதுகாப்புச் சட்டமும், சுகாதாரச் சட்டமும் அந்தந்த இனங்களில் விசேஷமானவை. மதுரையில் வைதிகர்களும் சில சநாதனிகளும் ஆலயப் பிரவேசத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்து, வழக்குகள் தொடர்ந்ததன் மூலமாக ஏற்பட்ட சிக்கலான நிலைமையைச் சமாளிப்பதற்காகவே ஆலயப் பிரவேச பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

பதவியை வெறும் அலங்கார பீடமாக இராஜாஜி எண்ணவில்லை. பொதுஜன சேவையை ஏற்கனவே செய்துவந்த முறையில் நிர்வாக மூலமாக அதற்குப் பலம் கட்டவே அவர் முயன்றார். சர்க்கார் காரியாலய வேலை முறைக்கே அவர் தமது நீதி தவறாத நடத்தையின் மூலம் புதிய மெருகு கொடுத்தார்.

நல்ல காரியங்களைச் செய்வதில் தமக்கு ஏற்பட்ட எதிர்ப்புகளைக்கண்டு அவர் மலைப்புக்கொள்ளவில்லை; மனம் குலையவுமில்லை; தம் மனச்சாட்சிக்கு நன்மையானதெனத் தோன்றியதை எதிர்ப்புக்களையும் பொருட்படுத்தாது உறுதியுடன் செய்து முடித்தார். அக்காலத்தில் தலைகாட்டிய எதிர்ப்புக்களில் ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியும் ஒன்று; உயர்தரப் பாடசாலைகளில் முதல் மூன்று பாரங்களில் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்கியதுதான் இக் கிளர்ச்சியின் முக்கிய காரணம்.

மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரி சபைகள் மூலம் நடந்துவந்த உத்தமமான காரியங்கள் நீடித்து நடக்க ஆண்டவன் அருளவில்லை. 1939-ம் வருஷத்தில் இரண்டாவது உலக மகாயுத்தம் ஆரம்பமாயிற்று. ஜனநாயகத்துக்காகப் பாடுபட்டுவந்த நாடுகள்மீது ஜெர்மனி பாய்ந்தது; மேற்படி நாடுகளின் ஜனநாயகத்தைக் காப்பதாகக்கூறி பிரிட்டன் போரில் இறங்கியது. இதற்கு உதவியாக இருக்க இந்தியாவையும் இழுத்தது; ஜனநாயகத்துக்காகப் போராடும் நாடுகளில் ஒன்றான இந்தியா ஜனநாயகத்தைக் குலைக்கும் பிரிட்டனின் இந்த முயற்சிக்கு ஆதரவு அளிக்க இசையவில்லை. இதுபற்றிப் பிரிட்டிஷ் சர்க்காருக்கும் காங்கிரஸுக்கும் தகராறு ஏற்படவே, தான் இனி மாகாண நிர்வாகத்தில் இருக்க முடியாது எனக் காங்கிரஸ் கூறிவிட்டது; நிலைமையை விளக்கி ஒவ்வொரு மாகாண ஜனப் பிரதிநிதி சபையிலும் தீர்மானங்களை நிறைவேற்றி விட்டுக் காங்கிரஸ் மந்திரி சபைகள் வெளியேறின. அகில இந்திய நடவடிக்கையைத் தழுவிச் சென்னையில் இராஜாஜியின் மந்திரி சபையும் பதவியை விட்டு விலகியது.

12. யுத்தமும் நெருக்கடியும்

“அறிவுடையா ராவ தறிவா ரறிவிலா
ரஃதறி கல்லா தவர்” —குறள்.

இரண்டாவது உலக மகா யுத்தம் 1939-ம் ஆண்டு செப்டம்பர் 3-ந்தேதி ஐரோப்பாவில் ஆரம்பித்தது. பிரிட்டனுக்கு அடிமையாகி, அதனுடன் பிணைக்கப்பட்டு இருந்ததால், இந்தியாவிலும் மேற்படி யுத்தத்

தின் கோரச் சாயை விழுந்தது. யுத்தத்தில் பிரிட்டிஷார் கலந்துகொண்டனர்; மக்களைக் கேளாமலேயே இந்தியாவை யுத்தத்தில் சம்பந்தப்படுத்தினர்; பாதுகாப்பின் பெயரைச் சொல்லி அவர்கள் அப்போது இயற்றிய பல அவசரச் சட்டங்கள் நாட்டில் சீறி நின்றன. அவற்றினல் ஜனங்கள் தங்கள் உயிர் நாடியான உரிமைகளை இழந்தது மட்டுமன்றிப் பல வித இன்னல்களுக்கும் உள்ளாயினர்.

ஜனநாயகம், சுதந்திரம் இவற்றை ஸ்தாபிக்கவே யுத்தம் தொடங்கப்பட்டதாக ஆங்கிலேயர் பறைசாற்றினர். அது கேட்டு இந்திய அரசியல் வாதிகள் வாளாவிருக்கவில்லை. இந்தியாவிலும் யுத்தம் முடிந்த பிறகு ஜனநாயகம் தழைக்க வகை செய்யப்படுமா? சுதந்திரம் வழங்கப்படுமா? பிற நாடுகளின் ஜனநாயகத்துக்காகவும், சுதந்திரத்துக்காகவும் கச்சை கட்டிக்கொண்டு கிளம்பியிருக்கும் பிரிட்டன், இந்தியாவில் அவற்றை முதலில் தோற்றுவிக்க வேண்டாமா என்றெல்லாம் நமது தலைவர்கள் கேட்டனர். காந்திஜி, இராஜாஜி உள்படப் பல அரும் பெருந் தலைவர்களும் வைசிராயைச் சந்தித்து யுத்தத்தினல் நாட்டில் ஏற்பட்டுள்ள சிக்கலான நிலைமையை எடுத்துக் காட்டி, ஜனங்களின் உண்மையான உள்ளக் க்ருத்தை விளக்கினர்; ஏதாவது சரியான பரிகாரம் காணப்பட வேண்டுமென்றும், பிரிட்டனின் பேச்சு செயலாக மாற வேண்டுமென்றும், ஜனங்களிடையே மிகுந்த கொதிப்பு ஏற்பட்டிருக்கிறதென்றும் வைசிராயிடம் அவர்கள் வற்புறுத்தியுரைத்தனர்.

அரசியல் சம்பந்தமான நெருக்கடிகளுக்குப் பரிகாரங்கள் காண்பதில் இராஜாஜி வெகு சமர்த்தர். சிடுக்கு எந்த இடத்தில் ஏற்பட்டிருக்கிறது, அதை எவ்வாறு எடுக்க வேண்டும், எவ்வாறு எடுத்தால் ஊனமில்லாமல் காரியம் கைகூடும், எதிரியின் வாதத்தில் பலவீனமான அம்சம் எது, எந்த இடத்தில் அவனைத் தாக்க வேண்டும் என்பவைகளைத் தக்கவாறு துருவிக் கண்டுபிடித்து, அரிய யோசனைகளை வெளியிடுவதில் அவருக்கு அபாரமான சாதுரியம் உண்டு. இந்தத் திறமை இந்தச் சமயத்தில் காங்கிரஸ் மகாசபைக்குப் பெரிதும் அவசியமாக இருந்ததால் தம்முடைய காரியக் கமிட்டியில் ராம்கார் காங்கிரஸ் ராஷ்டிரபதி இராஜாஜியைச் சேர்த்துக் கொண்டார். இந்தியாவுக்கு மட்டுமன்றி உலகுக்கே அஹிம்ஸா தர்மத்தைப் போதித்த காந்தி மகானுக்கும் அந்த அளவை எட்டிப் பிடிக்காத காங்கிரஸ் மகாசபைத் தலைவருக்கும் யுத்த விஷயமாகச் சில அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டன.

இச்சமயத்தில்தான் 1940-ம் வருஷம் ஜூன் மாதம் 9-ந்தேதி திருநெல்வேலி ஜில்லா அரசியல் மகாநாடு அம்பாசமுத்திரத்தில் நடைபெற்றது. இதன் தலைமைப் பதவி இராஜாஜிக்கு வழங்கப்பட்டது. யுத்தத்தினால் இந்திய அரசியல் வானைக் கவிந்துகொண்டிருந்த மேகங்கள் நீங்கி ஒளி காணத் தம்முடைய பரிகாரத்தை வெளியிட இம்மகாநாட்டை அவர் பயன்படுத்திக் கொண்டார். யுத்தம் நடக்கும் வரையில் எல்லாக் கட்சிகளின் பிரதிநிதிகளும் அடங்கிய தேசீய சர்க்கார் ஒன்றை அமைக்க

வேண்டும் என்பதே அவர் வெளியிட்ட யோசனை. இதைப் பலரும் ஏற்றனர். புனவில் நடந்த காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் இந்த யோசனையைத் தழுவிய தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. நாட்டில் உடனே தேசீய சர்க்காரை அமைக்கப் பிரிட்டன் இணங்கினல் தன்னுடைய அஹிம்சா தர்மக் கொள்கையையும் ஓரளவுக்கு விட்டுக் கொடுத்து யுத்த முயற்சியில் சர்க்காருக்கு ஆதரவு தேடுவதற்குக் காங்கிரஸ் விரும்பும் என்று அத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தத் தீர்மானம் காந்திஜிக்குத் திருப்தியளிக்கவில்லை. அஹிம்சா தர்ம மூர்த்தியாகிய அவர் அந்தத்தர்மத்தினின்று தலைவர்கள் விலகிச் செல்வதைக் காண எங்ஙனம் சகிப்பார்? தமது அபிப்பிராயத்துக்கு அவ்வளவாக மதிப்பு இல்லாததால் அரசியலிலிருந்து அவர் ஒதுங்கிக் கொண்டார். புனவில் செய்யப்பட்ட தீர்மானம் டில்லியில் வலியுறுத்தப்பட்டது. எனினும் பிரிட்டிஷ் சர்க்கார் விட்டுக் கொடுக்கும் சுபாவத்தில் இல்லை; ஆகவே, மேற்படி தீர்மானம் பயனற்றுப் போயிற்று.

மறுபடியும் மகாத்மாவுக்குச் சர்வாதிகாரம் கொடுப்பதென்றும், சர்க்காருடன் போராட்டத்தை ஆரம்பிப்பதென்றும் பம்பாயில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி முடிவு செய்தது. இராஜாஜி மிதவாதப் போக்கில் இறங்கிவிட்டதாகத் தீவிரவாதிகளும் சோஷலிஸ்டுகளும் சொல்லி அவரது மனோபாவத்தை வெறுத்துக் கண்டித்தனர். ஆனல் அவர்களுடைய வாயை அடைக்கவா இராஜாஜிக்குத் தெரி

யாது? தக்கவாறு அவர் அதைச் செய்தார். இராஜாஜியின் போக்குக்குறித்துத் தவறான அபிப்பிராயம் நாட்டில் பரவுவதைக் கண்டு காந்திஜி வருந்தினார். தம்முடைய கருத்தை விளக்கி அவர் "ஹரிஜன்" பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதினார். இராஜாஜி சரியான முறையையே பின்பற்றுவார் என்றும், அவர் மிகவும் பரந்த மனோபாவம் படைத்தவர் என்றும், தமக்கு எது சரியெனத் தோன்றுகிறதோ அதை எதிர்ப்புக்குச் சற்றும் அஞ்சாமல் தைரியமாக எடுத்துச் சொல்பவர் என்றும் அவர் தெரிவித்தார். இக்கடிதத்தில் அடங்கியிருந்த முக்கிய விஷயங்களை அலசிக் காட்டி இராஜாஜி பதில் எழுதினார்.

பத்திரிகைகளில் அவ்வப்பொழுது வைசிராயும் இந்தியா மந்திரியும் வெளியிட்டு வந்த அறிக்கைகளையும் பிரசங்கங்களையும் அவர் சரிவர நிதானித்து, உண்மையை மக்களுக்கு எடுத்துக்காட்டி வந்தார். மற்ற நாடுகளின் சுதந்திரத்துக்காக மனம் கரைவதாக எடுத்துச் சொல்லும் பிரிட்டிஷார், இந்தியாவில் நேர்மாறாக நடந்து கொள்ளும் விபரீதத்தை அவர் சென்ற இடங்களில் எல்லாம், பேசிய கூட்டங்களில் எல்லாம் இடித்துக் காட்டி வந்ததைப் போற்றாதார் இல்லை.

சிரிய பிரசங்கம்

மீண்டும் போரில் இறங்குவதென்று பம்பாயில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தீர்மானித்ததாக முன்பு சொன்னோமல்லவா? அது பற்றிய நடவடிக்கைகளில் மும்முரமாக மகாத்மா ஈடுபட்டார். "தனிப்பட்டவர்களின் சத்தியாக்கிரகம்"

என்று இந்தத் தடவை நடந்த போருக்கு அவர் பெயர் வைத்தார். அதாவது முக்கியமாகப் பொறுக்கி எடுக்கப்பட்ட சிலரே இதில் கலந்து கொள்ள வேண்டும் என்பது அவருடைய ஆணை. பெருவாரியான முறையில், இதற்கு முன்பெல்லாம் நடந்ததுபோல் மகாஜனங்களை இந்தத்தடவை போரில் ஈடுபடுத்த அவர் முற்படாதற்குக் காரணம் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் பிரிட்டிஷ் சர்க்காருக்கும், யுத்தம் காரணமாக ஏற்பட்டுள்ள விளைவுகளை அனுபவித்துவந்த ஜனங்களுக்கும் சங்கடம் உண்டு-பண்ணக் கூடாது என்று விரும்பியதுதான். காங்கிரஸின் ஆட்சேபத்தைப் பிரிட்டிஷாருக்குக் குறிப்பாகக் காட்டினால் போதும் என்று அவர் எண்ணினார்.

மந்திரி பதவி வகித்தவர்கள், சட்டசபைகளில் ஸ்தானம் பெற்றிருந்தவர்கள், பொறுப்புள்ள ஸ்தாபனங்களில் சம்பந்தப்பட்டிருந்தவர்கள் ஆகியோர் சத்தியாக்கிரகப் போரில் இறங்க வேண்டுமென்று மகாத்மா கட்டளையிட்டார். இதை யொட்டி ஒவ்வொரு மாகாணத்திலும் ஏற்பாடுகள் நடந்தன. தமிழ் நாட்டில் போராட்டத்தை நடத்தும் பொறுப்பை இராஜாஜி ஏற்றார். தமது நம்பிக்கைக்கும், விசுவாசத்துக்கும், நட்புக்கும் பாத்திரமான திருச்சி டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் (இப்போது சுகாதார மந்திரியாக இருப்பவர்) முதன் முதலாக சத்தியாக்கிரகம் செய்ய வேண்டும் என்று இராஜாஜி ஏற்பாடு செய்தார். டாக்டர் ராஜனுக்குப் பிற்பாடு பல தலைவர்கள் சிறை புகுந்தனர். இவ்

வாறு பலர் சத்யாக்கிரகம் செய்தானதும் தாமும் சிறை புக இராஜாஜி தயாரானார்.

அவர் சிறை புகுவதற்குச் சில நாட்களுக்கு முன் சென்னை காங்கிரஸ் மாளிகை மைதானத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசினார். நாட்டின் நிலைமையையும், காந்திஜி மிகுந்த சங்கடமான நிலைமையில் போரில் குதிக்கும்படி ஏற்பட்ட நிர்ப்பந்தத்தையும் எல்லோரும் எளிதில் அறியும்படி விளக்கினார். அப் பிரசங்கம் மிக முக்கியமானதாகும்; சரித்திரத்தில் அது சீரிய இடம் பெறும் தன்மையது: "தன்னுடைய சுதந்திரத்தை ஒப்புக்கொள்ளும்படி இந்தியா கேட்டது; அவரவர்களுடைய தேசத்தைப் பற்றி அவரவர்களுக்குக் கவலை; ஆகவே யுத்தம் நடக்கும் இச்சமயத்தில் நம்முடைய தேசத்தை நாம் பாதுகாத்துக்கொள்ள எற்பாடு செய்யும்படி கேட்டோம்; எங்களுடைய சர்க்காரை நாட்டில் ஏற்படுத்துங்கள் என்று சொன்னோம். யுத்தத்துக்கு மக்களைத் திரட்டவேண்டுமானால், அவர்களுடைய ஆதரவைப் பெறவேண்டுமானால், அது அவர்களுடைய ஆதரவுடன் கூடிய சர்க்கார் இருந்தால்தானே முடியும்? நெருக்கடியான சமயமானதால் தேர்தல் கூட இப்போது வேண்டாம்; மத்திய சட்டசபைக்குப் பொறுப்புள்ள ஒரு சர்க்காரை ஏற்படுத்துங்கள் என்று மன்றாடினோம்; இவைகளையெல்லாம் அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. சண்டை யெல்லாம் இங்கிலீஷ் கால்வாயிலேயே நடப்பதாகச் சொல்லுகிறார்கள்; ஏதேதோ கதைகள் பேசுகிறார்கள்; நேரான பதில் கிடையாது; அதனால்தான் இப்

போது போராட்டம் நடக்கிறது. யுத்த விஷயமாகப் ஆங்கிலேயர் நம்மைப் புறக்கணித்துப் பேசுகிறார்கள். நம்மை மனிதர்களாகவே கருதவில்லை; ஆகையால்-தான் எதிர்க்கிறோம். இந்தியாவின் எல்லை ரப்பரைப்போல் கொஞ்சம் கொஞ்சமாக நீண்டு கொண்டே போய் இப்போது இங்கிலீஷ் கால்வாய்க்கு அருகில் சென்றுவிட்டது. அப்படி இங்கிலாந்தும் இந்தியாவும் ஒன்றாகப் போய்விட்டாலும் இந்திய மக்களே பெரும்பான்மையோராக இருக்கின்றனராகையால், இந்தியர்தான் இங்கிலாந்தையும் ஆளும்படியாக இருக்கும்" என்று அவர் பேசினார்.

கோர்ட்டில் கீதை

யுத்த முயற்சியில் ஈடுபடவேண்டாம் என்று மற்றவர்களைக் கேட்டுக்கொள்வது "தனிப்பட்டவர் சத்தியாக்கிரக"த்தின் ஓர் அம்சமாகும். இதையே இராஜாஜி பின்பற்றினார். 1940-ம் ஆண்டு டிஸம்பர் முதல் தேதியன்று அவர் சென்னை மேயருக்கு ஒரு கடிதம் அனுப்பினார். மேயர் யுத்தக் கமிட்டியில் அவர் ஓர் உறுப்பினராக இருந்தார். யுத்த முயற்சியில் கலந்துகொள்ள வேண்டாமென்று இராஜாஜி அவரைக் கேட்டுக்கொண்டார். சிறைக்கு எடுத்துச் செல்ல வேண்டிய சாமான்களைச் சரிப்படுத்திக் கொண்டார்; 3-ந் தேதி காலை அவர் கைது செய்யப்பட்டார்.

உடனே அவர் தமிழ் மக்களுக்கு ஒரு செய்தி விடுத்தார். தாம் வெறும் கனவு காண்பவர் அல்லரென்றும், முரட்டுப் பிடிவாதக்காரர் அல்லர் என்றும், பிரிட்டனிடம் தமக்குத் துவேஷமில்லை என்

றும், இந்தியரைப் பிரிட்டிஷார் மிகவும் கேவலமாக நடத்தி வருகிறார்கள் என்று தாம் திடமாக அபிப்பிராயப் படுவதாகவும், சமாதானத்திற்காக எல்லா முயற்சிகளையும் செய்து சலித்துவிட்டதாகவும், இந்திய மக்கள் மற்ற நாட்டினரைப்போல் சுதந்திரத்துடனும் கௌரவமாகவும் வாழ வேண்டும் என்பதற்காகத் தாம் மகிழ்ச்சியுடன் சிறை செல்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பிரதம மாகாண மாஜிஸ்திரேட் ஜனப் அப்பாஸ் அலி முன்பாக இராஜாஜியின் வழக்கு விசாரணை நடந்தது. கோர்ட்டில் இராஜாஜி நுழைந்ததும் எல்லோரும் எழுந்து நின்று அவருக்கு மரியாதை செலுத்தினர். அவர் உட்காருவதற்கு ஓர் ஆசனம் கொடுக்கப்பட்டது. மாஜிஸ்திரேட்டுக்கு இராஜாஜி வந்தனம் செய்தார்; மாஜிஸ்திரேட்டும் இராஜாஜிக்குப் பதில் வந்தனம் செய்தார்.

சர்க்கார் சார்பில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டதும், "நீங்கள் ஏதாவது சொல்லிக்கொள்ள விரும்புகிறீர்களா?" என்று இராஜாஜியை மாஜிஸ்திரேட் கேட்டார். அதன்பேரில் பின்வரும் தமது வாக்கு மூலத்தை இராஜாஜி வெளியிட்டார்:—

"இந்தியாவிலுள்ள சட்டசபைகளின் அபிப்பிராயம் என்ன என்று கேட்காமலே இந்தியாவைப் பிரிட்டிஷ் சர்க்கார் யுத்தத்தில் இழுத்தனர். யுத்தத் தற்காப்பு பலத்தில் நல்ல நிலைமையில் உள்ள நாடுகள் யுத்த விஷயத்தில் நடுநிலைமை வகிக்கலாம் என்று அந்தந்த நாட்டுக்கு இடம் அளிக்கப்பட்டது. இந்த மாகாணத்தின் பிரதம மந்திரி என்ற

முறையில் நான் அதற்குவழிகாட்டி, அதைத் தலைமை வகித்து நடத்த இருக்கிறேன். 1939-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் இம்மாகாண சட்டசபை ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. நடுநிலைமை வகிக்கும் உரிமையை அத்தீர்மானம் கோரியது. இன்று நான் எதற்காகக்குற்றம் சாட்டப்பட்டிருக்கிறேனே அதே வேண்டுகோளை விடுக்க இந்தியாவுக்கு உரிமை உண்டு என்று அத்தீர்மானம் கூறியது. தீர்மானம் பெரும்பான்மையான ஓட்டுக்களால் நிறைவேறியது; தீர்மானத்துக்குச் சாதகமாக 155 ஓட்டுக்களும், பாதகமாக 22 ஓட்டுக்களும் கிடைத்தன. ஆனல் அந்தத் தீர்மானத்தைச் சர்க்கார் அலட்சியம் செய்திருக்கிறார்கள். சட்டசபை வற்புறுத்திய தீர்மானத்தைப் பின்பற்றும் முறையிலேயே நான் சத்தியாக்கிரகம் புரிந்தேன்.

இந்தியரின் சம்மதத்தைப் பெறாத வரையில் யுத்த முயற்சியில் கலந்துகொள்ள வேண்டாமென்று கோரிக்கை விடுக்க ஒவ்வொரு பிரஜைக்கும் உரிமை உண்டு. அது சட்ட சம்மதமானது என்று உரிமை கொண்டாடுவது என் கடமை. என்மீது உள்ள குற்றச்சாட்டில் காணப்படும் விஷயங்கள் உண்மையானவை என்று ஒப்புக்கொள்கிறேன்."

பின்பு இராஜாஜிமீது மாஜிஸ்திரேட் குற்றப் பத்திரிகையை வாசித்து அவரைப் பார்த்து, "நீங்கள் குற்றவாளியா? இல்லையா?" என்று வினவினர்.

"நான் குற்றவாளிதான்" என்று இராஜாஜி பதில் சொல்லிக் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

இராஜாஜியின் உடல் நிலையைப்பற்றி மாஜிஸ்திரேட் விசாரித்துவிட்டுத் தமது தீர்ப்பைக் கூறினர். மாஜிஸ்திரேட் உணர்ச்சி மேலிட்டவராய்ச் சிறிது நேரம் எதுவும் சொல்ல நா எழாமல் சங்கடப்பட்டார். பிறகு சமாளித்துக்கொண்டு இராஜாஜிக்கு ஒரு வருஷ வெறுங்காவல் தண்டனை விதிப்பதாகத் தீர்ப்பளித்தார். அச்சமயத்தில் அவரது குரல் தழுதழுத்தது; உதடுகள் துடித்தன.

அப்பால் தம்முடைய மனவேதனையை வெளிப்படுத்தும் முறையில் இராஜாஜியைப் பார்த்துச் சில வார்த்தைகள் பேசி, பகவத்கீதையிலிருந்து மூன்று சுலோகங்களை அவர் படித்தார்.*

அவற்றின் பொருள்:

(1) என்னுடைய அவயவங்கள் சோர்ந்து போகின்றன; வாயும் (தொண்டையும்) உலர்ந்து போகிறது; என்னுடைய தேகமும் நடுநடுங்குகிறது; மயிர்க் கூச்சிடுகிறது.

(2) வில்லும் கையிலிருந்து நழுவுகிறது; சரீரத்திலும் தாபம் உண்டாகிறது; மனம் பிரமிக்கின்றது. என்னல் நிற்க முடியவில்லை.

(3) கர்மத்தைச் செய்வதில் மாத்திரமே உனக்கு அதிகாரம் உண்டு; அதன் பலன்களில் உனக்கு அதிகாரமில்லை; ஆகவே கர்மத்தைச் செய்

*(1) ஸீதந்தி மம காத்ராணி, முகம்ச பரிசஷ்யதி
வேபதுஸ்ச சரீரமே, ரோம ஹர்ஷஸ்ச ஜாயதே

(2) காண்டீவம் ஸ்ரம்ஸதே ஹஸ்தா, த்வக்சைவ பரிதஹ்யதே
நச சக்னோம்ய வஸ்தாதும் ப்ரமதீவ ச மே மன:

(3) கர்மண்யே வாதிகா ரஸ்தே, மா பலேஷு கதாசன
மா கர்ம பலஹேது துர்பூர், மாதே ஸங்கோ ஸ்தவ கர்மணி

கையில் பலனை எதிர்பாராதே; கர்மத்தைச் செய்யாமலும் இராதே.

முதல் இரண்டு ஸ்லோகங்களும் மகாபாரத யுத்தத்தின்போது அருச்சுனன் அனுபவித்த நிலைமையைப் பற்றியவை. அந்த நிலைமையிலேயே தாம் இருப்பதாக மாஜிஸ்திரேட் ஜனப் அப்பாஸ் அலி தெரிவித்தார். மூன்றாவது ஸ்லோகம் அருச்சுனனுக்கு ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அருளியது. அந்த உபதேசத்தையே தாம் பின்பற்றி இராஜாஜியைத் தண்டிப்பதில் தமது கடமையைச் செய்வதாக மாஜிஸ்திரேட் குறிப்பிட்டார்.

இராஜாஜியைப் பார்த்து மாஜிஸ்திரேட் "இப்போது தேசத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நீங்கித் தாங்கள் கூடிய சீக்கிரத்தில் விடுதலை பெற்று, வெளிவந்து மீண்டும் பிரதம மந்திரி பதவியை வகித்தால், அதுகண்டு என்னைவிட மகிழ்ச்சி அடைபவர் வேறு எவரும் இருக்கமாட்டார்கள்" என்று கூறித் தம் உள்ளத் துடிப்பை வெளிப்படுத்தினர்.

மாஜிஸ்திரேட் பகர்ந்த இந்த நல்ல வார்த்தைகளையும், அன்பு வசனங்களையும், இராஜாஜி வினயத்துடன் ஏற்று, "என் காரணமாக உங்களுக்குத் தர்ம சங்கடமான நிலைமை ஏற்பட்டதற்காக நான் பெரிதும் வருந்துகிறேன்" என்று சொல்லி வந்தனம் செலுத்தினர். மாஜிஸ்திரேட்டும் பதில் வந்தனம் செய்தார்.

இராஜாஜி வேலூர் சிறைக்குக் கொண்டு போகப்பட்டார். அங்குச் சிலநாள் இருந்ததன்பின் அவரையும், ஏற்கனவே அச்சிறையிலிருந்த மற்

றத் தலைவர்களையும் அதிகாரிகள் திருச்சிச் சிறைக்கு மாற்றினர்.

சிறையிலிருக்கையில் அவர் நாட்டு அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்குப் பரிகாரம் யாது என்பது குறித்து வெகு தீவிரமாக யோசித்து ஒரு தேர்ந்த முடிவுக்கு வந்தார். 1941-ம் ஆண்டு நவம்பர் மாதம் இராஜாஜி விடுதலை பெற்றார்.

தேர்ந்த திட்டம்

சிறையிலிருந்து வெளிவந்ததும், சிறையிலிருந்த போது நாட்டின் நெருக்கடியைத் தீர்க்க என்ன பரிகாரம் காணலாம் என்று தாம் முடிவு செய்தாரோ, அந்த வேலையைத் தொடர்ந்து நடத்துவதில் இராஜாஜி மும்முரமாக ஈடுபட்டார். காலத்துக்கு ஏற்ற மனோபாவத்துடன் காங்கிரஸ் நடந்துகொள்ளாததில் அவருக்குப் பெருவருத்தம் ஏற்பட்டது. **க்ரிப்ஸ் திட்டத்தைக்** காங்கிரஸ் நிராகரித்தது கண்டு அவர் மிக்க சஞ்சலமுற்றார். தூரக்கிழக்குப் பிரதேசத்தில் பிரிட்டிஷ் சர்க்காரின் மிக முக்கிய கடற்படை தளமாக இருந்த **சிங்கப்பூர்** ஆங்கிலேயர் கையிலிருந்து போனதற்குப் பிறகே இந்தியாவில் ஒருமாதிரியான சமாதானத்தை நிலைநாட்டவேண்டும் என்ற நல்லறிவு பிரிட்டனுக்கு உதித்தது.

"யுத்தம் முடிந்தபின் இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து வழங்கப்படும்; பிறகு இந்தியர் இஷ்டப்பட்டால் பிரிட்டனிடமிருந்து பிரிந்துவிடலாம். **இந்திய யூனியன்** ஏற்படுத்தப்படும்; மாகாணங்களும், சமஸ்தானங்களும் இந்த யூனியனில்

சேரலாம்; விரும்பாதவை தனித்தனியே பிரிந்து நிற்கலாம்; மத்திய சர்க்கார் இலாகாக்களில் இராணுவ இலாகாவைத் தவிர, மற்ற எல்லா இலாகாக்களும் இந்தியர் கைக்கு மாற்றப்படும்.'' இவையே **க்ரிப்ஸ் திட்டத்தின்** அம்சங்கள். இந்தத் திட்டத்துடன் இங்கிலாந்திலிருந்து **சர் ஸ்டாபோர்ட் க்ரிப்ஸ்** இந்தியாவுக்குத் தூது வந்தார். காந்திஜி உள்பட எல்லா அரசியல் தலைவர்களையும் அவர் சந்தித்துப் பேசினர். தமது திட்டத்தின் அம்சங்களை அவர் எடுத்துரைத்தார்.

நாட்டில் பல பாகிஸ்தான்கள் ஏற்பட க்ரிப்ஸ் திட்டம் விதை விதைக்கிறது என்று சொல்லி அத்திட்டத்தைக் காங்கிரஸ் தலைவர்கள் நிராகரித்தனர். திட்டத்தைக் காங்கிரஸ் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டுமென்பது இராஜாஜியின் அபிப்பிராயம். பிரிட்டிஷார் பல தோல்விகளை அடைந்து வருவதால் சீக்கிரத்தில் இந்தியாவைப் பாதுகாக்கும் பொறுப்பை இந்தியர் ஏற்க வேண்டி இருக்கும்; இதற்குத் தலைவர்கள் தயாராக வேண்டும் என்பதே இராஜாஜியின் கருத்து. பிரிட்டனின் இராஜதந்திரத்திற் கேற்றவாறு இந்தியத் தலைவர்கள் இராஜதந்திரத்துடன் நடந்துகொள்ளவில்லையே என்ற வருத்தம் அவரது மனத்தைப் பெரிதும் அலைத்தது.

முஸ்லிம்களிடையே ஓரளவு செல்வாக்குக் கொண்டிருந்த **முஸ்லிம் லீக்** என்ற ஸ்தாபனம் தேச நெருக்கடி தீருவதில் ஒரு வகையில் முட்டுக்கட்டையாக இருந்தது. முஸ்லிம்கள் பெரும்பாலாக உள்ள மாகாணங்களைத் தனியே பிரித்துத் தனி நிர்வா

கத்தை ஏற்படுத்தவேண்டும் என்று அது பிடிவாதம் செய்தது. ஹிந்துஸ்தானிலிருந்து பாகிக்கப் படுவதால் **பாகிஸ்தான்** என்று இந்தக் கோரிக்கைக்குப் பெயர். ஆங்கிலேயருடன் சமரசமாகப் போவதற்கு முன்பு காங்கிரஸும் முஸ்லிம் லீகும் சமரசப்பட வேண்டும் என்ற நம்பிக்கை இராஜாஜிக்கு உறுதிப்பட்டது. இந்தப் பாகிஸ்தான் கோரிக்கைக்குக் காங்கிரஸ் இணங்கவேண்டுமென்று அவர் பலமாக வற்புறுத்தினர். இதையொட்டி அவர் ஒரு திட்டம் வகுத்தார். இது இந்தியாவில் ஒரு சிலரிடையேயும், மேனாட்டில் பல அறிவாளிகளிடையேயும் விசேஷப் பாராட்டுதலைப் பெற்றது. இராஜாஜியின் தேர்ந்த அரசியல் ஞானத்தைச் சிலாகிக்காத இராஜதந்திரிகள் இல்லை.

இந்தத் திட்டத்தை விளக்கிப் பொது மக்களின் ஆதரவைத்தேடி இராஜாஜி பலத்த பிரசாரம் செய்தார். நாட்டில் இதற்கு எதிர்ப்பு வலுத்தது. அவர் தேசத்தை காட்டிக் கொடுக்கிறார் என்று கூடப் பலர் சொல்லத் துணிந்தனர். திட்டத்தில் அடங்கியிருந்த பாகிஸ்தான் கோரிக்கையைக் காங்கிரஸ் காரியக் கமிட்டி நிராகரித்தது. எனினும் உறுதி தளராதவராய் இராஜாஜி பிரசாரத்தைத் தொடர்ந்தார். பல தடவை ஜனப் ஜின்னவைச் சந்தித்துப் பேசினர்; ஆனல் பயன் கிட்டவில்லை.

காங்கிரஸ் கட்டுப்பாட்டுக்கு இராஜாஜி விரோதமாக நடக்கிறார் என்ற கூச்சல் வலுத்து, அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று காங்கிரஸ் கமிட்டிகளுக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்

பட்டன. காங்கிரஸைத் தம்முடைய அபிப்பிராயத்துக்குத் திருப்பத் தமக்குப் பூரண சுதந்திரம் உண்டு என்று இராஜாஜி சொல்லிக் காங்கிரஸில் தாம் வகித்து வந்த எல்லாப் பதவிகளையும் ராஜீநாமா செய்தார். காங்கிரஸ்—லீக் சமரசம் ஏற்படுத்தவும், தேசீய சர்க்காரை ஸ்தாபிக்கவும் மாகாணங்களில் நடந்துவந்த கவர்னர்கள் ஆட்சியை ஒழித்து, ஜன சர்க்கார்களை உயிர்ப்பிக்கவும், இந்தியாவைப் பாது காப்பதில் ஜனங்களுக்கும் சர்க்காருக்குமிடையே ஒத்துழைப்புத் தோன்றவும் இராஜாஜி மிகவும் முயன்றார்.

ஆகஸ்டு புரட்சி

க்ரிப்ஸ் திட்டத்தை நிராகரித்த காங்கிரஸ் மீண்டும் சுதந்திரப் போர் முழக்கத்தில் இறங்கியது. ஜனங்களின் நம்பிக்கையை அறவே இழந்துவிட்ட பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவிலிருந்து வெளியேறி விட வேண்டும் என்று வற்புறுத்தி மகாத்மா எழுப்பிய கோஷம் பாரத தேசம் முழுவதும் ஒலிக்க ஆரம்பித்தது. சர்க்கார் வெளியேறு விட்டால், மகாத்மாவின் தலைமையில் அஹிம்ஸா தர்மத்தை அடிப்படையாகக்கொண்டு, சுதந்திரப் போரில் குதிப்பது என்று 1942-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் காங்கிரஸ் தீர்மானித்தது. மறுதினமே காந்திஜீயையும், முக்கியத் தலைவர்களையும் அதிகாரிகள் கைது செய்தனர். இந்த அதிகாரவருக்க அடக்கு முறையானது மாகாணங்களில் எல்லாம் கோரத் தாண்டவம் புரிந்தது. செய்த குற்றம் இன்னது என்று சொல்லப்படாமலும், விசாரணையின்றியும், தலைவர்களும் தொண்

டர்களும் காவலில் வைக்கப்பட்டனர். தேச மக்களி டையே ஏற்பட்ட மனக்கொதிப்புக்கு அளவில்லை. இரயில் தண்டவாளங்களைப் பெயர்ப்பது, போக்கு வரவு சாதனங்களை அறுப்பது, சர்க்கார் கட்டிடங் களுக்குத் தீ வைப்பது, போலீஸ் ஸ்டேஷன்களைக் கொளுத்துவது போன்ற பல புரட்சிச் சம்பவங்களை நாடு கண்டது. மக்களின் இந்த ஆவேச எழுச்சிக் குத்தான் "**ஆகஸ்டு புரட்சி**" என்று பெயர். இக் கொந்தளிப்புக்கிடையே ஒரு சிறிதும் நிதானம் தவ றாமல் தலைவர்களை எப்படியாவது விடுவிக்கவும், தேசீய சர்க்காரை ஏற்படுத்தவும் இராஜாஜி அல் லும் பகலும் ஓயாது உழைத்துவந்தார். இச்சமயத் தில் வேவல் என்ற புதிய வைசிராய் பதவி ஏற்றார். காந்திஜீயை இராஜாஜி சிறையில் கண்டு பேசினார்; ஏற்கனவே செய்துவரும் பிரசாரத்தைத் தொடர்ந்து நடத்த அவரது அங்கீகாரத்தையும் ஒருவாறு பெற் றார்.

உலக மகாயுத்தம் முடிந்து விட்டது. யுத்தம் காரணமாகவும், அதன் விளைவான அரசியல் நெருக் கடி காரணமாகவும் நாட்டில் நெருக்கடிகள் பல ஏற்பட்டன. பிரிட்டிஷ் சர்க்காரிடம் இந்திய மக்கள் நம்பிக்கையை இழந்து விட்டதைப் புதிய வைசிராய் சில மாதங்களில் நன்றாகத் தெரிந்துகொண்டார். இந்நிலைமையில் நிர்வாகத்தை நடத்துவது அவருக்கு வெகு சிரமமாக இருந்தது. ஆகவே, அரசியல் நெருக்கடி தீர ஒரு திட்டத்தைத் தயாரித்து, அதற் குப் பிரிட்டிஷ் சர்க்காரின் அங்கீகாரத்தைப் பெறு வதற்காக அவர் லண்டனுக்கு விரைந்தார்.

அவர் இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்ததும், தமது திட்டத்தை வெளியிட்டார். எல்லா அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் அடங்கிய ஒரு நிருவாக சபையை ஏற்படுத்துவ தென்றும், வைசிராய், சேனாதிபதி இவர்களைத் தவிர, ஏனைய பதவிகள் இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் சரிசமமாகப் பிரித்துக் கொடுக்கப்படும் என்றும் வேவல் திட்டம் கூறியது. திட்டத்தைப் பற்றி விவாதித்து அபிப் பிராயம் வெளியிடுவதற்காகச் சிறையிலிருந்த காங் கிரஸ் தலைவர்கள் விடுவிக்கப்பட்டனர். உடனே நிகழ்ந்த தலைவர்கள் மகாநாட்டில் காங்கிரஸ் தலைவர் களும், காங்கிரஸில் இருந்து விலகி யிருந்த இராஜா ஜியும், முஸ்லிம் லீக் தலைவர் ஜனாப் ஜின்னாவும் கலந்து கொண்டனர். ஏதோ சில சாக்குப் போக்கு களைச் சொல்லித் திட்டத்தை ஏற்க ஜனாப் ஜின்னா மறுத்தார். மகாநாடு பயனுறாமல் போயிற்று.

மறைமுகமான ஒரு வழியில் இந்தியாவுக்கு நல்ல காலம் பிறக்கலாயிற்று. பிரிட்டனில் அதிகா ரத்தில் இருந்த கன்ஸர்வேடிவ்ஸ் என்ற பிற் போக்குப் பிடிவாதக் கட்சியினர் தேர்தலில் முறி யடிக்கப்பட்டனர்; பார்லிமெண்டில் பெருவாரியான ஸ்தானங்களைத் தொழில் கட்சியினர் கைப்பற்றினர். இந்தியாவின் கோரிக்கையில் இக் கட்சியினருக்கு மிகுந்த அனுதாபம் உண்டு. சர்ச்சில் பிரபு விலகி, மிஸ்டர் அட்லி பிரதம மந்திரியானார். காங்கிரஸ் மகா சபைமீது சுமத்தப்பட்டிருந்த தடைகள் நீக்கப்பட் டன. நிலைமை சற்று அனுகூலமாக இருந்தது; இதை அறிந்த இராஜாஜி 1945-ம் வருஷம் ஆகஸ்டு

மாதம் 2-ந் தேதியன்று மறுபடியும் காங்கிரஸில் சேர்ந்தார். சென்னையிலுள்ள **தக்ஷிண பாரத ஹிந்துஸ்தானி பிரசார சபையின்** 25-வது வருஷப் பூர்த்தி விழாவில் தலைமை வகிப்பதற்காக மகாத்மா சென்னைக்கு வந்தார். சென்னை அலுவல்கள் முடிந்ததும் அவர் மதுரை, பழனி முதலிய க்ஷேத்திரங்களுக்குச் சென்றுவிட்டு வர்தா திரும்பினர். திரும்பியதும், தமிழ் நாட்டில் இராஜாஜிக்கு எதிராக ஒரு கோஷ்டி இருப்பதைக் காணத் தமக்கு மிகவும் வருத்தம் ஏற்படுகிறது என்று "**ஹரிஜன்**" பத்திரிகையில் காந்திஜி எழுதினர்.

---

13. பதவிகளும் பணிகளும்

இடைக்கால சர்க்கார்

"பொருள்கருவி காலம் வினையிடனோ டைந்து
மிருடீர வெண்ணிச் செயல்" —குறள்.

தொழிற்கட்சி சர்க்காரின் அறிக்கையைத் தழுவி இந்தியா எங்கும் பொதுத் தேர்தல் நடந்தது. தமிழ் நாட்டில் அபேக்ஷகர்கள் ஜாபிதாவில் இராஜாஜியின் பெயரும் சேர்க்கப்பட்டிருந்தது. இந்த ஜாபிதாவுக்கு மேலிடத்து அங்கீகாரமும் கிடைத்தது. ஆனல் தமக்கெதிராக ஒரு கோஷ்டி கிளர்ச்சி செய்வதைக் கண்ட இராஜாஜி தேர்தலுக்கு நிற்பதிலிருந்து விலகிக் கொண்டார். மாகாண நிர்வாகத் துறையில் மட்டற்ற அனுபவமும், முதிர்ந்த தேர்ச்சியும், நல்ல திறமையும் உடைய இராஜாஜியே மாகாண சட்டசபைக் கட்சித் தலைவராக இருக்க



வேண்டுமென்று மத்திய பார்லிமெண்டரி போர்டார் கருதி, அவரையே தேர்ந்தெடுக்கும்படி கட்டளையிட்டனர். கட்சியினரில் பெரும்பாலோர் இந்த யோசனையை ஏற்கவில்லை. எனவே, இம்மாகாண அரசியலில் இராஜாஜிக்கு எவ்வித அந்தஸ்தும் இல்லாமல் போயிற்று.

சிறந்த விவேகியும், அரசியல் நிபுணருமான அவருடைய சேவையைச் சென்னை மாகாணம் இழந்துவிட்டது. இதில் மாகாணத்துக்குத்தான் கஷ்டம். இராஜாஜியைப் போன்ற சாமர்த்தியசாலி இம்மாகாணத்தில் இல்லையே என்ற ஏக்கம் பொது மக்களிடையே பரவியது. பிற்பாடு ஏற்பட்ட மாகாண நிகழ்ச்சிகளினால் இது தெரிய வந்தது. சென்னை மாகாணத்தின் அரசியலில் இராஜாஜிக்கு இடங் கிடைக்காமற் போனதைக் கண்ட காங்கிரஸ் மேலிடத்தார் மனம் வருந்திக் காரியக் கமிட்டியில் அவருக்கு ஸ்தானம் கொடுத்து, அவரது அரிய சேவையையும் தீர்க்காலோசனையையும் பயன்படுத்திக் கொண்டனர். 1946-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 2-ம் தேதி காங்கிரஸின் கட்டளைக்கு இணங்க 12 பேர் கொண்ட **தேசீய சர்க்காரைப் பண்டித ஜவாஹர்லால் நேரு** அமைத்தார். இந்த இடைக்கால சர்க்காரில் இராஜாஜிக்கு இடம் கிடைத்தது. இது நிற்க **அரசியல் நிர்ணய சபை** சம்பந்தமாக நடந்த தேர்தலில் காங்கிரஸ் கலந்துகொண்டது. மற்றக் கட்சிகளைச் சேர்ந்த அரசியல் நிபுணர்களையும் அபேக்ஷகர்களாகக் காங்கிரஸ் நிறுத்தியது. நம் மாகாணத்தில் நடந்த தேர்தலில் இராஜாஜி வெற்றி பெற்றார். சிறிதுகாலம் கழித்து இடைக்கால சர்க்காரில்

முஸ்லிம் லீகும் சேர்ந்துகொண்டது; ஆனால் கூட்டுப் பொறுப்பாக வேலை செய்யவில்லை.

அரசியல் நிர்ணய சபை பாபு ராஜேந்திர பிரஸாத் தலைமையில் கூடி லக்ஷியத் தீர்மானத்தை நிறைவேற்றியது. இந்தியா குடியரசாகவே இருக்கும் என்று மேற்படி சபை பிரகடனம் செய்தது. இடைக்கால சர்க்காரில் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்த முஸ்லிம் லீக் கட்சியினர் அரசியல் நிர்ணய சபையிலும் சேர்ந்து உழைக்க வேண்டும் என்று பண்டித நேரு கூறினார்; இப்படிச் செய்யா விடில் இடைக்கால சர்க்காரிலிருந்து அவர்கள் வெளியேறிவிட வேண்டும் என்று அவர் அழுத்தந் திருத்தமாகத் தெரிவித்தார்.

நிலைமையின் சிக்கலைப் பிரிட்டிஷ் சர்க்கார் அறிந்தனர். 1948-ம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் எல்லா அதிகாரங்களையும் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு மத்திய சர்க்காரிடமோ, அல்லது மத்திய மாகாண சர்க்கார்களிடமோ மாற்றிவிட்டுப் பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவிலிருந்து வெளியேறி விடுவர் என்று அறிவிக்கப்பட்டது. இந்த அதிகார மாற்ற வேலையை நடத்தும் பொறுப்பு மவுண்ட் பேட்டன் பிரபு என்ற புது வைசிராயிடம் ஒப் படைக்கப்பட்டது. கால கெடுவுக்கு முன்ன தாகவே அதிகாரத்தை இந்தியர் வசம் மாற்றிவிடப் புதிய வைசிராய் ஆவல் கொண்டார். சுதந்திரத்தில் இந்தியருக்கிருந்த ஆர்வத்தை அவர் நன்கு அறிந்து, மேற்படி அதிகார மாற்றம் சம்பந்தமாகத் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

1947-ம் ஆண்டு ஆகஸ்டு 15-ம் தேதி அதிகார மாற்றம் பூர்த்தியாகியது. இந்தத் தினத்தை சுதந்திர தினமாக நாடெங்கும் மக்கள் கொண்டாடினர். அன்றே நாடானது யூனியன் அரசாங்கத்துக்கு உள்பட்ட பிரதேச மென்றும், பாகிஸ்தான் சர்க்காருக்கு உட்பட்ட பிரதேசமென்றும் பிரிக்கப்பட்டது. இதற்குச் சில மாதங்களுக்கு முன்னர் நாட்டில் பல இடங்களில் வகுப்புக் கலவரங்களும், படுகொலைகளும் நடந்ததால் பாகிஸ்தானை ஏற்றாலாவது இந்தக் கொடிய நிகழ்ச்சிகளுக்கு முடிவு ஏற்படலாம் என்று எண்ணியே காங்கிரஸ் தலைவர்கள் நாடு துண்டாடப்படுவதை ஒப்புக்கொண்டனர். இப்படியாக இடைக்கால சர்க்கார் அமைப்பிலும் சரி, பாகிஸ்தான் பிரச்சினையிலும் சரி, தீர்க்க தரிசனத்துடன் இராஜாஜி முன்னதாகவே வெளியிட்ட யோசனைகளைத்தான் நாடு ஒப்புக்கொள்ளும்படியாயிற்று. சிறிது காலத்துக்கு முன்பு இராஜாஜியை எதிர்த்து, அவரது அந்தரங்க சுத்தியில் சந்தேகம் கொண்டிருந்தவர்கள் கூட அவரது இராஜதந்திரத்தையும், புத்தி நுட்பத்தையும் வியந்து பாராட்டினர்.


கவர்னர் பதவி

இடைக்கால சர்க்காரில் மந்திரி பதவி வகித்த இராஜாஜி சுதந்திரம் ஏற்பட்டதும் மேற்கு வங்காள கவர்னராக நியமிக்கப்பட்டார். அந்தச் சமயத்தில் வங்காளத்தில் வகுப்புப் பேய் தலைவிரித்தாடிக் கொண்டிருந்தது. பல இடங்களில்—முக்கியமாகக் கல்கத்தாவில் ஏற்பட்ட கலவரங்களுக்குக் கங்கு

கரை இல்லை. இவ்வளவு அபாய நிலைமையிலிருந்த மாகாணத்தின் கவர்னர் பதவியை ஏற்க ஒருவரும் முன்வரமாட்டார்கள் என்று எண்ணுவது இயல்பு. கலவரங்களால் மாகாணமே சின்னாபின்னப்பட்டுக் கிடந்தது. வகுப்பு ஒற்றுமையை நிலைநாட்டுவதற் காகச் சரித்திரப் பிரசித்தமான **நவகாளி யாத்திரை**யை மகாத்மா முடித்த சமயம் அது. மகாத்மா அனுதினமும் கால நிலையின் கொடுமையைக் கூடப் பொருட்படுத்தாமல் கால்நடையாகவே கிராமங் கிராமமாகச் சென்று இந்து முஸ்லிம் ஒற்றுமைக் காகப் பேருழியம் புரிந்தார்.

அவர் ஆரம்பித்த வேலையைத் தொடர்ந்து செய்யவல்லவர் அவரது அத்தியந்த சீடரான இராஜாஜியைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்? எந்தச் சங்கடமான நிலைமையையும் சமாளித்துக் கடமையைப் பூர்த்தி செய்துவைக்கத் தம்மால் இயலும் என்ற திட நம்பிக்கை அவருக்கு அபாரமாக உண்டு. ஆதலால் கடமையில் கருத்தைச் செலுத்தின வராய் வங்க கவர்னர் பதவியை ஏற்றார். சில மாதங் களில் எல்லோரது நன்மதிப்பையும் எதிர்பாராத வகையில் பெற்றார். "எங்களுக்கு இராஜாஜி வேண் டாம்" என்று முதலில் பலமாகக் கூச்சலிட்டு எதிர்த்தவர்கள் கூட, தர்ம நியாயத்தைக் கடைப் பிடித்து அவர் நடத்திய நல்லாட்சியைச் சிலாகித்துப் பின்னர் அவர் மாகாணத்தினின்றும் பிரிந்து போகும்படி நேரிட்டபோது அதற்காகப் பெரிதும் வருந்தினர். மேற்கு வங்காள இந்துக்கள் மட்டு மன்றி முஸ்லிம்களும் மைனாரிடி வகுப்பினரும்





இராஜாஜியும், மவுண்ட்பேட்டன் தம்பதிகளும்

பாரபட்சமற்ற முறையில் இராஜாஜி நடத்திய ஆட்சியைப் பாராட்டி, அதற்கு முன்பு என்றும் காணாத இன்பத்தை அனுபவித்தனர்.

கவர்னர் ஜெனரல் மவுண்ட்பேட்டன் பிரபு சொந்தக் காரியமாகச் சீமைக்குப் போயிருந்த போது இராஜாஜியே கவர்னர் ஜெனரலாக இரு வாரங்களுக்கு வேலை பார்த்தார்; பிறகு அவர் மீண்டும் மேற்கு வங்கக் கவர்னராக இருந்தார்.

கவர்னர் ஜெனரல்

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் கடைசிச் சின்னமாக இருந்த மவுண்ட்பேட்டன் பிரபு 1948-ம் வருஷம் ஜூன் மாதம் 21-ந்தேதி தமது பதவியிலிருந்து விலகி இங்கிலாந்துக்குப் பிரயாணமானார். அன்றே நம் நாடு சுதந்திர சகாப்தத்தின் சூரியோதயத்தைக் கண்டது; அன்றே இந்தியரில் ஒருவர் கவர்னர் ஜெனரல் பதவியில் அமர்ந்தார். அவர்-தான் பாரதத்தாயின் ஒப்பற்ற புதல்வரும், தமிழகத்தின் உத்தம புருஷருமான நம் இராஜாஜி. "எங்கள் பாரததேசம் என்று தோள் கொட்டுவோம்" என்ற பாரதியின் வீராவேச வசனத்தைப் பெருமிதத்துடன் நாற்பதுகோடி இந்திய மக்களும் இமயம் முதல் குமரி வரையில் கோஷித்த நன்னாள் அதுவே. தமிழ் நாடு மட்டுமன்று; இந்தியா முழுதுமே அன்று உயர்வு பெற்றது; 'கவர்னர் ஜெனரல்' பதவியும் அன்று முதல் உயர்வெய்தி விளங்குகிறது. ஏன்? திரு சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரியார் அந்த அரியாசனத்தை அலங்கரிப்ப

தால்தான். ஆழ்ந்த அறிஞரும், அளவற்ற ஆற்றல் படைத்தவரும், சிறந்த கர்மயோகியும், தூயோரு மான அவர் அப்பதவியில் வீற்றிருக்கக் காணக் கொடுத்து வைத்துள்ள இக்கால மக்கள் உண்மை யிலேயே பாக்கியசாலிகள். தருமநெறி தவறாது, செங்கோலைச் செவ்வனே ஏந்தி, மக்கள் நலனையே உள்ளத்தில் கொண்டு, நியாயம் பிறழாது, நீதி வழு வாது அவர் ஆட்சி புரிந்து வருவதை இன்று உல கமே போற்றி, உவகையில் பூரித்து நிற்கிறது.

தலைவர் இராஜாஜி தமிழ் மக்களின் மனத்திலே தனியிடம் பெற்றுத் திகழ்பவர். சுதந்திரத்துக்கான அஸ்திவாரத்தை அமைப்பதில் அரிய சேவைகளைச் செய்தவர்; இன்று சுதந்திரக் கட்டிட நிர்மாணத் தில் சீரிய கருத்தும், கூர்ந்த கவனமும் செலுத்து பவர்களில் முக்கியமானவர். **வருமுன் காப்போன்; பெரிய தீர்க்கதரிசி, அரசியல் ஞானி, ராஜதந்திரத்தில் நவீன 'சாணக்கியன்'** என்று பெயர் பெற்றுப் பிரகாசிப்ப வர்; இனிய மொழிகள் பேசி எல்லோரது மனத்தை யும் எளிதில் கவருபவர். ஈகைக்குணம் மிகுந்தவர்; தர்க்க வாதத்தில் இணையற்ற பெருமை படைத்தவர். எதிராளிகளின் வார்த்தைகளைக் கொண்டே அவர் களை மடக்கி வெற்றிகாணும் திறனும், நுண்ணறிவும் கொண்டவர். அவர் பரம தத்துவ ஞானி கூட; மகாத் மாவின் ஒளியை நாட்டில் மங்காமல் காத்துவரும் கண்ணிய சீலர்; புகழுரைகளால் பூரிப்படையாதவர்; இகழப்படுகையில் நெஞ்சம் உடையாதவர்; பலலை எண்ணாது உழைக்கும் பெரியார். அவரை **அஜாத சத்ரு** என்னலாம்; அவரைப் பாரத தேசத்தின்



இராஜாஜியின் குடும்பப் படம்

பழம்பெரு முனி சிரேஷ்டர்களின் கோஷ்டியில் சேர்க்கலாம்; அவரை வசிஷ்டர் என்றும், வியாஸர் என்றும், ஜனகர் என்றும் புகழ்ந்து, ஏத்தித் துதிக்கிறோம். இன்று நாட்டில் அமுலில் உள்ள அரசியல் அமைப்பில் உயர்ந்த பீடம் கவர்னர் ஜெனரல்தான். இதைத்தான் அவருக்கு அளித்திருக்கிறோம். அவர் நீடூழி வாழ இறைவனைப் பிரார்த்திப்போம்; அவரது நற்சேவையின் பயனை இன்னல்கள் நீங்கி, இனிய வாழ்வு பொங்க அருளுமாறு ஈசனை இறைஞ்சுவோம்.

இலக்கியப் பணி

திரு இராஜகோபாலாசாரியாரின் ஆங்கிலப் புலமை பற்றி முன் அத்தியாயங்களில் ஆங்காங்குச் சிறிதளவில் கூறப்பட்டது. தமிழ் மொழியிலும் அவருக்கு சிறந்த ஞானம் உண்டு; தமிழ் மொழி செழித்து ஓங்கவேண்டுமென்பதிலும், "தேமதுரத் தமிழ் ஓசை உலகெலாம் பரவும் வகை செய்ய வேண்டும்" என்பதிலும் அவர் அளவிலா ஆர்வம் கொண்டவர். தமிழில் நன்றாகப் பேசுவார்; எழுதுவார்; சின்னஞ் சிறிய சொற்களுடன் கூடிய அவரது தமிழ்ப் பிரசங்கங்கள் கேட்கக் கேட்கத் திகட்டாதவை. யாருக்காகப் பேசுகிறோம், எழுதுகிறோம் என்பதை ஆய்ந்தறிந்து, தக்கவாறு அதைச் செய்பவர். அளவு கடந்து பேசமாட்டார்; பேச வேண்டிய அளவைக் குறைக்கமாட்டார். பக்குவம் தெரிந்து, பொறுப்பை உணர்ந்து, காலத்தை அளந்து, உபமானங்களைக் கையாண்டு சுவாரஸ்ய

மாகப் பேசக் கூடியவர். கேட்பவருக்குக் கசப்புத் தட்டாமல் பேசுபவர். கஷ்டமான பிரச்னைகளேயும் சிக்கலான விஷயங்களேயும் எல்லோரும் எளிதில் புரிந்துகொள்ளும்படி விளக்கிக் கூறுவதில் மிகவும் வல்லவர்.

தமிழில் பல புத்தகங்கள் எழுதித் தமிழ் அன்னே யின் பாத கமலங்களில் காணிக்கை சமர்ப்பித்திருக் கிருர். "ஸோக்ரதர்" என்பது இவர் முதல் முத லாக எழுதிய நூல்களில் விசேஷ இடம் பெற்றிருக் கிறது. "குட்டிக் கதைகள்", "கண்ணன் காட்டிய வழி", "மார்க் அரேலியஸ் ஆத்ம சிந்தனே", "உபநிஷத் பல கணி", "குடி கெடுக்கும் கள்", "சிசு பரிபாலனம்", "தாவரங்களின் இல்லறம்", "அபேத வாதம்", "தமிழில் வருமா?" ஆகிய அவரது நூல்கள் இன்றும் தமிழ் மக்களால் போற்றப்பட்டு வருகின்றன. அவ்வப் போது பத்திரிகைகளுக்கு அவர் எழுதி வந்திருக் கும், எழுதிவரும் தமிழ்க் கட்டுரைகளும், சிறு கதைகளும் அனந்தம். தமிழ் நூல்கள் தவிர, தமிழ் வேதமான திருக்குறளின் மாண்பை உலகுக்கெல் லாம் விளக்கிக் காட்ட வேண்டி அதற்கு ஆங்கிலத் தில் மொழிபெயர்ப்பொன்றையும் அவர் வரைந்துள் ளார். தமிழ்மொழி மறுமலர்ச்சித்துறையில் இராஜா ஜிக்கு உன்னத ஸ்தானம் உண்டு. அவரது தமிழ்ப் பணி மேன்மேலும் செழித்து வளர ஈசன் அருள் புரிக.

கட்டுரைப் பயிற்சி

பின்வரும் பொருள்கள்பற்றி இரண்டு பக்க அளவில் கட்டுரை வரைக :—

1. இராஜாஜியின் இளமைப் பருவம்.

2. இராஜாஜியின் பொதுநலப் பணிகள்.

3. சேலம் நகரசபைத் தலைவராயிருந்தபோது இராஜாஜி புரிந்த நன்மைகள்.

4. இராஜாஜியும் இந்திய உரிமைப் போராட்டமும்.

5. இராஜாஜி சென்னைப் பிரதமராயிருந்த போது செய்த நன்மைகள்.

6. இராஜாஜியின் குணநலங்கள்.

7. இராஜாஜியின் அரசியல் தொண்டுகள்.

———